# Part III
# இரண்டாம் பருவம் (Semester 2)
# DAY 29

திருச்செந்தூர் தன்னில் திருமா லங்கேயிருக்க
விருச்சமுள்ள நீசன் வேசைநசு ராணியவன்
வையங்க ளெல்லாம் வரம்பழித்து மாநீசன்
நெய்யதியச் சான்றோர்கள் நெறியெல் லாங்குலைத்துப்
பேரழித்துத் தர்மம் பெருமையெல்லாந் தானழித்தான்
மார்வரை யேகூடும் மைப்புரசு சஞ்சுவம்போல்
தான மழித்துச் சான்றோரின் கட்டழித்து
ஈனகுலச் சாதிகட்கு ஈடாக்கித் தான்கொடுத்துப்
பள்பறைய நீசனுக்குப் பவளத்தேர் தான்கொடுத்துக்
கள்பறைய சாதிகட்குக் காலமிகக் கொடுத்துச்
சாதி வரம்பு தானழித்து மாநீசன்
மூதி முன்னீசன் மும்முடி யுந்தவிர்த்து
நவ்வா முடியெனவே நாடியவன் நாடாகவேதான்
எவ்வோ ரறிய இவன்தேசந் தானாக்கி
பிரித்து இறையைப் பிச்சாதனுப் பெனவே
விரித்து வுரைத்து வெண்ணீச னானவனும்
ஆனபரி கூட்டி அவன்நடந்து போயினனே
ஈனகலி ராசன் இவன் சட்டமும் மாற்றி
ஆளாகமுன் னீசனையும் அவனைநா டாளவைத்துப்
பாழாக நீசன் பழையசட்ட முமாற்றி
நீசன் நவ்வாவின் நினைவுபோல் சட்டமிட்டுத்
தேசமெல்லாம் நவ்வா செய்தானே சட்டமது
மானம் வரம்பு மகிமைகெட்டுச் சான்றோர்கள்
ஈன மடைந்து இருக்கின்ற வேளையிலே

## தேவர் முறையம்

தேவர்க ளெல்லாம் திருச்செந்தூர் சென்றேகி
மூவரொரு மித்தனுக்கு முறையிட்டா ரம்மானை
ஆதி முதற்பொருளே அய்யாநா ராயணரே
சோதியே யெங்கள் துயரமெல்லாந் தீருமையா
இத்தனை நாளும் இருந்தோமொரு மானுவமாய்க்
கொற்றவரே நாங்களினிக் குடியிருக்கப் போகாது
சாதிக்கட்டை யெல்லாம் தலையழித்து மாநீசன்
மேதினிக ளெல்லாம் மேவினா னையாவே
தான மழிந்தாச்சே தம்பியர்கள் சான்றோரின்
மான மழிந்தாச்சே வரம்பெல்லாங் கெட்டாச்சே
பூப்பியமுங் குலைத்துப் புரசியோ டொப்பமிட்டுக்
காப்பிலிய னேதுவினால் கட்டழிந்தார் சான்றோர்கள்
இத்தனை நாளும் யாங்கள்முறை யிட்டதுபோல்

புத்தி தனில்வைத்தால் பொறுக்கஇனிக் கூடாதே
தம்பி சான்றோர்கள் சங்கடத்தைக் கேளாமல்
சம்பி முகம்வாடித் தலைகவிழ்ந் திருப்பதென்ன
மக்களு டதுயரம் மனதிரங்கிப் பாராமல்
பக்கமாய் நீரும் பாரா திருப்பதென்ன
சான்றோர் படுந்துயரம் தானிரங்கிப் பாராமல்
ஆண்டோரே நீரும் அயர்ந்தே யிருப்பதென்ன
இதெல்லா மெங்களைநீர் ஏற்றசான் றோர்பிறப்பாய்
முதலெல்லாஞ் சான்றோருள் முடிந்துவைத்த கண்ணியினால்
பாவியந் தநீசன் படுத்துந் துயரமெல்லாம்
தாவிக் கயிலை சத்தி சிவன்வரைக்கும்
பொறுக்கமிகக் கூடலையே புண்ணிய அய்யாவே
மறுக்க மதைப்பாரும் மனதிரங்கி யெங்களுக்கு
உகத்துக் குகங்கள் ஊழியங்கள் செய்ததெல்லாம்
அகற்றி யருள்தந்த அச்சுதரும் நீரல்லவோ
மக்களா யெங்களையும் வலங்கைவுய்யோர் தாமாக
ஒக்குறவு கெட்டோன் உலகில் படைத்திருந்தால்
இத்தனை பாடும் எங்களுக் கென்றேதான்
புத்திரரா யெங்களையும் பூமிதனில் பெற்றுவைத்து
நாங்கள் படும்பாடு நாரணரே கண்டிலையோ
தாங்களுக்கு நெஞ்சம் சற்று மிரங்கலையோ
இப்படியே தேவர் எல்லோரு முறையமிட
அப்படியே முறையமிட்டு அவரங்கே நிற்கையிலே

விளக்கம்:

வெண்ணீசன் ஆட்சி

இனி மேலே பார்த்த புனல்ரிசி என்பவர் வளர்த்த. கொக்கு என்ற பிள்ளையாகிய வெண்ணீசன் என்பவன் கலி நீச மன்னனிடம் போரில் தோற்று போய் செங்கோமட்டி நாட்டில் இருந்தான் அல்லவா? அவன் செல்வ செழிப்பாக வளர்ந்து ஆல விருட்சம் போல் வளர்ந்து பெருகிய நிலையில் இருந்தான். செங்கோமட்டி நாட்டில் தாசி குலத்தில் திருமணம் செய்து கொண்டவன், இவ்வுலகத்தில் இருந்த அறநெறிகளை எல்லாம் அழித்து தன்னுடைய விருப்பம் போல், நீதி கெட்டு வாழ்ந்த மாபாவியாக இருந்தான். ஒழுக்கமாக வாழ்ந்து வந்த சான்றோர் மக்களை நீதியோடு வாழவிடாமல் நெறித்தவறிப்போக செய்தான். இப்போது அவர்களுக்கு கெட்ட பெயரை உருவாக்கி தர்ம நீதியை கெடுத்து, அவர்களை பெருமை இழந்து போகும் படி செய்தான் கலிநீசன்.

பெண்குல தெய்வங்களை, மாதர் குலமாணிக்கங்களை கற்பில் சிறந்த கண்மணிகளை மேலாடை அணியவிடாமல் மார்பு வரையே உடை உடுக்க செய்து களங்க படுத்தி , தர்மநெறி இழந்தவர்கள் போன்ற நிலையை ஏற்படுத்தினான். தான தர்மங்கள் எல்லாம் இழக்க செய்து மக்கள் ஒழுக்க கட்டுப்பாடுகள் எல்லாம் அழிந்துப் போகும் படியாக உருவாக்கினான். அதுமட்டுமல்லாமல் சான்றோர் மக்களுக்கு குறைந்த வேலைகளை செய்யும் கீழ்சாதி என்ற பெயரையும் கொடுத்தான்.

[ கி.பி. 1730 ஆம் ஆண்டு கொ. ஆ. 905 ல் தீண்டதகாதவர் பட்டியலில் சேர்க்கப்பட்டது.]

பள்ளர் பறையர்களில் உள்ள அடியாட்களுக்கு பவளத்தால் அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டிகள் பரிசாக கொடுத்து அரண்மனையில் முக்கியமான வேலைகளை கொடுத்து அவர்களை கௌரவித்து அவனது வசப்படுத்தி கொண்டான். வரும் விதியறியாமல் வெண்ணீசன் மேல்ஜாதி, கீழ்ஜாதி என்கிற ஒழுங்குமுறைகளை எல்லாம் தலைக்கீழாக மாற்றினான்.

நவாப் என்ற முஸ்லீம் மன்னனை கேரள ஆட்சிக்கு கீழ் கொண்டு வந்து, அவனை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, முஸ்லீம் ஆட்சி நடத்தி வந்தான். ஆனால் நவாப் தந்திரமாக ஐம்பத்தாறு தேசத்து மக்களும் அறிந்து கொள்ளும்படி தன்னுடைய சொந்த நாடு போல் ஆக்கி கொண்டான். நவாப் கபடமாய் சூழ்ச்சி செய்து தனக்கு சாதகமாக்கி கொண்டு, மன்னன் என்கிற பெயரில் நாட்டை ஆளும்படி வேடிக்கை பார்த்தான். ஆனால் வெண்ணீசன் வம்புக்காகவே, பழைய சட்டங்களை மாற்றி விட்டு புதிய சட்டம் கொண்டு வந்தான்.

புதிதாக நாட்டை அபகரிக்க வந்த நவாப் மன்னனின் ஆசைக்கு இணங்கி, அதற்கு ஏற்றது போல் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் சூழ்ச்சிக்கார நவாப், வெண்ணீசனுடைய நாட்டை தன்னுடைய சொந்த நாடு போல் ஆக்கி சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டான். ஆனால் மானத்தோடு வாழ்ந்த சான்றோர்களின் வாழ்க்கையானது தான், சீர்குலைந்து, ஒழுக்க முறைகளும், கட்டுப்பாடும் இல்லாமல் போனது. நீதியும் நேர்மையும் இழந்தார்கள் மக்கள். சான்றோர் மக்கள் தாழ்த்தப்பட்ட நிலையில் தாங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை தேவர்கள் அறிந்தார்கள்.

## தேவர்கள் அபயம்

சான்றோர்களின் துயரத்தை அறிந்த தேவாதி தேவர்கள் எல்லோரும் திருச்செந்தூருக்கு சென்று, அங்கு பள்ளி கொண்டிருந்த உலகளந்த திருமாலிடம் சான்றோர்களின் அவல நிலையைப் பற்றிக் கூறினார்கள். முப்பொருளும் ஒரு பொருளாய் வருகின்ற பரம்பொருளிடம், முதன்முதலாக உலகத்தில் தோன்றிய ஆதி பரம்பொருளே! எல்லோருக்கும் தந்தையாக இருந்து பாதுகாக்கும் நாராயணரே! எங்கும் நிறைந்து ஒளிமயமாய் இருப்பவரே! எங்களுடைய பாவங்களை எல்லாம் தீர்க்க வேண்டும் அய்யா! இவ்வளவு காலமும் எப்படியோ ஒரு விதத்தில் பொறுமையோடு வாழ்ந்து பல கஷ்டங்களை எல்லாம் கடந்து வந்துவிட்டோம் அய்யா! முடிசூடும் பெருமாளே! எங்களால் இனி பூலோகத்தில் குடியிருக்க முடியாது.

சாதி முறைகளை எல்லாம் தலைகீழாக மாற்றி தத்தளிக்க செய்துவிட்டான். அந்த வெண்ணீசனுடைய ஆதிக்கம் வேகமாக தீ போல் பரவி கொண்டே இருக்கிறது. எங்களுடைய உடன்பிறப்புகள் ஆகிய சான்றோர்கள் நற்கதி இழந்து நிற்கிறார்கள். தேவர்களாகிய எங்களுக்கு சமமான தெய்வப் பிறவிகள் சான்றோர்கள். ஆனால் இப்போது வாழ்க்கையில் இன்பத்தை இழந்து நிற்கிறார்கள்.

கன்னிமார்கள் வயிற்றில் பிறந்த புனிதம் எல்லாம் சீர்குலைக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இனத்தோடு சேர்க்கப்பட்டு தவித்து போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு மதிப்புமிக்க தெய்வ சான்றோர்கள் என்று பெயர். ஆனால் பாதுகாப்புக்கு அருகதையற்றவர்கள் ஆனார்கள். தெய்வ நீதம் இழந்தார்கள். இவர்களை என்ன செய்வது, நாங்கள் வீணாக சொல்வதாக நினைக்க வேண்டாம்.

சமயம் பார்த்து சாதிக்கலாம் என்று இருப்பது ஆகாத செயல். "நாடாள்வார்" என்ற பெயரை பெற்ற சான்றோரின் துயரம் பார்க்க பொறுக்குதில்லை. சான்றோரின் நிலையை கண்டு கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் என்ன? கலியனால் சான்றோர்கள் படும் துயரம் உமது கண்களுக்கு தெரியவில்லையா அய்யா? அவர்களின் அபய குரல் காதில் விழவில்லையா? அல்லது எல்லாம் அறிந்தும் கண்களை மூடிக்கொண்டு பொய்யான நித்திரையில் இருப்பது முறையா? சான்றோர்கள் படும் துயரம் கண்டு கருணையும் காட்டாமல் இருப்பதன் காரணம் தான் என்ன? சொல்ல வேண்டும் அய்யா? என்று கேட்டார்கள் தேவர்கள்.

தெய்வத்தன்மை வாய்ந்த சான்றோர்கள் படுபாவிகளால் படும் பாடுகளை ஏன் என்று கேட்காமல் மௌனம் சாதிப்பது எதற்காக? தேவர்களாகிய எங்கள் வாரிசு ஆனவர்களை கன்னிமார் வயிற்றில் பிறக்க செய்தது பூலோக கொடுமைகளை அனுபவிக்க தானா? இதிலிருந்து விடுபட வழியே இல்லையா? இருள் நீங்கும் மார்க்கம் ஏதும் இல்லையா? புது வாழ்வு கிடைக்காதா? புண்ணிய மூர்த்தியே! வாயை திறக்க வேண்டும் அய்யா! பூலோக மக்களின் துயரம் இங்கிருந்து கைலாயம் வரைப் பரவி உள்ளதே! பார்வதியும், பரமசிவனும் இந்த அவல நிலையை கண்டு தாங்க முடியாமல் தவித்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த வருத்தமான நிலையை கண்ணோக்கி பாரும் அய்யா! என்று பணிந்து வேண்டினார்கள். மேலும் தேவர்களின் மனம் மன அமைதி அடையாததாலும், அய்யா அவர்களுக்கு ஆறுதல் கூறாததாலும், நிம்மதி இல்லாத தேவர்கள் அய்யா!, நாங்கள் அறிந்தும், அறியாமலும் செய்த தவறுகளை எல்லாம் மன்னித்து, நாங்கள் நேர்மையோடு பணிவிடைகள் செய்வதை மறக்கவேண்டாம். நாங்கள் பூலோகத்தில் பிறப்பு எடுக்கச் சக்தியை தந்த மூலமான “அச்சே” நீர் அல்லவா! அய்யா! எங்களை பூலோக மக்களாய் படைத்து, எங்களை உயர்குலத்தவர்களான "வலங்கையர்" என்ற பெயர் பெற்று சிறந்து விளங்கும் படிச் செய்தவரல்லவா?

ஆனால் இப்போது ஒழுக்கமில்லாத கேடுகெட்ட நீசன் வாழும் உலகில் பிறவிச் செய்ததால் எங்களுக்கு இந்த இழி நிலை வந்துள்ளது அய்யா! நாங்கள் இந்த பூவுலகில் பிறவி எடுத்தது, வாழ்க்கையில் துன்பமும், துயரமும் அனுபவிக்கவா? எங்களை பிறவி செய்தீர் அய்யா! அதிலும் உம்முடைய பிள்ளைகளாய், தகப்பன் உறவு ஏற்படுத்தி பூலோகத்தில் பிறக்க வைத்து நாங்களும் பிறந்தோம். இதுவரையிலும் நாங்கள் அனுபவித்த துயரங்கள் போதாதா நாராயணரே! கண் திறந்து பாரும் அய்யா! இனி எங்களால் தாங்க முடியாது. அனுபவிக்கக்கூடாத துன்பங்களை அனுபவித்து கடந்து வந்த போதும்

நெஞ்சம் உருகவில்லையா என்று மிகவும் வருத்தம் கொண்டு தேவர்கள் எல்லோரும் மனமுருகி அய்யாவிடம் அவருடைய திருவாய் மொழிக்காக வேண்டி நின்றார்கள்.

*************

# DAY 30

## அம்மை உமை இரங்கல்

நல்ல உமைதிருவும் நன்றா யெழுந்தருளி
வல்ல பொருளான வாய்த்தநா ராயணரின்
அடியி லவள்வீழ்ந்து அழுதுகரைந் தேதுரைப்பாள்
முடியுமடி யில்லா முதலே முதற்பொருளே
அரிஹரிநா ராயணரே அண்ணரே அச்சுதரே
கரிஹரிநா ராயணரே கண்ணரே கார்வண்ணரே
இலச்சைகெட்ட பாவி ஏமாளிக் கலியதினால்
அலச்சல்செய் தெங்களையும் அகற்றிவைத்துப் போனீரோ
பாவிக் கலியனுட பழிசாபச் சூட்சியினால்
பூவில் மண்டுகம் பொசித்துதே காரணரே
கலியனுட ஏதுவினால் கபாலியும் மைத்துனரும்
சலிவாகி மேனி சடல மிகத்திமிர்த்து
இருள்மூடிக் கண்கவிழ்ந்து இருக்கிறா ரீசுரரும்
உருவு சுவடில்லை உம்முடைய மைத்துனரும்
நின்னயமில் லாக்கலியன் நீசன் பிறந்ததினால்
என்னோடே பேச்சு இல்லையும் மைத்துனரும்
வானுறவு கெட்ட மாநீசன்வந்த நாள்முதலாய்
நானும்பர மேசுரரும் நலநஷ்டமுந் தெரியோம்
பேசிப் பழக்கமிட்டுப் பெருத்தநா ளுண்டுமண்ணே
தோசிக் கலியனுட சூட்சியினால் நாங்கள்படும்
பாட்டைவந்து பாராமல் பரிகாசம் பார்ப்பதென்ன
நாட்டைக் கெடுத்தானே நன்றிகெட்ட மாநீசன்
அல்லாமல் நம்முடைய அருமைச்சான் றோர்கள்படும்
பொல்லாங்கை யெல்லாம் போய்ப்பார்க்க எழுந்தருளும்
வரமீறியக் கலியன் மாய்கையி னேதுவினால்
பிரமன் பிறப்புப் பிசகித் தலைமாறி
முண்டம்போல் பிறப்பு முகங்கண்ணில் லாப்பிறவி
பிண்டப் பிறவி பேருறுப் பில்லாப்பிறவி
தலையுடம் பில்லாத சடலப் பிறவியைப்போல்
நிலைதவறி வேதா நினைவுதடு மாறினனே
சீவன் கொடுக்கும் சிவனுக் கிருநினைவாய்ப்
பாவக் குணவுயிராய்ப் பகர்ந்தார் சிவனாரும்
படியளக்க நீரும் பண்புற் றிருக்காமல்
குடிகேடு மாச்சே குடிக்கக் கிடையாமல்
இத்தனை யுங்கலியன் ஏதுவால் வம்பாச்சே

அத்தனையும் நீர்தான் அறியாதவர் போலே
எங்கள்மேல் பகைபோல் இருப்பதென்ன அச்சுதரே
சங்கடங்க ளெல்லாம் தான்சொல்லக் கூடாது
கயிலை சிவனார் காணாம லும்மையுந்தான்
அகிலமதைப் பாராமல் அயர்ந்திருக்கி றாரெனவே
ஆனதா லென்னுடைய அண்ணரே அங்கேகி
மானமுள்ள புத்தியும் மைத்துனர்க்குச் சொல்வாரும்
என்றுமையா ளிப்படியே இன்பமாய்ச் சொல்லிடவே
அன்று பெருமாள் அவள்முகம்பார்த் தேதுரைப்பார்
சிவனாரும் நீயும் தேசமதி லில்லாட்டால்
எவனுக்கு மலைச்சல் இல்லையே ராச்சியத்தில்
உங்களால் யானும் உகத்துக் குகங்கிடந்து
சங்கடங்க ளூற்றுத் தவிக்கத் தலைவிதிதான்
நீங்களில்லை யானால் எனக்கும் அலைச்சலில்லை
ஏனுங்க ளோடே இப்பாடு யான்படத்தான்
செய்யோ என்தலையில் மேவி எழுதினானோ
அயோத்தியா பட்டணத்தில் அரசுண்டு மென்றனக்குக்
கையேற்று வந்த கன்னி திருவுமுண்டு
ஐயோ நீஎன் தங்கையராய் ஆதியிலே பிறந்த்தினால்
ஏனிந்தப் பாடு யான்படக் காரணந்தான்
மானமுதாற் போலே மறுகுவாள் லட்சுமியும்
கைப்பிடித்த நாள்முதலாய்க் கலந்துவிளை யாடறியேன்
மெய்ப்பிடித்த மான மெல்லியரு மங்கிருக்க
இரப்பனைப் போல்லோகம் எல்லாந் திரிந்தலையப்
பரப்பிரம னம்மைப் படைத்ததுமி தற்கோவென
என்று சடைவாய் எம்பெருமாளும் உரைத்து
அன்னு பெருமாள் அருளுவார் தங்கையுடன்
நான்பட்ட பாட்டை நாடிஉன்னோடு உரைக்கையிலே
என்னோடு உரைத்தாயே ஈசர்படும் பாட்டையெல்லாம்
எல்லையில்லாப் பாடு யான்பட்ட துபோதும்
நல்லகுலச் சான்றோரை நான்பெற்று வைத்தேனே
வைத்த தெல்லோரும் மனதறியப் பார்த்திருக்க
பொய்த்தலைவ னீசனையும் பிறவிசெய்ய ஞாயமுண்டோ
நீசனுட கையதிலே நின்மக்கள் தங்களையும்
பாசக் கயிறிட்டுப் பந்தடிக்கச் செய்தாரே
தொட்டாலும் நீசம் தொடருமதைக் கண்டாலும்
வெட்டா வெளியாய் விரட்டிப் பிடிக்குமல்லோ
காதிலதைக் கேட்டாலும் கர்மம்வந்து சிக்குமல்லோ
ஆரிந்த நீசனையும் அழிக்கவகை யாரறிவார்
மாய்கை நினைவொழிய மறுநினைவு வாராதே
மோசக் கலியனையும் முடிக்கவகை யாரறிவார்
வாளா யுதத்தாலே மாளானே மாகலியன்
தூளாம் பிறவி சொல்லொணா வல்லமைதான்
முப்பிறவி யாறும் முடித்த வலுமையெல்லாம்
இப்பிறவி தன்னில் எட்டிலொன்று பாரமில்லை
உகத்துக் குகம்பிறந்து ஓடித்திரிந் தவனென்றே

அகத்துக்கொஞ்சம் வைய்யாமல் அவர்மூப்பாய்ச் செய்தாரே
ஆனதா லின்னமினி அங்குவர வேணுமோகாண்
தானம்வைத்துப் பாராமல் சங்கை யழித்தாரே
எங்கே யானாலும் இறந்திடுவே னானிதற்குச்
சங்கையுள்ள சாணார்க்குத் தங்குமிடம் வேறிலையே
தாய்தந்தை யில்லாமல் தயங்குகின்ற பிள்ளையைப்போல்
மாயக் கலியனினால் வாடுவரே சான்றோர்கள்
தகப்பனில்லாப் பிள்ளை சாணார்க ளென்றுசொல்லி
அகப்படுத்திச் சான்றோரை அடிப்பானே மாநீசன்
தாயுந் தவமிருந்து சடைப்பாளெனைக் காணாமல்
ஆயுங் கலைதெரிந்த ஆயிளையும் வாடுவளே
இப்படியே ஞாயம் இருப்பதா லென்றனக்கு
அப்படியே வேறு வழியல்லவே யானதினால்
எங்கினிப் போவேன் என்றெண்ணுது என்மனது
உங்களுட ஊருக்கு ஒண்ணுதலே போநீயெனக்
கோபத்தால் தங்கையுடன் கூறினா ரித்தனையும்
வேகத்தா லம்மை விழியிட் டழுதனளே
கயிலைக்கு நீர்தான் கால்வைக்கா தேயிருந்தால்
அகிலம தொன்றாய் அழியு மொருநொடியில்
நல்லகுலச் சான்றோர் நாடுங் கலியனினால்
தொல்லைமிகப் பட்டுத் துயருற்று வாடுவரே
நானுமென்றன் ஈசுரரும் நல்ல கயிலையிலே
மானுங் கலைபோல் மறுகி யிருப்போமே
கயிலை முனிதேவர் கட்டழிந்து வாடுவரே
மயிலனைய ஈசர்சொல்லை மறந்து மிருந்தாரே
கன்னிப்பெண் ணார்களென் கற்பனையைத் தான்மறந்து
உன்னுதலாய்ப் பெண்கள் ஒருவர்க்கோர் மூப்பாச்சே
ஐயோ கயிலை அங்கே வரம்பழிந்து
பையரவம் பூணும் பரமன்மௌ னமாச்சே
அண்ணரே கோவே அடியாள் தனக்கிரங்கி
எண்ணமில்லாக் கயிலைக்கு எழுந்தருள வேணுமையா
என்று அறம்வளர்த்தாள் இறங்கியண்ணர் கால்தனையும்
சென்று பிடித்துச் செய்யத்தாள் தான்வணங்கி
மனதிரங்கி எம்பெருமாள் மார்போடு தங்கையரைத்
தனதில் பிரியமுற்றுத் தங்கையரோ டேதுரைப்பார்

விளக்கம்:
அம்மை உமை இரங்கல்

தேவர்கள் மனக்குறைகளை நாராயணரிடம் சொல்லி வணங்கி நிற்கின்ற வேளை, அன்னை பார்வதி, சக்தி தேவியாக வந்து சான்றோர்களின் குறைகளை கூறும் விதமாக திருமாலின் திருவடி பணிந்தாள். மக்கள் துயரங்களை மாயவன் தீர்க்காத வேளைகளில் எல்லாம் தங்கையாகிய சக்திதேவி, அண்ணனாகிய திருமாலிடம் பரிந்து அருள் கேட்டு மக்களுக்கு அருள்பாலிக்க வேண்டி நின்றாள்.

தாய் நிலையிலிருந்து தன்னருள் புரிகின்ற அருள் தெய்வம். அமுதம் அளித்து அருளும் அன்னபூரணி! மக்களிடம் மன இரக்கம் கொண்ட மகமாயி! தூய மனம் கொண்ட பார்வதி தேவி! பூலோக மக்களின் அழுகுரல் கேட்டுத் தூயவரான மாதவனிடம் வந்து சர்வ வல்லமை பொருந்திய மகா சக்திகளை தன்னுள்ளே கொண்ட நாராயண பரம் பொருளின் அருகில் நின்று குறை தீர்க்கும் திருவுருவே! அபயம் காக்க வேண்டும் என்று திருவடிகளில் விழுந்து மன்றாடி வேண்டினாள்.

முதற் பொருளே! ஆதிமூலமே! என் அன்பான அண்ணரே ! செந்தூரில் பாற்கடலில் பள்ளி கொண்ட பச்சை மாலே! அரி ஓம் நமோ நாராயணா! கண்ணான கண்ண பிரானே! காக்கவேண்டும், கார்மேக நீல நிறம் கொண்டவரே கருணை கடலே! காப்பாற்ற வேண்டும் அய்யா! என்று அடிவணங்கி தெண்டனிட்டாள் அம்மை பார்வதி.

நாராயணரை தெண்டனிட்டு, அம்மை நாராயணரே வாழ்க்கை என்றால் என்னவென்று அறியாத அறிவு கெட்ட கலியன், அவன் அழியும் நிலையை எண்ணாமல், நன்னெறி கொண்ட மக்களை கொடுமை செய்து அல்லல் படுத்துவதை பார்க்காமல் ஒதுங்கி தனியாக இருப்பதன் நோக்கம் என்ன? பேராசை கொண்ட கலியன் நல்லாட்சி புரிந்து நன்மைகள் செய்யாமல் , பொல்லாத முறையில் ஆட்சி செய்து பெரும் துன்பம் ஏற்படுத்துகிறான். அவனை அழிக்க தந்திரமாக வந்தீர்.

ஆனால் ஏன் இந்த மவுன நிலையில் இருக்க வேண்டும். இந்த மக்கள் துயரம் தீர என்ன பரிகாரம். இங்கு மக்கள் படும் பாட்டையும் காணாமல் இருக்கிறீர். மேலோகம் ஆகிய கைலாயத்தில் இருக்கின்ற என்பதியாகிய சிவபெருமான், உம்முடைய மைத்துனர் ஆகிய சிவபெருமான், மனம் சலிப்படைந்த நிலையில் மிக வருத்தம் கொண்டு நலிவடைந்த நிலையில் காணப்படுகிறார். கைலாயத்தில் கண்கள் மூடிய நிலையில் இருக்கிறார். கைலாயம் ஒளி இழந்து காணப்படுகிறது. தவமுனிவர்களின் தவநிலை நிலைகளும் சரிவர நடைபெறாததால் கயிலையில் தெய்வ அருளும் மறைந்து காணப்படுகின்றது.

பொய் வாழ்க்கை மீது பேராசை கொண்ட கலியன் உலகத்தை ஆட்கொண்டதால், சதி,பதியாக சந்தோஷமாக இருக்கின்ற நாங்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக பக்தி பரவசத்தில் பேரின்பம் காணமுடியவில்லையே! எனவே உமது மைத்துனரின் மாறுபாடுகள் கலந்த அந்த நிலையை உம்மிடம் எடுத்து சொல்ல வந்தேன் அண்ணரே! மேலும் கலியன் வானலோகத்திற்கு வந்து அங்குள்ள தவநிலைகளை சீரழித்த நாள் முதல் நிம்மதி இல்லாமல் போய்விட்டது. பார்வதியும், சிவனும் ஆக இருந்து தியானித்து இருக்கவும், பரவசத்தில் திளைத்ததிருக்கவும் முடியவில்லை. உலகத்தில் உள்ள பல உயிர்களின் இன்ப, துன்பங்களையும் பகிர்ந்துப் பேசி, இன்பநிலையும் கண்டுப் பல்லாண்டு காலங்கள் ஆகிவிட்டது.

உம்முடைய மைத்துனரின் தங்கத் திருமேனியானது சக்திகளை இழந்தது போல் காணப்படுகிறது. எதையோ இழந்தது போல சஞ்சலப்படுவது போன்ற ஒருவித தவிப்பு தென்படுகின்றது. காரணம் புரியவில்லை எனக்கு என்

அன்பான அண்ணரே! என்று கூறி சிந்தை கலங்கி நின்றான் அம்மை உமை. பாவ தோஷங்களை தீர்க்க வந்த கலியனுடைய வஞ்சக சூழ்ச்சியினால் கைலாயமே புரண்டு போய்விட்டது .

அரகரா மகா தேவா என்ற ஆனந்த கானம் காதில் கேட்கவில்லை. வேதமும் ஓதவில்லை. பூஜையும் பண்ணவில்லை. வேள்வியும் செய்யவில்லை. யாகமும் நடக்கவில்லை. அதனால் கைலாயம் கலையிழந்து காணப்படுகிறது. இப்படியாக கொடுமைகளை தெரிந்தும் நாங்கள் படும் வேதனைகள் அறிந்தும் ஏனென்று பார்க்காமல் வேடிக்கை பார்ப்பது ஏன்? நன்றி இல்லாத நீசனின் செயலால் உலகம் தடுமாறி நிலை குலைந்துப் போனது அண்ணரே!.

அதைக் கண்டு கொள்ளாத காரணம் தான் என்ன? அது மட்டுமல்ல நம்முடைய பிள்ளைகளாகிய ஞான அறிவுள்ள சான்றோர்கள் படும் துயரங்கள் பொறுக்க முடிய வில்லை? பொல்லாத நீசனின் கையில் சிக்கி தவிப்பதை மாற்றி சான்றோர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்றாள் தாய் பார்வதி. சிவபெருமானிடம் பெற்ற வரங்களை எல்லாம் சரியாக பயன்படுத்தாமல் மீறி நடந்தப்படியால் வரத்தின் மாயச் சக்திகளை மாற்றி தவறாக செயல்படுத்தியதாலும் அல்லவா? பிரம்மாவினுடைய படைப்பின் விதிமுறைகளில் பலவிதமான தவறு ஏற்பட்டு, எல்லாமே தலைகீழாக நடந்து கொண்டிருக்கின்றது.

சிவபெருமானிடம் பெற்ற சக்தி வாய்ந்த வரங்களை சரியான முறையில் பயன்படுத்தாத கலிநீசனை அழித்து ஒழிக்க இந்த ஒரு காரணம் போதாதா? கலியன் இன்னும் பல கொடுமைகள் புரிந்தால் எண்ணிக்கையானது கணக்கில் கூடட்டும் என்று, காலம் கடத்துகிறீரோ? அப்படி என்றால் இன்னும் அவதியும், அல்லலும் அடைய வேண்டுமா என்று சொல்லி பார்வதிதேவியார் கலக்கம் கொண்டார்.

மேலும் பார்வதி நான் பேசி கொண்டுதான் இருக்கிறேன் அண்ணே! நான் கேட்டதற்கு எந்த பதிலும் கூறவில்லை. பரிகாரமும் சொல்லவில்லை, என்றால் இது மிகவும் அதிசயமாய் எனக்கு தென்படுகின்றது. அது எப்படி எனக்கு தோன்றுகிறது தெரியுமா? கை, கால்கள் இல்லாத பிண்டம் போன்றப் பிறப்பும், முகத்தில் கண் இல்லாத குருட்டு பிறவியும் போலிருக்கிறது. உடல் ஊனத்தோடு முக்கியமான உறுப்புகள் இல்லாத பிறப்பு போல் இருக்கிறது. காரணம் உடலின் முக்கியமான கை, கால்கள் இல்லாத முண்டத்தினால் எதையுமே செய்ய இயலாது. முகத்தில் கண்கள் இல்லை என்றால் எதையும் பார்க்க முடியாது. உறுப்புகள் இல்லாமல் ஊனம் கொண்ட ஜடமாக இருந்தால் ஏதும் அறியாது அந்த நிலையானது மரணம் அடைந்ததற்கு சமமாகும்.

ஒருவர் சொல்வதை ஒருவர், கேட்டு, அதற்கு பதில் சொல்வதும், கேட்பதும் தான் உத்தமம். என் சொல்லை நீங்களும் கேட்கவில்லை, கொடுமை செய்வதை கலியனும் நிறுத்தவில்லை. நான் கலியன் துன்பம் செய்கிறான் என்று சொல்லியும், தெரிந்தும் பதில் சொல்லாதது சாத்தியமுமில்லை. கலியன் உமது சொல் கேட்காமல் தீமை செய்வது சரியில்லை.

இது போலவே சக்தி உள்ள மாயவனாகிய நீரும் பதில் பேசாமல் கலியன் கொடுமைகள் புரிவதை நிறுத்தாமல் இருந்தால் உயிருள்ள, ஊனம் ஏதுமில்லாத மக்களின் நிலையானது, ஜடம் போன்ற வாழ்க்கை தானா? சான்றோர் கதியும் இது தானா? என படப்படப்பாகவும் மீண்டும் ஆவேசமாய் மாயப்பெருமாளிடம் கூறுவாள், கலியனால் நிலைதடுமாறிய பிரம்மாவும் தன்னுடையப் படைப்புகளில் உள்ள சூத்திரத்தை மறந்து மனநிலை மாறி போய்விட்டது.

பிறவி செய்யப்பட்டு தாய் வயிற்றில் கருப்பையில் வளரும் சிசுவிற்கும், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், படியளக்கும் பரமசிவனவருக்கும் மன குழப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே குழப்பமான நிலையில் இருந்துப் பாவங்களை சுமந்து தீர்க்கிற பாவிகளாகவே உயிர்களை படைத்து பூலோகம் அனுப்பி வைக்கிறார். இது தேவர்களுக்கும், கையலாய வாசிகளுக்கும் ஏற்பட்ட மனக் குழப்பமே காரணம்.

மக்களை பாதுகாத்து அருள் கொடுக்க கூடிய உமக்கும் குழப்பம் ஏற்பட்டு நல்ல மனநிலையில் இல்லாத காரணத்தினால் குடிமக்கள் நிம்மதியாக வாழ முடியாமலும் வறட்சி ஏற்பட்டு, குடிக்க தண்ணீர் இல்லாமலும் அவதிப்படுகின்றனர். இத்தனை காரியங்களுக்கும் காரணம் கலியனுக்கு வரம் கொடுத்தது தான். எல்லாவற்றிற்கும் மூலகாரணம் நீர் தானே? ஒன்றும் தெரியாதது போல் அமைதியாக இருக்கிறீர் என்று பேசினாள் சக்தி தேவி. நான் சொல்வதை கவனிக்காமல் ஏதோ நாங்கள் தவறு செய்துவிட்டது போல் எங்களை எதிரியை பார்ப்பது போல் எண்ணுவது எதனால் பரம்பொருளே!

நாங்கள் இதுவரை அனுபவித்த கஷ்ட காலத்தை பற்றி உண்மை தவிர யாரிடமும் சொல்ல முடியாது என்று பரிதாபமாக கூறினார். கைலாய மலையில் இருக்கின்ற சிவபெருமான் உம்மை காணாத காரணத்தினால் தான் என்னவோ மனம்வாடி போயிருக்கிறார். அண்ட சராசரங்களிலும் என்ன நடக்கிறது என்று பார்க்காமல் சோர்வோடு இருக்கிறார்.

எனவே நீர் மனம் இரங்கி வந்து பாரும். கைலாய நாதரை வந்து பாரும். ஞான அறிவு திறனனுள்ள அண்ணரே! உன்னுடைய தங்கையாகிய எனக்காக கைலாயம் சென்று, என்பதியாகிய சிவனை சாந்தப்படுத்தும். நான் துணை நிற்பேன் என்று மன ஆறுதல் கூற வாரும் என்று அழைத்தார். அப்படியே அம்மை உமையவள் அன்போடு இன்பமாக நாராயணரை கைலாயம் போக அழைத்தாள். பார்வதி தேவி கூறியதை எல்லாம் பொறுமையுடன் கேட்டு கொண்டிருந்த, திருமால் பார்வதியிடம் பதில் கூறுகிறார்.

எப்படியென்றால், பரமசிவனாகிய உமது பதியும், நீயும் இந்த உலகில் இல்லாமல் இருந்திருந்தால் இது போன்ற தீமைகள் இந்த உலகில் எவருக்கும் ஏற்பட்டிருக்காது. எல்லோரும் நிம்மதியாக இருக்கலாம். ஏனென்றால் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு தவறான செய்கையால் தான் நான் இந்த உலகில் யுகத்திற்கு யுகம் பூலோகத்தில் அவதரித்து தர்மசங்கடமான சூழ்நிலைகளை அனுபவித்து தவித்து நிற்பது தான் என்னுடைய தலைவிதி என்று நினைக்கிறேன்.

பிரம்மா உயிர்களை படைக்கும் படைப்பு தொழில் தான் புரிகிறார். படைக்கப்பட்ட உயிர்கள் எல்லாம் சிவபெருமான் படியளந்து வளமோடு வாழ வழி வகுத்து கொடுக்கிறார். பூலோகத்தில் பிறப்பு எடுத்தவர்கள் பேராசை கொண்டு கடும் தவம் செய்கிறார்கள். மெய்மறந்து செய்கின்ற தவநிலை உச்சத்தை தொடும் போது சிவபெருமான் மனம் நெகிழ்ந்து, தவத்தை மெச்சி தன்னை மறந்து மூர்க்கர்கள் கேட்கும் வரத்தை மறக்காமல் வழங்குகிறார். சக்தியுள்ள வரத்தை கயவர்கள் வாங்கி சென்று சோதனை பார்க்க சிவபெருமானையே எதிர்க்க துணிந்து, கைலாயம் சென்று கலவரம் செய்கிறார்கள். என் சகோதரியே சொல்வதை கேள்! சிவன் சக்தி வாய்ந்த வரம் கொடுக்கிறார். உன் சக்தியும் வரத்தோடு சேர்கிறது.

வரம் பெற்றவன், உன் பதியாகிய, என் மைத்துணரை எதிர்த்து ஆணவத்தோடு , பேராசை கொண்டு , கைலாசத்தை ஆட்கொள்ள வரும்போது , நான் என் மைத்துணரை காப்பாற்றவே யுகா யுகங்தோறும் அவதரித்து, அரக்கர்களையும், பகைவர்களையும், கொடுமைமிக்க வரப்பலத்தையும் ஒடுக்கி, நீசப் பாவிகளை அழிக்க பாடு படுகிறேன். என் தங்கையாகிய உன்னைக்காப்பாற்றவே, மைத்துணனாகிய சிவப்பெருமானுக்கு துணையாக நின்று அநியாயப் பாவிகளை அழிக்கிறேன் .இப்போது உள்ள கலியின் கொடுமை தலைக்கு மேல் போய் விட்டது.

வழி,வழியாக பிறப்பெடுத்து தவம் புரியும் நீச பாவிகளுக்கு யோசிக்காமல் வரங்களை வாரி வழங்கும் வள்ளல் தான் உன் பதியாகிய சிவபெருமான். நானும் அதை எதிர்த்து போராடி, போராடி அழிப்பவனும் நானே! துன்பப்படும் மக்களின் துன்பங்களை துடைப்பதும் நானே! கலியனுக்கு வரம் கொடுக்க நானா சொன்னேன். ஆகையால் தான், நான் நீங்கள் இருவரும் இல்லாமல் இருந்திருந்தால் எனக்கு எந்த விதமானக் கஷ்டங்களும் ஏற்பட்டு இருக்காது என்று கூறினேன்.

சிவபெருமானை இரங்கிக் கேட்டால் போதும் வரத்தை வாரி கொடுத்து விடுவார் பெற்றவன் எதிர்க்க வரும் போது, வருவதை தடுக்க என்னை அனுப்பி விட்டு, நீ கூறியது போல் பரம சிவன் கைலாயத்தில் தன் கண்களை மூடிக்கொண்டு தன்னை மறந்த நிலையில் இருந்து கொள்வார்கள். தடுத்து போராடி தத்தளிப்பவன் நானல்லவா? வரம்பெற்றவன் பெலத்தையும் , வரத்தையும் , அடக்கி அழிக்க நான் இழிவான நிலையில் அவதிப்படுகிறேன். நான் பட்ட பாடுகளை நிதானமாக சொல்லுகிறேன் தங்கையரே கேள்! என்று தன்னுடைய அனுபவத்தை வேதனையை அம்மை உமையாளிடம் கூறுகிறார். ஏனம்மா தங்கையரே, நான் உங்களுக்காக இத்தனை இடர்பாடுகளை அனுபவித்து துன்பப்பட வேண்டும் சொல்.

நான் அயோத்தியாபுரி பட்டணத்தில் பட்டம் தரித்து முடிசூடி ஆண்டு கொண்டிருந்த மன்னன் நான். கைபிடித்த கன்னியான சீதா லட்சுமி தேவி, என்னை நம்பி மனைவியாக வந்தவள் வைகுண்ட லோகத்தில் தனியாக இருக்கிறாள். அவளுக்குத் துணையாக நான் அங்கு இருக்கவில்லை. அவளை மறந்து இந்த பூலோகத்தில் எதற்காக காலம் காலமாக வந்திருக்க வேண்டும் அதன் தேவைதான் என்ன சொல் காட்டு மான் கூட்டத்திலிருந்து பிரிந்து மருகி,

மருகி நின்று அழுதுக் கண்ணீர் சிந்துவது போல் என்னை பிரிந்து கண்ணீர் சிந்தவா? நான் அவளை கைபிடித்த நாள் முதல் இதுவரையிலும் அன்பாக பேசி அருகிலிருந்து அழைக்கவில்லை. ஆறுதல் சொல்லவில்லை, சத்திய வழி தவறாத எனக்கு விருப்பமான பத்தினியாக இருந்தும், அவள் என்னை காணாமல் ஏங்கி தவிப்பது நியாயம் இல்லை.

வைகுண்டத்தில் இருக்கும் அவள் அருகே இருந்து அன்புடன் பேசி ஆதரவளிக்காமல், பிச்சை எடுத்து உண்ணும் ஆண்டிப் பண்டாரத்தை போல உலகம் எங்கும் அலைந்து திரிகின்றது நீதியா? லட்சுமிதேவி என்னை பற்றி என்ன நினைப்பாள். பிரம்ம லோகத்தில் இருக்கின்ற பிரம்ம தேவன் யுகாயுகங்கள் தோறும், கோழைக்குல குறும்பர்கள் ஆனக் கொடிய குணம் கொண்ட அசுரர்கள் மற்றும் அரக்கர்களை பிறவி செய்து அனுப்புவது என்னை அலைய விடத்தானா? நான் அடைந்த இன்னல்களை வரை முறைப்படி கணக்கிட்டு சொல்ல முடியாதபடி பட்ட துன்பங்கள் போதும் என்று நினைக்கின்றேன்.

என்னுடைய பிள்ளைகளான சான்றோர்களை நல்ல குலத்தில் பிறந்தவர்கள் என்று பெற்று பேணி வளர்த்தேனே! என்னுடைய பிள்ளைகள் தான் என்பதை இந்த உலகத்து மக்கள் அனைவரும் தெரிந்து கொண்ட பிறகும் தவறு நடக்கிறதே என்ன செய்வது? என்னால் அதை தடுக்க முடியவில்லையே! அவர்களை அடக்கி ஆட்சி செய்து அடிமைகளாக்க அல்லவா? உன் பதியாகிய சிவன் பிறவி செய்து வரமும் கொடுத்தார்.

கலியனிடம் அடிமை வேலை செய்து கொத்தடிமைகளாக்கவா? வலிமையான வரம் கொடுத்தது, என்ன நியாயம்? கலிநீசனுடைய கைக்குள் அடங்கி போகும்படி செய்து பழி வாங்கவா? இத்தனை வரம் கொடுத்துள்ளார். ஆக்கவரம், அழிக்க வரம், மாயவரம், மந்திர வரம் என்று பலவகையான வரங்களை வாரி கொடுத்துள்ளார். இது நியாயமா பார்வதி? என்னுடைய சான்றோர் குல மக்கள் அத்தனை பேர்களையும், வதை செய்ய கால தேவனிடம் பாச கயிற்றை கொடுத்து உயிரை பிடித்து பந்து போல் எறிந்து விளையாடவா? பிறவி செய்து வைத்தார்.

அவர் தொட்ட காரியங்களும் கொடுத்த வரங்களும் கொடும் விஷத்தன்மை போன்றது. கண் மூடித்தனமாக கலியன் கேட்ட வரமெல்லாம் கொடுத்துவிட்டு, கண் திறந்து பார்க்க கூடாத சூழ்நிலை உருவானவுடன், மறுபடியும் கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடும் தப்பித்து கொள்ளலாம் என்ற எண்ணமோ? தங்கையே! சிவபெருமான் கண்களை மூடிய நிலையில் இருந்தாலும் சரி, திறந்து கொண்டு இருந்தாலும் சரி, மறு பிறவி எடுத்தாலும் தொடர்வது என் செயல் தான். என் மக்களை காப்பாற்றுவதற்கு ஆளில்லாது யாருமே இல்லாது இருப்பதால் விரட்டிப் பிடிக்க நல்ல வசதியாக இருக்கிறது அல்லவா? கலி என்ற வார்த்தையை கேட்டு விட்டால் கூட கர்ம வினை பயனை அனுபவிக்க வேண்டும்.

அவ்வளவு கடுமையானது கலியன் வாங்கிய வரம். அப்படிப்பட்ட வல்லமை கொண்ட வரங்களை பெற்ற வலிமை பெற்ற கலியனை யாராவது

அழித்து கலியுகத்தை முடிக்க வேண்டும் என்று நினைத்து பார்க்கிறார்களா? சொல் பார்ப்போம். மாய்கையில் சிக்கி தவிக்கிறோமே? என்கிற எண்ணத்தை தவிர அதை எப்படி அழிக்க வேண்டும் என்ற சிந்தனை யாருக்காவது உண்டா? பொய் வாழ்க்கை வாழ்ந்து அனைவரையும் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறானே கலியன், அவனை அழிக்க என்ன வழி என்று யாராவது யோசனை செய்கிறார்களா? அதுவும் இல்லை.

மேலும் பார்வதி, மாயப் பெருமாளாகிய என் கையில் இருக்கும் சக்தி உள்ள வஜ்ராயுதம் மற்றும் வலிமை பெற்ற ஆயுதங்களால் கூட கலியனை கொன்று விட முடியாது. அதற்கும் கூட விதி இல்லை. அவ்வளவு பலம் கொண்ட சிவபெருமான் அருளிய வரம். காற்றில் பறந்து வரும் தூசு கூட சமமாகாத பிறப்புதான் கலியன் பிறவி எடுத்தது. அவ்வளவு கீழ்த்தரமான பிறப்பு தான் அவனுக்கு ஏற்பட்டது.

ஆனால் சொல்ல முடியாத அளவு வலிமை பெற்றது, அவனுக்கு சிவபெருமான் கொடுத்த வரம். அதனை யாராலும் அசைக்க முடியாது. கலியனுடைய முற்பிறவிகளாகிய குறோணியின் ஆறு துண்டுகளை பிறவி செய்து அழித்த வலிமையான சக்திகளை எல்லாம் இந்த கலியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், முன்னால் பிறவி செய்த துண்டங்களின் சக்தி இந்த கலியனின் சக்தியில் எட்டில் ஒரு பங்கு கூட இல்லை. மிக பலம் கொண்டது இந்த கலி ஆகும்.

அப்படி இருந்தும், யுகத்திற்கு யுகம் பூலோகத்தில் பிறந்து ஒவ்வொரு இடமாகப் பல அவதாரங்கள் எடுத்து அரக்கர்களை அழித்தேனே! இவனை அழிக்க என்னால் முடியவில்லையே! இது எல்லாம் சிவபெருமான் செயல் தான் இது. உள்ளத்தில் கடுகளவு கூட யோசனை இல்லாமல் யார் எதை கேட்டாலும், கேட்பவர்களுக்கு இல்லை என்று மறக்காமல் அள்ளி கொடுத்தாரே வரத்தை. அதற்கு ஏதாவது பரிகாரம் கூட இருக்கின்றதா எதுவும் இல்லை.

நான் பட்ட பாடு எல்லாம் போதாது என்று, இப்படிப்பட்ட பொல்லா கலியனை படைத்த சிவனை பார்க்க நான் வர வேண்டுமா? சொல் சொந்த மைத்துணன் என்று சிறிதளவு கூட என்னிடம் கருணை காட்டாமல் என்னுடைய கரங்களை அலங்கரித்த கொண்டிருந்த சங்கு சக்கரத்தை கலியனுக்கு கொடுக்க வைத்தார். என்னை விட அவன் சிவனுக்கு உகந்தவனா? அல்லது உறவு முறையா? என்னுடைய சங்கு, சக்கரம் அதன் சக்தியை இழந்தாலும், மாயபெருமானுடைய மாய சக்தியானது என்னிடம் உள்ளது. அதை பயன்படுத்தி அழித்துவிடுவேன் என்றார் மாயபெருமான்.

ஆனால் சங்கடம் நிறைந்து காணப்படுகின்ற என்னுடைய பிள்ளைகள் அவதிப்பட்டு துன்பப்பட்டு கொண்டிருக்கிறார்களே! ஒதுங்கி இருக்கவேண்டும் என்றாலும் கலியன் இல்லாத இடமில்லையே! காப்பாற்றவும் தாய், தந்தை இல்லாமல் அனாதை போல் தீயில் விழுந்து துடிக்கின்ற புழுக்களை போல என் பிள்ளைகள் அவதிப்படுகின்றார்களே! கலியனுடைய கொடுமைகளை தாங்க முடியாமல் காப்பாற்ற கூட ஆள் இல்லை என்று வருந்திவிடுவார்களே சான்றோர்கள் . தட்டி கேட்க தாய், தகப்பன் கூட இல்லாத அனாதைகள் தான் இந்த நாடார் குலமக்கள் என்று குற்றம் சொல்லி கொடுமைகள் செய்வானே!

அடிமை வேலை செய்யும்படி தன்னகப்படுத்தி எனது பிள்ளைகளை வதைப்பானே! சான்றோர்களை பெற்றதாய் சப்த கன்னிமார்கள் என்னை கண்டுபிடிக்க முடியாமல் தவம் செய்து மனம் சலித்து போய் இருக்கிறார்கள். ஆகையால் என் அன்பு தங்கையே, சிவபெருமானை காண வந்தால், செல்வத்திற்கு அதிபதியான வளுமாகிய லட்சுமியும் வைகுண்டத்தில் தனிமையில் இருப்பவளும், நான் அங்கே போக வில்லை என்று வருத்தப்படுவாள் என்று வருந்திய பெருமான் பார்வதியிடம்,

இது போன்ற முக்கியமான நியாயமான காரியங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டி இருப்பதால், நீ அழைப்பதற்காக அங்கு வந்தால் இங்கே கவனிக்க வேறு வழிமுறைகள் இல்லையே! ஆகவே ஒன்றும் செய்ய முடியாமல் ,எங்கே போவது என்று என் மனமானது தடுமாற்றம் கொள்கின்றது. ஆகவே நீ மட்டும் போ என்று அவரது உள்ள கொந்தளிப்பை திருமால் பார்வதியிடம் ஆதிமுதல் அந்தம் வரை கூறினார்.

அதனால் தங்கையரே! இப்போது சிவபெருமானை அமைதிப்படுத்த அவர் அமர்ந்திருக்கின்ற கைலாயத்திற்கு நீ மட்டும் போ என்று பார்வதி தேவியிடம் கூறினார். அண்ணராகிய பச்சைமால் , கைலாயம் வர சம்மதம் தராததால் அம்மை உமையவள் அவள் கண்களில் கண்ணீர் சிந்தி அழுது, சிவந்த தாமரை மலர் மேனி கொண்ட திருமுகத்தில் கண்ணீர் முத்துக்கள் போல் உருண்டு தவழ்ந்தது. அண்ணரே! நீர் கைலைக்கு வந்து உம்முடையப் பொன்னான திருவடிகளை பதிக்காமல் இருந்தால், அகில உலகமும் அடியோடு அழிந்து போய்விடும்.

உம்முடைய பிள்ளைகளாகிய சான்றோர்கள் அவர்கள் சஞ்சரிக்கின்ற நாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு தொந்தரவு தாங்க முடியாமல் துன்பங்களுக்கு ஆளாகி வாழும் வழியறியாமல் சான்றோர் மக்கள் வாடிப்போய் விடுவார்களே! அதுப்போல் தங்கையாகிய நானும் புகழ்பெற்ற கைலாய மலையில் இருந்தாலும், கயவன் விரித்த வலையில் சிக்கி தவிக்கும் ஆண் மானும் பெண் மானும் விடுதலை கிடைக்குமா? என்றுத் துடிப்பது போல நாங்கள் தவிப்பது உமது தமது ஞான அறிவுக்கு எட்டவில்லையா? என்று அழுதுப் புலம்பினாள் பார்வதிதேவி.

மேலும் வெள்ளியங்கிரியில் தவ நிலையில் இருக்கின்ற மனிதர்களும் தேவர்களும் அவர்களின் புனித தன்மையை இழந்து மதிப்பில்லாமல் வாடுகிறார்களே ! தோகை விரித்தாடும் மயில் போல் சுறுசுறுப்பாக மனம் மயங்கும் வகையில் திருநடனம் புரிந்து ஜொலித்து கொண்டு இருக்கின்ற சிவப்பெருமான் வாய் பேசாமல் மௌனமாக இருக்கின்றாரே!

மேலும் தேவலோகத்தில் உள்ள கன்னிபெண்கள் தோஷம் பிடித்து என் திருவடிகளுக்கு சேவையும் புரியாமல் அவரவர் விருப்பப்படி நடந்து, என் பேச்சுக்கு மதிப்பு அளிக்காமல் அவர்களே அதிகாரம் செய்கிறார்கள். இப்படியே அண்ணரே! கயிலாயம் மிகவும் சீர்குலைந்து செயல்படுவதால் அதை மாற்ற மாயவரே! சீக்கிரம் வாரும். கோவிந்த பெருமானே! வைகுண்ட மன்னவரே! அடியவளாகிய உமது தங்கைக்காக மனமிரங்கி, நீர் நினைத்து பார்க்காத கைலைக்கு எழுந்தருள வேண்டும் என்று திருவடிப் பணிந்தாள் பார்வதி தேவி.

பார்வதி தேவி முப்பத்திரண்டு அறச்செயல்களால் போற்றி திருமாலின் மனம் இளக செய்து அவருடைய திருப்பாதம் பற்றி இதமாக மெல்ல வருடி வணங்கி நின்றாள். பார்வதி தேவி பணிந்து, அவள் கண்கள் கலங்கி திருவடிகளை பணிந்து நின்ற நிலையை எம்பெருமான் நாராயணர் கண்டதும், கோபம் தணிந்து தன்னை மறந்து மனம் இரங்கி பரிதாபத்தோடு பார்வதி தேவியின் கையை தன் மார்போடு அணைத்து கொண்டு, என் தங்கையே நான் உன்னோடு பிறந்து இது போன்ற பல துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்பது என் முன் ஜென்ம விதியின் பயன் போலும்.

அப்படி இருந்ததால் தான் என்னவோ சேர்ந்து வாழக்கூடிய விதிப் பலன் இல்லாமல் போய் விட்டது. என் அன்பு தங்கையே! நான் உன்னை காப்பாற்றுவதற்கு ஒவ்வொரு யுகமாக அவதாரம் எடுத்து, என்னுடைய சந்தோஷம் எல்லாம் மறந்து என் வாழ்வை விரக்தி அடைய செய்ய வேண்டும் என்கிற விதி ஆகிவிட்டது என்றார்.

(வாழ்வில் மனிதனுக்கு துன்பம் வந்தால் அதை தடுத்து எதிர் நீச்சல் போட்டு முன்னேறி செயல்பட வேண்டும். உதாரணமாக, ஒருவன் தண்ணீருக்குள் தவறி விழுந்து விட்டால், மூழ்கிவிடாமல் தன்னை காப்பாற்றிக்கொள்ளத் தண்ணீரை எதிர்த்துப் போராடி எதிர்நீச்சல் போட்டு தப்பித்து கொள்ள வேண்டும். அருகில் நிற்பவர்கள் உதவுவார்கள் என்று அவரை பிடித்தால், இருவரும் தண்ணீரில் மூழ்கி மரணம் அடைய வேண்டியதுதான், அல்லது தண்ணீரில் தவறி விழாமல் கவனமாக நடக்க வேண்டும். அதுதான் நல்ல மனிதனின் திறமை.நாம் கடவுளாக இருந்தாலும் அது தான் தன்னை காக்கும் கடமை. துன்பம் வரும் முன் காப்பது தான் அறிவாளி.துன்பம் வந்தபின் தவிப்பவன் ஏமாளி, என்பது நடைமுறையில் உள்ள செயல்பாடுகள். (

அதுபோலவே நாராயணரும் தற்போது ஏற்பட்ட கஷ்டங்களை எண்ணி பார்த்து, பார்வதி தேவியிடம் கூறுகிறார், தங்கையே நான் சொல்வதை கேள். என் மனம் வருந்தி தவம் செய்பவர்களுக்கு எதையும் சிந்திக்காமல், அவர் சிந்தை உருகி எந்த வரம் கேட்டாலும்,அதை கொடுத்து சாகசம் புரியும் நல்ல குணம்படைத்தவர்.

வரத்தை கொடுத்தவுடன் வாங்கிய வரத்தை அருளிய சிவபெருமானிடம் சக்தி உள்ளதா என்று பரிசோதனை செய்கிறான் வரம் பெற்றவன். அப்போது சிவப்பெருமானால் அவனை எதிர்க்க முடியாமல் கண்களை மூடி கொண்டு தியானத்தில் அமர்ந்து கொள்வார். ஆனால் அந்த வேளையில் நான் என் மைத்துணரை காப்பாற்ற வேண்டும்.

துன்பம் வரும் வேளையில் சிவபெருமானை காப்பாற்ற தோன்றிய சாகச கலைஞன் ஆவேன். எனவே அதற்காக நான் கலைஞனாக செயல்படுவதற்கு, யுகா யுகமாக இவ்விதமாக அவதாரம் எடுத்து பல பல வேடம் கொண்டுப் போவதால் நான் அடையும் இன்பங்களை இழக்க வேண்டிய நிலை உருவாகிவிடுகிறது. அதனால் தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியாமல் என்னை ஏவுகிறார். வரம் கொடுத்து சாகசம் புரியும் என் மைத்துணரை காப்பாற்றி சாதனை புரிந்து சாதிக்கும் கலைஞனாக மாறி விட வேண்டும்.

ஆனால் சாதனைகள் செயல்பட அவரின் சக்தி எனக்குள் அடங்குவதால் சிவனும், விஷ்ணுவும் ஒன்றாகி செயல்படுகிறது. ஆகையினால் நாங்கள் இருவரும் சாகசம் புரிகின்ற சாகச கலைஞராக திகழுகின்றோம் தங்கையரே! நீ வருத்தம் அதிகம் கொள்ளாதே! ஆத்திரம் கொண்டு பேசிவிட்டேன். கலங்காதே! என் கண்ணே! அவருடைய வருத்தத்தை பார்வதிதேவியிடம் வெளிப்படுத்தி, பார்வதி தேவியின் கவலையைப் போக்கி, இருவரும் கைலாயம் செல்வதற்குப் புறப்பட தயாரானார்கள்.

***********

# DAY 31

## திருமால் திருக்கயிலை ஏகல்

உன்னோடு பிறந்த ஊழிவிதி யானதினால்
நன்னாடோ டேவாழ நமக்குவிதி யில்லையே
உன்றனக் காகவல்லோ ஊருக்கூரே திரிந்து
சந்தோச மற்று சடைக்க விதியாச்சே
என்று பெருமாள் ஏற்ற பிறப்போடு
இன்று கயிலைக்கு எழுந்தருள வேணுமென்று
தேவர் முனிவரோடு திருக்கன்னி மாரோடு
மூவருட நடுவன் முகமலர்ந் தேகூடி
நடக்கவே ணுமெனவே நளினமுற் றெம்பெருமாள்
கடற்கரையில் வந்து காலமே தெனப்பார்த்தார்
இந்தச் சொரூபமதாய் இங்குவிட் டெழுந்தருளிச்
சித்தர் குடியிருக்கும் சீமையி லேகுமுன்னே
கலிமூழ்கி நாமள் கரையேறப் போறதில்லை
பொலிவாக வேசம் புதுப்பிக்க வேணுமென்று
என்ன சொரூபம் எடுப்போம்நா மென்றுசொல்லி
அன்றப் பெருமாள் ஆலோ சனையாகி
மேலெல்லாம் வெண்ணீற்றை மிகஅணிந் தெம்பெருமாள்
பாலொக்கும் நெஞ்சம் பரம னொருநினைவாய்
மாமோக ஆசை மயக்க வெறியறுத்துத்
தாமோ தரனார் சடைக்கோல மேபுனைந்து
காலில் சிவநினைவைப் கழராமல் தானிறைத்து
மார்பிலைந்து பூமணியை வகிர்ந்தார வேடமிட்டுக்
கண்ணில் மனோன்மணியைக் கண்ணாடி யாய்ப்பதித்து
எண்ணரிய தங்கை இன்பமுட னேவளர்த்த
முப்பத்தி ரண்டறத்தை உடலெல்லா மேபொதிந்து
செப்பமுடன் கந்தை செய்யவெண் கலையணிந்து
தண்டரள மானத் தடியொன்று கைப்பிடித்து
அண்டர்களும் போற்றி அரகரா என்றுவர
தேவர்களுங் கூடிச் சிவசிவா சிவனேயென்று
தாவமுள்ள தேவரெல்லாம் தாரமி டேத்திவர
அம்மை உமையாளும் அவளுஞ் சடைவிரித்துச்

செம்மையுள்ள மாதும் சிவசிவா என்றேத்தி
எல்லோ ருடனே எம்பெருமாள் தானடந்து
வல்லோர் புகழும் வாழ்கயிலை வந்தனராம்

விளக்கம்:
திருமால் திருக்கைலை எழுந்தருளல்

பார்வதி தேவியிடம் நாராயணர் நாம் இன்றைக்கு திருகைலாயம் சென்று விடலாம் என்று ஆயத்தமானார். தேவர்களும், முனிவர்களும் சேர்ந்த தெய்வ கன்னிமார்களோடு ஒற்றுமையாக கைலாயம் புறப்பட்டார்கள். மும்மூர்த்திகளில் நடுமூர்த்தியாக விளங்குகின்ற விஷ்ணுவாகிய ஸ்ரீமன் நாராயணன் முகமலர்ச்சியுடன் முகத்தில் புன்னகை பூத்த புன்சிரிப்போடு எல்லோரும் சேர்ந்து கடற்கரையை நோக்கி நடந்தார்கள்.

எம்பெருமாள் நாராயணர் கடற்கரை வந்ததும் கைலாயம் செல்வதற்குரிய நல்ல காலமும், நேரமும் வந்துவிட்டதா என்றுப் பார்த்தார். அப்போது பார்வதி தேவியிடம் திருமால் கூறுவார், பார்வதி தேவி! இப்போது இருக்கின்ற உருவ அமைப்பில் நாம் இங்கிருந்து கயிலைக்கு சென்றால், கலி நம்மோடே பின்தொடரும்.

சித்தர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மலை பிரதேசத்தை கடந்து செல்வதற்கு முன்பாகவே மாயக்கலி பிடித்துக்கொள்ளும். நாம் அதற்குள் சிக்கி மீளமுடியாமல் ஆகி விடுவோம். எனவே நாம் கலியன் பார்வைக்கு படாத முறையில் நம்மை மாற்றி பொருத்தமான மாற்று உருவம் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

அதைக் கேட்ட பார்வதியும், நாராயண பரம் பொருளும், தேவர்களும் மற்றுமுள்ள தேவர்களும், ஆலோசனை செய்து தீர்மானம் கொண்டு தன்னுடைய திருமேனியை முப்பத்திரண்டறத்தால் பொதிந்து உடல் தெரியாமல், எம்பெருமான் நாராயணர் முன் நடக்க, பின் மற்றவர்களும் நடந்தார்கள்.

திருமால், சிவபெருமானை காணும் ஆவலில், பூலோக மக்கள் மீது கொண்ட பற்றுதலையும், அன்பையும் மறந்துவிட்டு விஷ்ணுவாகிய தாமோதரன் சடை வளர்த்த பண்டாரம் போன்ற உருவ அமைப்பு எடுத்துக்கொண்டு கழுத்தில் ஐந்து முகம் கொண்ட ருத்திராட்ச கொட்டையை அணிந்து, கண்களில் மனோன்மணி ஆகிய சிவசக்தியை தன் கண்களுக்கு கண்ணாடி போல் அமைத்து கொண்டார். நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு எவருடனும் ஒப்பிட்டுக் கூற முடியாதபடி நிறைவோடு வளர்த்து வந்த 32 வகையான அறநெறிகளை அழைத்து தன்னுடைய திருமேனி முழுவதும் பொதிந்து கொண்டார்.

அய்யா நாராயணர். கலிக்கு பயந்து தன்னை பாதுகாக்கும் விதமாக எளிமையுள்ள தூய்மையான உடையை அணிந்து கொண்டார். தண்டாயுதம் போன்ற ஒரு மந்திர கோலை தன் கையில் வைத்துக்கொண்டார். பாதுகாப்புக்காக அண்ட சராசரங்களில் உள்ள அனைவரும் அய்யா சிவசிவ

சிவசிவா அரகர அரகரா என்று அய்யா வைகுண்டர் நாமம் ஆகிய மந்திரத்தை கூறி கொண்டே சென்றனர்.

தேவலோகத்தில் உள்ள தேவாதி தேவர்கள் எல்லாம் சிவசிவா சிவமே என்று திருச்செந்தூர் கடற்கரைக்கு வந்து, சிவனுடைய தாரக மந்திரத்தைச் சொல்லி மேல் நோக்கி எழும்பி வர அம்மை உமை பார்வதியும், நாராயணரோடு பண்டார வேடம் கொண்டு சடை முடியோடு கைலைக்குச் சென்றார்கள். சிவநாமம் சொல்லி கொண்டு தேவர்கள், முனிவர்களோடும் எம்பெருமான் நாராயணரோடும், பார்வதிதேவியும் கைலாயம் நோக்கிச் சென்றார்கள்.

*************

# DAY 32

## சிவன் திருமால் ஐக்கியம்

கயிலை தனில்வரவே காரிருளுந் தான்மறைய
மயிலையொத்த ஈசர் மாயவரைக் கண்டாவிச்
சந்ததியைக் கண்டு தாயாவல் கொண்டதுபோல்
வந்தந்த ஈசுரரும் மார்போ டுறவணைத்து
இத்தனை நாளும் யானும்மைக் காணாமல்
புத்திரனுந் தாயைப் போகவிட்டாற் போலிருந்தேன்
மாரி காணாத வாய்த்த பயிர்போலும்
ஏரி காணாத ஏற்றநீர் போலிருந்தேன்
இனம்பிரிந்த மான்போல் இருந்தே னுமைத்தேடித்
துணையில்லார் போலே துணையற்று நானிருந்தேன்
என்று மகாமாலை எடுத்தாவி ஈசுரரும்
சென்றாவிக் கொண்டு சிணுங்கி யழுதுசொல்வார்
இணையும் புறாவதுபோல் இருந்தோமே மைத்துணரே
துணையு மெனைமறந்து தூரநீர் போனதென்ன
என்னைவிட்டு நீரும் எழுந்தருளு மன்றுமுதல்
வன்ன உமையாளின் வடிவை மிகஅறியேன்
துணையிழந்த அன்றிலைப்போல் தினமு முமைத்தேடிக்
கணவனில்லாப் பெண்போல் கலங்கினேன் காரணரே
உயிர்த்தோ ழமைபோல் உறவுகொண்ட நாரணரே
மெய்த்தோ ழமையை விட்டுப் பிரிந்தமுதல்
பிரிந்து மலைத்தேன் பச்சை நிறமாலே
சரிந்துபள்ளி கொண்டு சதாவருட மாச்சுதல்லலோ
இத்தனைநாளும் என்னைமிகப் பாராமல்
மத்திப மந்திரியே மறந்தென்னை வைத்ததென்ன
கயிலைக்கு மென்றனக்கும் கட்டான மந்திரிதான்
அகில மீரேழ்க்கும் அடக்கமுள்ள மந்திரிதான்
நீயல்லால் வேறுளதோ நெடிய திருமாலே
தானீ தமான சர்வபர நாரணரே

இந்த விதமாய் இகபர விதத்தோடும்
உந்தன் தனைப்பெறவே உயர்ந்ததவஞ் செய்தனல்லோ
அப்படியே நீரும் ஆதிநா ராயணராய்
முப்படியே வந்து உருவெடுத்த மாயவரே
கயிலைத் தேவாதிகளும் கண்ணான மாதிருவும்
ஒயிலான மாமறையோர் உற்ற இருஷிகளும்
கின்னரர்கள் வேத கிம்புருடர் கேதாரர்
மன்னர் முனிவர்களும் மறையும்பல சாஸ்திரமும்
வேதாவும் நந்தி விதரூபச் சித்தர்களும்
நாதாந்த வேத நல்ல ரிஷிமாரும்
இப்படியே மேலோகத் தெல்லாரையும் வருத்தி
அப்படியே ஓர்வசனம் அவர்களோ டேகேட்டுக்
கல்லை வலித்திழுத்துக் காலில்மிகப் போட்டவர்போல்
சொல்லை மிகக்கேட்டுச் சுமந்தேன் மிகுபாரம்
எல்லா விதப்பாடும் யான்பட்ட துபோதும்
வல்லவனே யுன்னுடைய வாக்கைக்கே ளாதபடிச்
செய்த விதத்தாலே செப்புதற்கு நாணமுண்டு
மெய்யிசையு மாலே மெத்தகோ பிக்கரிது
இன்றுமுதல் உம்முடைய இச்சையது போலே
மன்று பதினாலும் மாயனொரு சொல்லுக்குள்ஆள
எல்லா முமது இச்சையது போல்நடத்தும்
சொல்லொன்றுக் குள்ளே சூட்டிநீ ராளுமென்று
மாலுக்கு மனது மகிழ்ச்சை வரும்படிக்குப்
பாலுக்கு மோரான் பகர்ந்தார்கா ணம்மானை

விளக்கம்:

## சிவன் திருமால் கையிலையில் சந்தித்தல்

வல்லமையானப் புகழ் கொண்ட சக்தி உள்ள அனைவரும் வாழும் கைலாய மலையை சென்றடைந்தனர். எங்கும் நிறைந்த ஒளிமயமான நாராயண பரம்பொருள் கைலாயத்தில் காலடியை பதித்ததும், இருள் மறைந்து, ஒளிமயமாக எங்கும் பிரகாசித்து காட்சி அளித்தது. மயில் போல் ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற சிவபெருமான் மாயபெருமாளை கண்டதும் குழந்தையைப் பிரிந்த தாய், மறுபடியும் குழந்தையை கண்டால் எப்படி ஓடிவந்து அன்போடு தழுவி கொள்வாளோ அதுபோலவே ஆசையோடு கட்டி பிடித்து அணைத்தவாறு முகத்தோடு முகம் சேர்த்து மார்போடு ஒட்டி தழுவி ஆனந்தம் கொண்டார்.

எத்தனை காலம் உன்னை காணமல் யாம் பரிதவிக்கிறோம் தெரியுமா? அச்சுதரே! தாயில்லா பிள்ளையை போல் தனிமையில் துடித்தேன். என்னை தற்காத்து இரட்சிப்பீர் கோபாலா! என்று உள்ளம் கசிந்தார்.

மழையில்லா பயிர் போல் வாடி நான் சரிந்தேன் மாயவரே! ஏற்றம் ஏறி இறங்கும் நீரானது வழி அறியாமல் சிதறுவது போன்ற நிலையானேன் அச்சுதரே! தன் இனத்தை பிரிந்த மான் கூட்டம் கூட்டத்தை சேர முடியாமல் தவிப்பது போல் உம்மை காண நான் காத்திருந்தேன் மாயவரே! கணவனும் மனைவியும் கசப்புற்று பிரிந்தது போல், சதியும் பதியான நாங்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் தவித்தோம் நாராயணரே! என்று தன் மன கொந்தளிப்பைச் சொல்லி கொண்டே மகாவிஷ்ணுவை மறுபடியும் ஆர தழுவி ஆலிங்கனம் செய்தார்.

நாயகரான பரமேஸ்வரர் சின்னஞ் சிறு பிள்ளையை போல் கொஞ்சி, கொஞ்சி பேசி தன் மயக்கத்தை போக்கினார். ஜோடி சேர்ந்து இருந்தோமே ! உயிரும் உடலும் ஒட்டி இருந்தோமே! என்னை தனியே விட்டு எங்கு சென்றீர் மைத்துணரே! என்னை விட்டு பிரிந்து பூலோகத்தில் அவதாரம் எடுத்து சென்ற நாள் முதல், இன்றுவரை, ஏல பசுங்கிளியாள் என்னுடைய பத்தினியை கண்களால் காண மனம் இல்லாமல் கண்மூடி இருந்தேன் மைத்துணரே! பச்சைமால் இல்லாத காரணத்தால் பார்வதியைப் பார்த்ததில்லை.

துணையை இழந்த அன்றில் பறவை தன் ஜோடியுடன் மாழ்வது போல் தினம், உம்மை எண்ணி எண்ணி வாடினேன். கணவனை கைவிட்ட கைம்பெண்ணின் நிலை ஆனேன் காரணரே! தோளுக்கு தோள்கொடுத்து துணை நிற்கும் நண்பனை போல் தூயவரே! உம்முடன் உறவு நிலை வைத்திருந்தேன். உமது மெய்யன்பு என்னை விட்டு பிரிந்த நாள் முதல் எந்த நிலையிலும் நான் நிம்மதியோடு நிமிர்ந்து படுத்து உறங்கவில்லை. நான் படுத்து உறங்கி பல நெடுங்காலம் ஆகிவிட்டது. பல நூறு வருடங்கள் ஆகி போய் விட்டது .இத்தனை காலமாக என்னை எண்ணாமல் இருந்த வகை யாது மைத்துணரே! மும்மூர்த்திகளில் நடு மூர்த்தியாய் நின்று நடுதீர்ப்பு சொல்கின்ற நல்ல மந்திரி போல் இருப்பவரே! ஏன் என்னை மறந்தீர் என்று கேட்டார்.

மாயவரை கண்டு மனம் தாங்காத அன்பு கொண்ட மகேஸ்வரர், மைத்துணரே! பதினான்கு உலகத்தையும் பாதுகாத்து கைலாயத்தையும், கண்காணித்து எனக்கு பொருத்தமான முறையில் மதி உரைக்கின்ற மந்திரியாய், நிர்வாகின்ற சாமர்த்தியம் உள்ளவரல்லவா? உமக்கு நிகர் யார் உள்ளார் நெடியமால் நாராயணரே! உம்மை யான் மைத்துணராய் பெறவே என்ன தவம் செய்தேன் தெரியுமா? உலகத்தின் முதல் முதலாக தவம் செய்து தவப்பொருள் என்று பெயர் பெற்று, நான் செய்த தவத்தின் சக்தியாலும், சக்தியின் பலத்தினாலும், யாகத்தின் வலிமையாலும், நீர் இவ்வுலகில் ஆதி நாராயண பரம் பொருளாய் வந்து உதித்தது மெய்யே! அதன் காரணம் அவதார மகிமை அல்லவா? மாயப் பெருமாளே என்றார் சிவன்.

மைத்துணரே! நான் செய்த குற்றத்தை நானே சொல்கிறேன். பொறுமையாய் கேட்டு பொறுத்தருள வேண்டும். கோபத்தை விட்டு நான் சொல்வதை சாந்தமாய் கேளும் என்று, பொன் வாயைத் திறந்து பொன்னம்பலத்தின் சிவன் கூறுகிறார்.

அந்த காலத்தில் கலி உண்டான காரணத்தை சொல்கிறேன். கைலையில் வாழ்கின்ற தேவாதி தேவர்களும் கண்மணிப் போன்ற பிரகாசிக்கின்ற மகாலட்சுமியும், ஆனந்த வாழ்வு கொண்ட பிரம்மலோகத்தாரும் மற்றும் ரிஷிகள், கின்னரர், கிம்புருடர் சிவகணங்கள், உட்பட முனிவர்கள், வேதாகமங்கள் இவர்களோடு மன்னர்கள், மறையவர்கள் புகழ்பெற்ற வேத சாஸ்திரங்கள் அனைத்தும் சேர்ந்தும், மற்றும் பிரம்மா சிவனின் வாகனமான நந்தீஸ்வரன், தேவலோக சித்தர்கள், நான்கு வேதங்கள் ஆகிய எல்லோரையும் வரவழைத்து, அவர்களின் ஆலோசனைப்படி அத்தனை பேர்களின் விருப்பப்படி கலி யுகத்தை உருவாக்க வேண்டும் என்பதால், அவர்கள் பேச்சை கேட்டு செய்ததால், இந்த துன்பகரமான நிலை இப்போது இங்கே உருவாக காரணமானது.

ஓரத்தில் ஒதுங்கி கிடந்த கல்லை இழுத்து தூக்கி தன் காலில் போட்டு காயப்படுத்திய கதை போல் ஆனது. சும்மா இருந்தவர்களை அழைத்து ஆலோசனை நடத்தி சுமக்க முடியாத பாரத்தை சுமக்க நேரிட்டது ஆனாலும் நான் கேட்டேன் நாராயணர் எங்கே போனார் என்று அதற்கு அவர்கள் சொன்ன பதில் மாய பெருமாள் அவதாரம் எடுப்பதற்காக பூலோகத்தில் இறந்து கிடக்கிறார் என்று சொன்னதால் இந்த வினை தானாக வந்து அமைந்துவிட்டது. நாராயண பரம் பொருளே! நான் பட்டது போதும் பரந்தாமா! மன்னிக்கவேண்டும். எல்லாவிதமான பாடுகளும் யாம் பட்டது போதும் மைத்துணரே! ஆகையால் வல்லமை பொருந்திய உமது வாக்கை கேட்காத காரணத்தால் தவறான முடிவை எடுத்து கலியைப் படைத்து விட்டோம், மன்னிக்கவேண்டும்.

அந்த இழிவான செயலை சொல்லவே வாய் கூசுகிறது. வெட்கமாக இருக்கிறது. எனக்கு உண்மையும் உயர்ந்தப் பண்பாடும் நிறைந்த பச்சைமாலே என் மீது கோபம் வேண்டாம், இனி மேல் நடக்கும் செயல்களை உம்முடைய ஞானத்தில் உருவாகும் எண்ணப்படியே நீரே நடத்த வேண்டும். நான் மறுத்து எதுவும் பேசமாட்டேன்.

ஒரு சொல்லுக்குள் உலகை ஆள்வது போல பதினான்கு உலகத்தையும் “ஒரு குடையின் கீழ்” என்கிற ஒரு சொல் படி, முடி சூடி ஆள்வீராக! திருமாலே, இனி எல்லா பொறுப்பையும் உம்மிடமே நான் தந்து விடுகிறேன் என்று ஒப்படைத்தார் சிவபெருமான். இனிப்பான பாலுக்குள் தான் புளிப்பான மோரும் இருக்கிறது என்று , நான் செய்த தவறை மன்னித்து என்னை ஏற்று கொண்டு மன்னித்து அருள வேண்டும் மாதவா! என்று மன்னிப்பு கேட்டு கொண்டார் சிவபெருமான்.

*************

# DAY 33

## சிவப் பெருமான் திருமாலிடம் பொறுப்பை ஒப்படைத்தல்

அப்போது அச்சுதரும் அவரேது சொல்லலுற்றார்
எப்போதும் உமக்கு இப்படியே யுள்ளமுறை
நானொருவன் வேடனைப்போல் நாட்டில் திரிந்தலைய
ஏனோகா ணுங்களுக்கு இல்லையே சங்கடங்கள்
முன்னுதித்தப் பாவி முழுநீசக் குறோணியினால்
பின்னுந்துரி யோதனனாய்ப் பிறந்தவன் மாளும்வரை
உகமா றானதிலும் உதித்தக்குறோ ணியுயிரைப்
பகையாக்கிக் கொல்ல பட்டபா டெத்தனைகாண்
யான்மிகப் பட்டபாடு ஆரும் படவரிது
தான்பட்ட தெல்லாம் தான்போது மென்றுசொல்லி
இனிமேல் பகைதான் இல்லாமல் செய்வதற்கு
மனுவாய்ப் பிறக்க மக்களே ழுபேரை
சேர்த்தெடுத்து விந்தில் சேர்ந்துசெங் காவுதன்னில்
சார்ந்து விளையாடி தான்பெற்ற பாலருக்கு
பிள்ளை ஏழும்பெற்று பெருங்கங்கை அவ்வனத்தில்
கள்ளமில்லா சிவனும் கண்ணர்முனி தேவர்களும்
எல்லோருங் கூடி ஏற்றதிரு நாமமிட்டு
வல்லோராய்ப் பூமிதனில் வாழுமென்று வைத்தோமே
அலுவ லொழிந்ததென்றும் அலைச்சல்மிக இல்லையென்றும்
மெலிவெல்லாந் தீர்ந்து மேவிஸ்ரீ ரங்கமதில்
இனிதிருக்கும் போது என்னை நினையாமல்
மனிதனையும் பூமியிலே வகுத்ததென்ன சொல்லுமென்றார்
ஆறு யுகமதிலும் அதிகபலக் காரர்களாய்
வீறுடனே பிறவி விதவிதமாய்ச் செய்தீரே
முன்பிறந்த குறோணி முழுங்கினான் கயிலைமுதல்
வன்பிறவிச் சூரனைத்தான் வதைக்கவே றாருமுண்டோ
இரண்டாம் யுகத்தில் நன்றிகெட்ட மாபாவி
குண்டோம சாலியனாய் குதித்தான் மகாபாவி
வானலோ கமுழுங்க வாய்விட் டலறினதால்
கோனேகிரி வேந்தே கொன்றதுவே றாருமுண்டோ
மூன்றாம் யுகத்தில் முளைத்தானே யப்பாவி
வான்றான மல்லோசி வாகனென்ற மாபாவி
தேவரையுந் தெய்வ ஸ்திரிகளையு மூவரையும்
ஏவலது கொண்டு இடுக்கமது செய்தனனே
முறையமது ஆற்றாமல் ஓடிப்போ வென்றுரைத்தீர்
சிறைப்பிடித்தப் பாவிகளைச் செயித்ததுவே றாருமுண்டோ
நாலாம் யுகத்தில் நன்றிகெட்டச் சூரபற்பன்
ஆலா விருச்சம் அதுபோல் கிளையுடனே
நாட்ட முடனே நாடும் படையோடு
கோட்டை யதிட்டுக் கொடியமா பாவியனாய்க்
கேட்ட வரங்களெல்லாம் கெட்டியாய் நீர்கொடுத்துத்
தேட்டமுடன் கயிலை சீமையது வுங்கொடுத்து

இருக்க இடமற்று எழுந்திருந்து நீரோடி
உருக்கமுடன் நானிருந்த உவரியி லேகிவந்தீர்
தேவர்களைப் பாவி செய்த இடுக்கமதால்
மூவர்முத லும்மிடத்தில் முறையிட்ட ஏதுவினால்
என்னை வருத்தி ஏற்ற மொழிகள்சொல்லிச்
சென்றவனைக் கொல்லுமென்று செய்திசொல்லி விட்டீரே
விட்டவுட னவனோடே வெகுநாளா யுத்தமிட்டுப்
பட்டபா டெல்லாம் பகர எளிதாமோ
யுத்தமிட் டவனை ஒக்கத் தரமறுத்துச்
செயித்தேன் பின்னவனும் செத்த யுகமதிலே
இரணிய சூரனென்று எனக்கெதிரி யாய்ப்பிறந்து
தரணியி லவன்பேரைச் சாற்றி வழங்கலுற்றான்
பின்னு மவன்றனக்குப் பிள்ளையாய் நான்பிறந்து
கொன்று தரமறுத்தேன் குதித்ததுகாண் மற்றயுகம்
பத்துத் தலையோடு பாவியவன் பிறந்து
உற்றுஅவன் கேட்டவரம் ஒக்கநீர் தான்கொடுத்து
அருகில்மிக வாழ்ந்திருந்த ஆயிளையை நீர்கொடுத்துக்
குருவிருந்த சோதி குன்றையும் நீர்கொடுத்துப்
பாவியவன் மூன்று பாரடக்கி ஆண்டனனே
தேவியும் நானும் தேசமதி லேபிறந்து
அவனை யழித்து அந்தயுக முங்கருக்கிச்
சிவனேயுன் பாரிதனைச் சிறைமீட்டித் தந்ததாரு
சதியாந்துரி யோதனனாய்த் தான்திரும்ப வெபிறந்து
மதியாம லென்றனையும் மறையுமிக நம்பாமல்
அன்போரை யெல்லாம் அகப்படுத்தி மாபாவி
வம்பான கள்ளன் மாய்மாலஞ் செய்ததினால்
கொன்றவகை சொல்லக் கூடுமோ காரணரே
என்னென்ன பாடு யான்பட்ட மாய்மாலம்
கஞ்சனென்ற பாவிக்குக் கடியவரம் நீர்கொடுத்து
வஞ்சகன்தான் செய்த மாய்மாலம் மெத்தவுண்டு
அவனை வதைக்குமுன்னே அடியெத்த னைகளுண்டு
சிவனே யுமக்குச் சூடெண்ணஞ் சற்றுமில்லை
இருப்பி லிருந்துகொண்டு எனக்கலைச்சல் செய்வதுண்டு
குருபரனேநீரும் கொடுத்தீர் புறத்தோர்க்கு
முப்பறத்தோர் செய்த முடுக்கமது ஆற்றாமல்
அப்புறத்தோர் தம்மை அழிக்க ஒருகோலமதாய்
எண்ணெரிய பீற்றல்ஏற்ற கந்தை துணியுடுத்து
மண்ணிலே யவர்கள் வலுவைமிகக் குறைக்க
என்னென்ன பாடுயான் பட்டேன் அப்பாலும்
பொன்னான ஈசுரரே பூரித் தெரிந்தீரே
பொதுவாய் நிறைந்த புண்ணியரே இப்போது
எதிர்ப்பவரார் சொல்லும் இந்தமாய் மாலமொடு
கலியென்ற சொல்லு காதில்மிகக் கேட்டதுண்டால்
சலிவாகி மேனி சடலமிரு ளாகுமல்லோ
மெய்ப்பேச வேணுமென்று மேவி யிருந்தாலும்
பொய்ப்பேச புத்திப் பொலியும் பொடுபொடென
வாளா யுதத்தாலே வாய்த்தகணை யம்பாலே

பாழாக்க வென்றாலும் படாதே மகாலிதான்
மற்றப் பிறவி யாக வகுத்தாலும்
இத்தனை யெண்ணம் இல்லையே யென்றனக்கு
அய்யோயென் மக்கள் அதற்குள்ளாகப் பட்டாரே
மெய்யோ யினிமக்கள் விளங்குவ தெக்காலம்
தீண்டிப் பிடித்தானே செத்தகலி மாய்மாலன்
வீண்டிடறு தீர்ந்துமக்கள் விளங்குவது எக்காலம்
ஆறு பிறவி அழித்ததுவு மென்றனக்கு
நீறுபோ லெண்ணுதுகாண் நிற்கலியைப் பார்க்கையிலே
என்ன விதத்தால் இவனை யழிப்போமென்று
வன்னச் சிவனாரே மனதுவேறே ண்ணுதுகாண்
நாடாச்சு தேசம் நகரியுங்கள் பாடாச்சு
வீடாச்சு குண்டம் மேதினிக ளங்காச்சு
தேச வழிபோறேன் செல்லாது இங்கேதான்
மாய்கை வலையைவிட்டு மறையவே போறேன்காண்
பலபேர்க ளாட்டும் பாம்புபோ லென்னையுந்தான்
அலைவிதமா யென்னை அமைத்ததென்ன சொல்லுமென்றார்

விளக்கம்:
சிவப் பெருமான் திருமாலிடம் பொறுப்பை ஒப்படைத்தல்

திருமால், மிகவும் பணிவோடு பேசிய சிவபெருமானை பார்த்து கூறுகிறார், மைத்துணரே! சர்வக்காலமும் நீர் இது போன்று செய்யக்கூடாத காரியங்களை செய்வது வழக்கம் ஆகிவிட்டது. நீர் செய்யும் தவறுகளை தடுத்து அழிக்க நான் மிருகத்தை வேட்டையாட செல்லும் வேடுவனை போல் அலைந்து திரிந்து அழிக்கவேண்டிய நிலை அல்லவா உருவாகிறது.

ஒவ்வொரு யுகத்திற்கும் நான் படும்பாடுகளும், கஷ்டங்களையும் கண்ட பிறகும் நீர் வருத்தம் கொள்ளவில்லையே மைத்துணரே! முதல் முதலில் உம்மால் உருவாக்க பட்டு, உலகத்திற்கு ஆகாத துரோகியாகிய குறோணியை படைத்தீர். பிறகு தொடர்ந்து வந்த யுகங்களான துவாபர யுகம் வரை முடிந்துள்ள ஆறு யுகங்களிலும், தோன்றி வந்த கொடிய அரக்கனாகிய குறோணியின் துண்டங்களை கொன்று அழிக்க , எதிரியாக மாறி அப்பப்பா நான் பட்டப் பாடுதான் எத்தனை? எத்தனை? என்று அறிவீரோ ஈஸ்வரரே! யான் பட்ட பாடு யாரும் படக்கூடாது மைத்துணரே!

ஒவ்வொரு யுகத்திற்கும் நான் படும்பாடுகளும், கஷ்டங்களும், துயரங்களும் என்னோடுதான் முடியவேண்டும் ஈஸ்வரே! எல்லோரும் பகை இல்லாமல் வாழ அருளும் சிவனே! நான் மானிடர்களாய் பிறவி செய்ய தெய்வ லோகத்திலிருந்து ஏழுப் பேரைத் தேர்ந்தெடுத்து என்னுடைய வாரிசாக ஆகும்படி பூலோகத்தில் பிறவிச் செய்ய நீர் அருள்புரிந்தீர். ஆகையால் நான் அரிகோண மாமலையிலுள்ள வனத்தின் அமிர்த கங்கை அருகில் தெய்வ கன்னிமார்களோடு விளையாட்டாக விளையாடி அக்கினியாக காட்சி கொடுத்து அவதரித்து, நான் பெற்ற பிள்ளைகளுக்கு பரலோகத்தில் உள்ள அனைவரும், பரமசிவன் ஆகிய நீரும் தான் பெயர் வைத்தீர்.

மேலும் எல்லோரும் சேர்ந்து ஏற்றத் திருநாமம் இட்டு வாழ்த்தினார்கள். நானும் என் பிள்ளைகள் வல்லமை படைத்தவர்களாக வாழ்வார்கள். பூலோகத்தில் உயர்வான நிலையிலிருந்து புகழ் அடைவார்கள். எனக்கும் அவதாரம் எடுக்கும் வேலைகள் முடிந்துவிட்டது என்று, பூலோக வைகுண்டம் செல்லலாம், களைப்பு மாறி இளைப்பாறலாம் என்று தான் ஸ்ரீரங்கம் சென்றேன். அங்கு நான் அனந்த சயனத்தில் பள்ளி கொண்டிருந்த என்னைப் பற்றி சற்றும் யோசிக்காமல் என் நிலையை தவறாக புரிந்து கொண்டு எனக்கு தெரியாமல் கலியனை ஏன் படைத்தீர். அந்த காரணத்தை சொல்லும் மைத்துணரே! நடந்து முடிந்த ஆறு யுகங்களிலும் ,மிகவும் பலம் வாய்ந்த அரக்கர்களை பிறவி செய்தீர். உலகத்திலேயே தான் பெரியவர் என்ற வீறாப்புடன் வேகவேகமாக பலவித பிறவிகளை செய்தீர் அல்லவா?

முதல் தோன்றிய நீடிய யுகத்தில் தாங்கள் செய்த வேள்வியில் தோன்றிய குறோணி பூலோகம் முதல் கைலை வரை விழுங்க எண்ணினான். அந்த அரக்கனை அழிப்பதற்கு என்னை தவிர யாராவது தோன்றினார்களா? அடுத்த இரண்டாவது சதுர யுகத்தில் ஈவு இரக்கமில்லாத கொடிய குண்டோ மச்சாலியன் தோன்றினான். மகா பெரிய கொடும் பாவியான குண்டோமச்சாலியன் தனக்கு நிகர் யாரும் இல்லை என்று ஆணவத்தோடு துள்ளி குதித்தான். வானத்தையே விழுங்கிவிட வேண்டும் என்று கொக்கரித்தான். வாய் விட்டு அலறினான். தாண்டவமாடும் தாண்டவகோனே! அவனையும் அழிக்க என்னை தவிர வேறு யாராலாவது தான் முடிந்ததா? அடுத்த மூன்றாவது யுகத்தில் இரு அரக்கர்களை படைத்தீர்கள் அல்லவா?

அந்த பாவிகளும் தேவர்களையும், தேவ கன்னிமார்களையும் அடிமைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், மும்மூர்த்திகளையும் விட்டுவைத்தார்களா? இல்லையே! எல்லோரையும் அடிமை வேலை செய்யும்படி, தான் வைத்து ஆபத்தான முட்டாளாக தான் நடந்து கொண்டான். அந்த கொடுமை தாங்காமல் தேவாதி தேவர்களும் உம்மிடம் அபயமிட்டார்களே! அதை கேட்ட நீர் ஆடிப்போய் என்னிடம் வந்து, ஓடிப்போய் உதவி செய்து காப்பாற்றும் என்றீரே! இப்படியே ஒவ்வொருவரும் தோன்றி வந்த கைலாயத்தை கலைக்கி சிறை பிடித்த, அந்த வஞ்சகர்களை அழிக்க என்னை தவிர யாராவது உண்டா?

நான்காவது யுகத்தில் இரு அரக்கர்களைப் படைத்தீர்கள் அல்லவா? சூரன் என்றும், சிங்கமுகாசுரன் என்றும் இரக்கமற்ற இருவரைப் படைத்தீர். ஆலமர விழுதுகள் தரையில் இறங்கி, வேரூன்றி அடர்ந்து படர்ந்து இருந்தது போல் சூரபடைகளும் ,அசுரகுலங்களும் பூலோகத்தில் படையோடு திரண்டு வந்து. கோட்டைகள் அமைத்து கொடி விருது கட்டினார்கள். அவன் என்னையே சுற்றி வளைக்கும் விதத்தில் கொடிய பாவியானான். ஆனால் அவன் கேட்ட வரங்களை எல்லாம் தாங்கள் அழியா வரங்களாக கெட்டியாக கொடுத்தீர். அவன் கேட்ட வரங்கள் எல்லாம் தாங்களிடம் தேடி சம்பாதித்து தந்தது போல் வைத்து கொண்டு, அதை கேட்டதும் மறக்காமல் கொடுப்பது போல் கேட்டதும் கொடுத்தீர்.

பாவம், நீர் அமர்ந்திருக்கும் கைலாய மலை ஆகிய பொன் கைலாயத்தையும் கொடுத்துவிட்டு தங்குவதற்கு இடமும் இல்லாமல்

எளிமையாக கடல் நீரில் தத்தளித்து ஓடிவந்தீரே! ஞாபகம் உள்ளதா? அது தேவையா மைத்துணரே! உபத்திரவம் அதிகமானால் உள்ளம் உருகிய பரிதாப நிலையோடு , திருப்பாற் கடலுக்குள்ளும் ஓடி வருவீர்! நீர் கொடுத்த வரத்தின் வலிமையால் , சூரன் படுத்திய கொடுமை தாங்காமல் வேதனைப் பட்டார்கள் தேவர்கள். பின் தேவர்கள் எல்லோரும் சேர்ந்து அதிர்ச்சியடைந்து வேறு வழி இல்லாமல் என்னை கண்டு என் மனம் குளிரும்படி, இனிமையாகப் பேசி செந்திலாண்டவராக அவதாரம் எடுத்து அசுரர்களை அழிக்க அருள் தந்து அனுப்பி வைத்தீர்.

நான் செந்திலாண்டவராக சென்று அரக்கர்களோடு சண்டையிட்டு அரக்கர்குலமே இல்லாமல் அழிப்பதற்கு நான் பட்ட அவஸ்தைகள் எல்லாம் எளிதான காரியம் என்று சொல்ல முடியுமா? அந்த படைகளோடு சண்டையிட்டு அரக்கர் குலமே இல்லாமல் அழித்து சாதனை படைத்தேன். செந்தூர் கடற்கரையில் நான் போர் செய்து வெற்றி பெற்றேன். சூரன் இறந்த யுகம் தான் கிரேதாயுகம். கிரேதாயுகத்தின் வயது முடிவதற்கு நாள் இருந்த காரணத்தினால் மறுபடியும் புதிதாக எனக்கு எதிரியாக இரணியனை பிறவி செய்து அனுப்பினீர்!

பிறவிஎடுத்தவன், தான் பூலோகத்தில் பிறந்து எனக்கு எதிராக செயல்பட்டு, எதிர் எதிராக நின்று நானே கடவுள் என்று அவனுடைய பெயரை தான் இறைவன் நாமமாக சொல்லி தினமும் "இரணியாய நம" என்ற மந்திரந்தான் ஓத வேண்டும். நான்தான் கடவுள் என்று கூற கட்டளை இட்டான். அவன் மனதை அடக்கி, அவனை அழிக்க அவனுக்கு மகனாக பிரகலாதன் என்று பிறந்து அவனுக்கு எதிராக செயல்பட வைத்து இரணியனை கொல்வதற்கு நரசிம்மமாக அவதரித்து அவனை அழித்து நான்காவது யுகத்தை முடித்தேன்.

ஐந்தாவது யுகத்தில் மீண்டும் இரணியனை பத்து தலை ராவணனாக பிறவி செய்து இலங்கையை ஆட்சி செய்ய வைத்து அவனுக்கு கேட்ட வரமெல்லாம் குறைவில்லாமல் கொடுத்தீர், குருவாக அமர்ந்து அருளாட்சி செய்து ஒளி வீசுகின்ற கைலாயத்தை பத்து தலை ராவணன் கொடுத்துவிட்டதால் அல்லவா? கைலாய மலையை ராவணனுக்கு அள்ளி எடுத்து, அசைத்து உமது இருப்பிடத்தை ஆட்டி படைத்ததால் அல்லவா? இடது பக்கத்தில் இருந்த பார்வதி நடுங்கி சாய்ந்தாள். அந்த அளவு வரம் கொடுத்தீரே! தேவைதானா? அரக்கன் இராவணன் மூன்று உலகிலும் என்னை எதிர்ப்பதற்கு யாரும் இல்லை என்று ஆணவத்தோடு பேராசையோடு வாழ்ந்தான்.

பெண்ணாசை கொண்டு அவனை அழிக்க லட்சுமி தேவியும், நாராயணரும், ராமரும் சீதையும் ஆக பூலோகத்தில் மனிதனாக பிறந்து. கடல் கடந்து இலங்கைக்கு சென்று அங்கு இராவணனோடு போரிட்டு பத்து தலைகளை அறுத்து இலங்கையை எரியூட்டி சாம்பலாக்கிய திரேதாயுகத்தையும் முடித்தோம்.

ஆறாவது யுகமான துவாபரயுகத்தில் பத்து தலைராவணனை மறுபடியும் துரியோதனனாக பிறவி செய்து அவனுக்கு துணையாக நூறு தம்பி மார்களையும் பிறவி செய்தீரே! ஞாபகம் வருகிறதா? துரியோதனன் என்ன? என்ன? கொடுமைகள் செய்ததான் என்று தெரியுமல்லவா?

பாண்டவர்களின் நாட்டையும் சேர்த்து கொண்டான். ஊசி முனை அளவு கூட பூமி பாண்டவர்களுக்குக் கொடுக்க மறுத்தான். உம்மையும் நம்பாமல், மற்ற எவரையும் மதிக்காமல், வேதங்களையும் பார்க்காமல், நான் பலசாலியான என்னையும் நம்பாமல் மற்ற எவரையும் மதிக்காமல் வேதங்களையும் பார்க்காமல் நாச வேலைச் செய்தான்.

என் மேல் அன்பு கொண்டு என்னை மதித்து நடந்த பாண்டவர்களை அவன் அடிமைப்படுத்தி அநியாயம் செய்து கொடுமைப்படுத்தினான். நீதி, நேர்மை, தர்மம் காத்த பாண்டவர்களை ஏமாற்றிய கயவன் துரியோதனன். தந்திரமாக நடந்ததால், என்னுடைய மாய வித்தைகளால் எப்படி அழித்தேன், என்ற காரணங்களை இலகுவாக சொல்லி விட முடியாது. ஈஸ்வரரே, அது ஒரு பெரிய கதை ஆகும் தெரியுமா? ஆறு யுகங்களாக நான் பல பிறவிகளை எடுத்துப் பட்டப் பாடுகள் தான் என்ன தெரியுமா? எண்ணம் தான் கணக்கிலடங்குமா? பின்னரும் துரியோதனை கம்சனாக பிறவி செய்தீர்? உண்மைதானே! அந்த கம்சனை அழிப்பதற்கும் பட்டப் பாடுகள் எத்தகையது? என்று தெரியுமா? நான் ஆயர் குலத்தில் பிறந்தவன் என்றும் வெண்ணை திருடன் என்றும் இழிவாக என்னை பேசினீரே! மைத்துணரே! அதை மறந்தீரோ? ஞாபகம் உள்ளதா?

சிவ பரம் பொருளாக இருந்தும், நீர் சூடு சொரணைச் சற்றும் இல்லை உமக்கு. கைலாயத்தில் அசையாமல் தியானத்தில் இருந்து கொண்டு என்னை தானே அலைந்து திரிய வைப்பீர் தவப் பொருளே! நீர் குருவாக இருந்து உம்மை எதிர்நோக்கி வரும் இன்னல்களை யோசிக்காமல் முப்புர அரக்கனுக்கு வரம் கொடுத்தீர் ? எப்படிப்பட்ட வரம் வல்லரக்கனுக்கு கொடுத்தீர் தெரியுமா? யாராலும் தப்ப முடியாத, அவன் தூண்டும் விரலால் அழிக்கும் மிகப்பெரிய வரம். அவன் தூண்டும் விரலை அழுத்தினால் போதும் எதிரியின் தலையானது அறுந்து போய்விடும். உலகத்தை அழித்து விடுவான். அதை தடுக்க நான் தந்திரம் செய்து அவர் மனதை மாற்றி வரம் தந்த ஈசனிடம் சென்று சிவனே நீர் தந்த, தூண்டுதலால் சாகும் வரம் மெய்தானா என்று சோதித்து பார்த்து வா என்று திசை திருப்பி உம்மிடம் அனுப்பினேன். அவனும் மனம் மாறி துணிந்து உம்மிடம் சோதிக்க வந்தான்.

அவன் திரும்பி வந்ததை கண்ட கைலாய வாசிகள் எல்லோரும் ஓடினார்கள். தானவர்கள் ஓடினார்கள். தவமுனிவர்கள் ஓடினார்கள். கணபதி, முருகன், சூரியநாராயணரும் ஓடினார். வரம் கொடுத்த ஈசுரரும் ஓடினார். அவன் திரும்பி கைலாயம் திரும்பி வந்ததைக் கண்டு காற்றில் கரைந்தது போல் கண்ணுக்குத் தென்படாமல் மறைந்து என்னை நினைக்க, நான் அவனை அழிக்க பெண் வேடம் கொண்டு செல்ல அவன் என்னுடைய பெண் அழகுக் கண்டு, என்னிடம் மயங்கி தான் பெற்ற வரத்தை மறந்து விட்டதால் அவனுடைய தலை தெறிக்க செய்து, அவனை அழித்தேன். அதை எப்படி தைரியமாக உம்மால் செய்திருக்க முடியுமா? அது மட்டுமா மைத்துணரே!

அது மட்டுமா? அவனுடைய வலிமை வாய்ந்த, வல்லரக்க கோட்டையையும், வீரமிக்க முப்புராதிகளையும் அழிக்க பண்டார கோலம் கொண்டு, இரப்பனைப் போல் பிச்சை கேட்டு சென்றேன். அழுக்கு துணிகளை உடுத்தி கொண்டு தோளில் பொக்கணங்களை போட்டு கொண்டு வல்லரக்கன் கோட்டையை அடைந்த போது அங்கிருந்த முப்புராதிகள் என்னை பார்த்து கேலியும் கிண்டலும் பேசி என்னை அடித்தார்கள். ஆண்டி கோலத்தில் சென்ற என்னை கண்டு கோபுரத்தில் இருந்த இருந்தவர்கள் என்னை பார்த்து கேலியும் கிண்டலும் பேசி என்னை அடித்தார்கள்.

அடடா ஆண்டி என்று அழைத்தார்கள். பாரடா பைத்தியம் என்று பரிகாசம் செய்தார்கள். நான் எவ்வளவு பொறுமையாக தாங்கி கொண்டு, இருபது வயதில் ஆடாமல் அறுபதுவயதில் ஆடி என்ன பயன்? ஆடும் பலம் இழந்த வயோதிக ஆண்டியா நான், எப்படி ஆடுவேன் என்று பொறுமையாக தாங்கி கொண்டும், பாடும் வயதில் பல்லை பறிகொடுத்தவர். அதனால் பாடும் வகையறியேன் என்று பணிந்து வல்லரக்கர்கள் நடத்திய அதிகாரங்களை வலுவிழக்க செய்து அவர்களை அழிக்க பல அறப்போராட்டங்களை கடைப்பிடித்து அழிக்க பாடுப்பட்டேன்.

மூன்று முறை மூன்று வேடமிட்டு சென்று முப்புரத்தை எரித்து அரக்கர்களையும் அழித்து, பொன் மேனியை உடைய பொன்னாற் மேனியரே நீர் கர்வம் கொண்டு கைலாயத்தையே தாண்டவமாடி எரிய செய்தீரே! அப்படி கோபம் கொண்ட புண்ணியவானே! இப்போது நீர் பிறவி செய்திருக்கின்ற கலியனோடு எதிர்த்து போரிடுவது யார்? எப்படி செயல்பட்டால் கலியனை அழிக்கலாம். அதற்குரிய வழியை இந்த மாய பெருமானாகிய என்னிடம் சொல்லும் என்று கேட்டார்.

கலியன் என்ற பெயரை நான் சொல்லி காதால் கேட்க சிவசிவ சிவனே! என்று திருமால் இரு காதுகளையும் பொத்தி கொள்கின்ற எண்ணம் தோன்றுகிறதே என்றார். என் உடல் கூசுகிறது. அத்தனை பெரிய அவமானமான செயல்களை புரிகின்றான். கலி என்றால் கிலிப்பிடித்தது போல் உடலும், உள்ளமும் இருளில் மூழ்கி விட்டது போலாகி விடுகிறது. உண்மையை பேசி நேர்மையாக வாழ வேண்டும் என்று நினைத்தாலும் , முயற்சி செய்தாலும், அதை மீறி பொய் பேச வைத்து, அறிவை பொடு, பொடு என்று புத்தியை கெடுத்து விடுகிறது. இதைத்தான் அய்யா,

“மெய்ப் பேச வேண்டுமென்று மேவி இருந்தாலும்
பொய்ப் பேசப் புத்தி பொலுபொலன”

மாயைகளை அழிப்பதற்கு வாள் அம்பு போன்ற ஆயுதங்களாலும் என் கையிலுள்ள வில்லில் நாணேற்றி அம்பு எய்து பழி தீர்த்து விடலாம் என்றால், அதற்குள்ளும் அந்த மாயையை கட்டுப்படுத்தி அழித்துவிட முடியாது. கலிக்கு மாயத்தன்மை கொடூரமாக கொடுக்காமல் சாதாரண உருவ அமைப்போடு பிறவி செய்திருந்தால், இவ்வளவு யோசனை செய்ய வேண்டிய தேவையில்லையே! இதற்கு முன்னால் முந்தைய யுக அரக்கர்களை அழித்தது போல வேலை இலகுவாக முடிந்துவிடும்.

ஆனால் பாவம் என் பிள்ளைகள். அறிவு கெட்ட மாய கலிக்குள் எல்லோரும் சிக்கி மயங்கி போய் விட்டார்கள். நான் என்ன செய்வேன் ஈஸ்வரரே! இந்த மாய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு உண்மையான வாழ்க்கைக்கு என் மக்கள் மாறுவது எப்போது? கொழுந்து விட்டு எரிகின்ற தீயை போல் பற்றிக் கொண்டானே பாவி! தீக்கிரையாகி போகின்ற மாய்மால ஜலக்காரகன் இந்த கலியன். இவன் வாங்கிய வரங்கள் செயல்படாமல் அழித்து, நடுதீர்ப்பு வழங்கி சான்றோர்கள் தர்ம யுகம் வாழ்வது எந்த காலம். இந்த ஆசை என்று நிறைவுப் பெறும். ஆறு விதங்களில் துவங்கி, ஆறு விதமான அரக்கர்களை அழித்து எனக்கு, அது திருநீறுப் போல் ஊதி பறத்தி அழித்துவிடும் செயல்கள் எளிதாக தோன்றுகிறது.

ஆனால் இந்த கலியை நிர்மூலம் ஆக்குவது எப்படி என்று சிந்தித்தாலும் புதுமையான வியூகத்தை வகுத்து செயல்பட்டாலும் கண் விழிகள் பிதுங்கி விடுமோ என்ற பயம் தோன்றுகிறது. சிவபெருமானுடைய சிந்தை கலங்காது சிவலோகத்தில் இருந்துவிடலாம் போல் தோன்றுகிறது. நீங்கள் படைத்த உயிர்களும், உலகமும் உங்களுடையது. எனவே உங்கள் விருப்பம் போல் நடத்துங்கள். நான் என்னுடைய இருப்பிடம் ஆகிய வைகுண்டம் செல்கிறேன்.

உலகத்தில் வாது, சூது, வஞ்சகம், பொறாமை, பேராசை இவை எல்லாம் அதிகரித்து விட்டது. ஆகையால் என்னால் இனி ஒன்றும் செய்யமுடியாது. நான் எனது இடமாகிய வைகுண்டம் போகிறேன். எனக்கு இனி இங்கு இருக்க முடியாது. இந்த மாயப் பெருமாளுக்கும், மாய கலியனுக்கும் இணையாக போட்டியிட முடியாது. நான் மாயலோகம் செல்வேன்.

என்னை போக விடும் ஈஸ்வர பெருமானே! பாம்பாட்டியானவன் பாம்பை வைத்து வித்தை காட்டுவதை பார்க்க பலபேர்கள் வேடிக்கை பார்ப்பது போல் என்னை இங்கே வைத்து பாம்பாட்டி வித்தை காட்டுவது போல் ஊர் ஊராக அலைய வைத்து வேடிக்கை பார்ப்பது என்ன காரணம் என்று கேட்டார்? திருமால் கோபத்தினால் ஆத்திரப்பட்டு பேசியதை கேட்ட சிவபெருமான் அதிர்ச்சி அடைந்தார்.

***********

# DAY 34

நாராயண மூர்த்தியிடம் சிவன் பதில் உரைத்தல்

அப்போது ஈசுரனார் அச்சுதரைத் தான்பார்த்து
இப்போது நானும் இயம்புகிறேன் கேளுமென்று
முற்பிறவி துயரம் எல்லாம் வரும்படிக்குப்
பண்டுவொரு சாபம் பகர்ந்தேன்நான் மைத்துணரே
அன்றுசா பம்பகர்ந்த அதுகேட்டுக் கொண்டருளும்
குறோணி யொருசூரக் கொடும்பாவி தான்பிறந்து
சுறோணித மாயவரே தொல்புவியெல் லாமுழுங்கி
என்னோடு ஈஸ்வரியாள் எல்லோரை யும்விழுங்க
நின்னோடு மாயவரே நீயொருவன் தப்பிமிக
என்னை நினைத்துத்தவம் இருந்தாய்நீ கீழுலகில்
தென்னவனே நீயும் செய்தத் தவமதினால்
எழுந்தருளி நானும் என்னவரம் வேணுமென்றேன்
குளிர்ந்த குணமான கோவேந்தே நீமாறி
கேட்டாயே சூரனுடல் கீறித்துண் டாறாக்கித்
தாட்டாண்மை யாகத் தரணிதனில் விட்டெறிய
வரந்தாரு மென்று வாகாகக் கேட்டவுடன்
தரந்தரமே துண்டம் தரணிக்கெல் லாம்பிறந்து
மாற்றா னாயுனக்கு வருமாறு யுகம்வரைக்கும்
சீற்றத் துடனே செடமெடுக்கு மென்றுசொல்லித்
தந்த வரத்தின் தன்மையா லிந்தமுறை
எந்தன்மேல் கோபம் ஏன்சொல்லப் போறீர்காண்
என்றந் தஈசர் இப்படியே சொன்னவுடன்
அன்று மகாமால் ஆகங் களிகூர்ந்து
ஆனாலும் நான்கேட்ட அவ்வரங்க ளானாலும்
மானாபர ஞாய வரம்பழித்துப் போட்டீரே
இதற்குமுன் னேதாலும் என்னையறி யாதவண்ணம்
ஒதுக்கிலிருந் தோர்வளமை உங்களால் செய்ததுண்டோ
மும்முறைபோ லென்னை உவந்துக் கெணியாமல்
அம்முறையை நீரும் அழித்ததேன் ஈசுரரே
என்னைக் கெணியாமல் இக்கலியைச் செய்ததினால்
நன்னமிர்த ஈசுரரே நம்மாலே கூடாது
அழிப்பதுவுங் கலியை அங்கல்லால் கூடாது
விழிப்பதென்ன நம்மாலே விசாரமிடக் கூடாது
நம்மாலே யொன்றும் நடவாது ஈசுரரே
சும்மாவென் னோடிருந்து சோலிபண்ண வேண்டாங்காண்
உகத்துக் குகங்கள் ஓடித்திரிந் தலைந்து
மகத்துவமாய்ச் சந்து சதைமுறிந்து நோகுதையா
தூங்கி விழியாமல் திமிர்ப்போல் சரீரமது
ஏங்கிமிக வாடுதப்பா என்திருவைக் காணாமல்

பாவிகள் பண்ணிவிட்ட பாட்டைமிக எண்ணுகையில்
ஆவி மிகவாடி அங்கமெல்லாஞ் சோருதையா
அந்தமுழுப் பாவிகளில் அதிகமுழுப் பாவியிவன்
சந்ததிக்குத் தாய்தகப்பன் தாழ்ந்துநின் றேவல்செய்தால்
கொடியவனோ பாவி கொஞ்சமிஞ்ச மோயிவன்தான்
முடியுமோ பாவி யுத்தமிடச் சென்றதுண்டால்
தன்ம மறியாத சண்டித்தடி மூடர்கையில்
நம்மைப் பிடித்தங்கே நகட்டிவிட வேண்டாங்காண்
பட்ட அடிவூறப் படுத்திருக்கப் போறேனான்
ஒட்டொழிய என்னை ஒடுக்கிவிட வேண்டாங்காண்
என்றாதி நாரா யணர்தானு மிப்படியே
அன்றாதி நாதன் அவரோ டிதுவுரைக்கச்
சிவனு மிகவயர்ந்து செப்புவார் மாயருடன்
புவன மதற்குடைய பொன்னே யென்மாதவமே
இப்படித்தான் மைத்துணரே ஈதுரைத்தீ ரானாக்கால்
எப்படித்தா னானும் ஏகம தாளுவது
சுவரல்லோ மைத்துணரே சித்திரம் நாங்களல்லோ
கவரல்லோ நாங்கள் கயமல்லோ மைத்துணரே
மாயனல்லோ எங்களுக்கு மலையல்லோ மைத்துணரே
ஆயனல்லோ எங்களுக்கு அணையல்லோ மைத்துணரே
கொப்பல்லோ நாங்கள் குருவல்லோ மைத்துணரே
செப்பல்லோ மைத்துணரே சிமிள்கூடு நாங்களெல்லாம்
நீர்தானு மிப்படியே நெகிழ்ந்தமொழி சொன்னதுண்டால்
ஆர்தானு மெங்களுக்கு அணைவுமொழி சொல்லுவது
மூடிப்படிக் குலுங்க மயங்காதோ கொப்பதெல்லாம்
கூடிப்படிக் குலுங்க குலையாதோ சீவனது
தேவர்முனி சாஸ்திரிகள் சிறுபுத்தி யைக்கேட்டு
மூவருன்னைப் பாராமல் முனிந்துசெய்த ஞாயமெல்லாம்
பொறுத்தருளு மென்னுடைய புண்ணிய மைத்துணரே
மறுத்துரைத்தால் நானுமினி வகுத்துரைக்க ஞாயமில்லை
எல்லாம் பொறுத்து இனியுமக்குத் தேர்ந்தபடிச்
சொல்லொன் றுக்குள்ளே செலுத்தியர சாளுமென்று
ஈசுரனார் சொல்ல எம்பெருமா ளேதுசொல்வார்
வீசுபுக ழீசுரரே விரித்துரைக்க நீர்கேளும்
என்னையுமோ கீழுலகில் இறந்துகிடந் தாரெனவே
சொன்னவரை யெல்லாம் சுறுக்காகத் தானழையும்
என்றந்த மாயவனார் இப்படியே சொன்னவுடன்
அன்றந்த ஈசுரனார் அழைத்தா ரவர்களையும்
உடனேதான் தேவர்முனி ஒக்கப் பயமடைந்து
தடதடென ஓடிவந்து தாழ்ந்துநமஸ் காரமிட்டு
அப்போது மாயவனார் அவர்கள் தமைப்பார்த்துச்
செப்புகிறா ரையா திருக்கண் பொறிபறக்கக்
கண்கள் சிவந்து கருமேனி தான்விறைத்து
விண்க ளதிர வெடுவெடெனக் கோபமுற்றுத்
தேவர் திணுக்கிடவே தெய்வமுனி தான்பதற

மூவர் திணுக்கிடவே உரைக்கிறா ரெம்பெருமாள்
மண்திண் ணெனவே மலைகள் பொடிபடவே
திண்திண் ணெனவே தேவர் மிகப்பதறச்
சிவனுங் கிடுகிடெனச் சிவனுமை யும்பதற
நமனும் பதற நாரா யணருரைப்பார்
தேவரே வானவரே தெய்வமுனி சாஸ்திரியே
மூவரே நானும் ஒளித்ததெங்கே சொல்லுமென்றார்
சாகக்கிடந்த தெங்கே தப்பி ஒளித்ததெங்கே
போகக்கிடந்த தெங்கே போனதெங்கே சொல்லுமென்றார்
ஆளுக்கொரு மூப்பாய் அரியிங்கே யில்லையென்று
கோளுரைத்தீரே யீசர் குருமுன்னே நீங்களெல்லாம்
சாத்திரத்தைப் பார்த்துச் சரியாகச் சொன்னதிட்டச்
சூத்திரத்தை யெல்லாம் சொல்லுமென்றா ரெம்பெருமாள்
சொல்லநா வில்லாமல் சோர்ந்துமிகத் தேவரெல்லாம்
பல்வாய் சுண்டொல்கிப் பதைபதைத்து நின்றனரே
கண்தலை கவிழ்ந்து கால்பேர்த்து வைக்காமல்
விண்கவிழ்ந்த யோகமுனி வெட்கிநின்றா ரன்போரே
நின்ற நிலையறிந்து நெடியபர மேசுரரும்
அன்றெந் தனோடே அறம்பாடிச் சொன்னதெல்லாம்
இன்றெங்கே போச்சுதுகாண் இரண்டும்மிகச் சொல்லாமல்
நின்றிங்கே நீங்கள் நினைவயர்ந்து நிற்பதென்ன
பேச்சுப்பே சுங்கிளிக்குப் பின்பூனை நாட்டமுற்றால்
சீச்சுக்கீச் சென்றுகிளி கீழ்ப்பதுங்க வேண்டியதேன்
அன்றுநீர் சொன்னமொழி அயர்த்துமிகப் போனதென்ன
இன்றுநான் கண்டிலனே இதற்குமுன் னுள்ளதிறம்
இப்படியே ஈசர் எடுத்துரைக்கத் தேவரெல்லாம்
எப்படிநாம் சொல்வோம் என்றே திகைக்கலுற்றார்
எல்லா மறிந்து எடுத்துரைப்பா ரெம்பெருமாள்
பொல்லாதார்க் கெல்லாம் பிறப்பொன் றிசைந்திருக்கு
சொல்லுகிறேன் நானுமொன்று சொல்லுவதைக் கேட்பீரோ
நல்லதுதா னென்று நாட்டமுற் றெல்லோரும்
அப்போது எம்பெருமாள் ஆதிசிவ மோடுரைப்பார்

விளக்கம்:

## நாராயண மூர்த்தியிடம் சிவன் பதில் உரைத்தல்

அதிர்ச்சியில் உறைந்து நின்று ஈஸ்வரர் பணிவாக அச்சுதரை பார்த்து, பாசத்தோடு திருவாய் மலர்ந்து கூறுகிறார். பாருலகம் காத்த பார்வேந்தர் பச்சைமாலே! உம்முடைய கோபத்தை தணித்து நான் சொல்வதை கொஞ்சம் கேட்க வேண்டும். கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய முதல்வரே! கருங்கடலுக்குள் இருந்து உமது கைப்பிடி மண் கொண்டு வந்து, இந்த பாருலகம் படைத்த பச்சைமால் அச்சுதரே! நீர் தானே இந்த உலகத்தின் முதல் ஆதாரமும், அச்சாணியுமாய் திகழ்பவர்.

ஆதிபரம்பொருளாய் அமைந்தவர். அகிலம் அளந்தவர். அனைத்துயிர் காப்பவர். நீர் கோபப்படுவது நியாயமா? நாங்கள் கொள்ள வேண்டமா!

பொறுமையாய் வாழ கற்று தருபவர் அல்லவா? அகிலம் அனைத்தையும் காப்பவர் கோபப்படுவது நியாயமா? மக்களை காக்கும் மகாசக்தி படைத்தவர் அல்லவா? எப்போதும் கயவர்களால் ஏற்படும் துன்பங்களை அழிக்கும் சக்தி உம்மிடம் தான் இருக்கிறது. அதை தடுத்து நிறுத்தும் விதியும் உமக்குத்தான் உள்ளது. இதை மாற்ற யாரால் முடியும்.

ஆதி உலகம் உம்மால் தோன்றியது போல் உம்மோடு நானும் ஒன்றாக அவதரித்து, நான் ஆதி சிவன் என்றும், ஆதி நாராயணர் என்றும், இருவரானாலும் அரியும், சிவனும் ஒருவரானோம்! ஆனால் அந்த காலகட்டத்தில் உள்ள சாபம் ஒன்று உண்டு என்று நான் சொல்லி இருக்கிறேனே! அன்புள்ள மைத்துணரே! எனவே அவசரம் வேண்டாம். அந்த சாபம் எப்படி வந்தது என்று உம்மிடம் விவரமாக சொல்கிறேன். கேளும் மைத்துணரே! என்று கூறலானார். குறோணி என்ற ஒரு அசுரன் கொடூர குணம் கொண்ட கொடும்பாவி ரத்தமும் சதையும் கலந்த அகோர தன்மையுடன், அகில உலகத்தையும் சேர்த்து விழுங்கும்படி காணப்படுவான்.

கைலாய மலையை அவன் வசப்படுத்தி அமைதியாக இருந்த என்னையும் உமது அன்பு தங்கை பார்வதியையும் சேர்த்து விழுங்குவான். அப்போது உம்மால் நாங்கள் தப்பி போக வழி பிறக்கும். நீர் தான் எங்களை பாதுகாப்பீர் என்று மட்டுமே சொல்லி இருந்தேன். அந்த நிலையானது உருவாகிய நேரம், மாயப்பெருமாள் ஆகிய நீர் மட்டும், உம்முடைய மந்திர சக்தியால் அங்கிருந்து பூலோகம் சென்று தவம் பொருளாகிய என்னை நினைத்து அந்த குறோணி என்ற அசுரனை ஆறுத்துண்டுகளாக வெட்டி அழிப்பதற்காக (அதாவது மனிதருக்குள் ஏற்படுகின்ற முக்கியமான ஆறு அகப்பகைகளை) நேர் தவமே சிறந்த வழி என்று வேண்டி கடும் தவம் நின்றீர் ஞாபகம் உள்ளதா? திருமாலே! தெட்சணத்தில் தேர் ஏறும் பெருமானே!

நீர் மேற்கொண்ட கடும் தவத்தினால் என் மனம் உருகி உமக்கு நான் காட்சி தந்து என் அன்பு மைத்துணரே! உமக்கு எப்படிப்பட்ட வரங்கள் வேண்டும் என்று கேட்டேன்? இரக்க குணம் படைத்த கோபாலரே! இனிமையான இசையில் பசுவையும் கன்றையும் கூட்டு சேர்த்து கொண்டு சேர்க்கும் நீர் பசுவிடம் காட்டும் அன்பையும்,கருணையையும் என்னிடம் காட்டினால் என்ன குறைந்து போகும் என்று வாய் திறந்து என்ன வரம் வேண்டும் என்று மறுபடியும் கேட்டேன்? அதற்கும் பதில் சொல்லவில்லை .

பிறகும் மௌனம் கலைந்து கேட்ட வரங்கள் எப்படிப்பட்டது தெரியுமா? நான் கேட்கும் வரங்கள் என்னவென்றால் அந்த கொடூரமான குறோணி என்ற அசுரனை ஆறுத்துண்டுகளாக வெட்டி அழிப்பதற்காக, அதனுடைய சக்திக்கு, மேலான சக்தி எனக்கு தந்து வெற்றி பெறும் படியும், பின் அவனுடைய தீய எண்ணங்களையும், செயல்களையும் அழித்து ஒழிக்கும் பலம் வாய்ந்த சக்தியை தருமாறு கேட்டவுடன் அப்போதே நான் தந்து விட்டேன் என்று நான் உம்மிடம் அப்போதே கூறினேன், இப்படி இந்த குறோணி என்ற தீயச் சக்தியை ஆறுதுண்டுகளாக கூறு போட்டால் அந்த ஆறு துண்டுகளும் ஆறு யுகங்களாக பிறவியெடுக்கும். யுகாயுகங்கள் தோறும் நீர் அவதரித்து அந்த தீய சக்தியை அழிக்க வேண்டும் என்றேனே! என் அன்பு மைத்துணரே!

ஆகையால் தான் அதில் உள்ள ஆறு துண்டுகளும், தனித்தனியாக ஒவ்வொரு யுகமும் ஒவ்வொருவராக தீமையான சக்திகளை தன்னகத்தே கொண்டு பிறந்தார்கள். இவ்வாறு தோன்றிய தீயச்சக்தியானது, உலகம் அத்தனையும் ஆட்கொள்ளும் சக்தியோடு தொடர்ந்து, உமக்கு மிகவும் எதிராக செயல்படும் உமக்கு கோபத்தை ஏற்படுத்தும் கொடியவனாக தோன்றுவான். சீறிப்பாயும் சிங்கத்தை போல அத்தனைக் கொடூரக் குணம் கொண்டவன் என்று சொல்லி நான் உமக்கு வரம் தந்தேன். நான் தந்த வரம் தான் சாபம் ஆகும். அதுதான் உமக்கு வீரம் தந்தது.

ஈஸ்வரர் என்றால் சும்மாவா? நான் தந்த வரத்தின் வலிமையும், அந்த மகிமையும் தான் உனக்கு சக்தி தந்தது தெரியுமா? ஆகையால் தான் ஆறு யுகங்களையும் கடந்து வந்தீர். ஏன் இந்த முறை , இந்தக் கலியுகத்தில் நான் பாடுபட்டேன், நான் தான் கஷ்டப்பட்டு கர்மத்தை சுமந்தேன் யாரும் வரவில்லை, எனக்கு துணை நிற்கவில்லை என்று பழிச் சுமத்துகிறீர்? தேவை இல்லாமல் என் மீது வருத்தப் படுகிறீர்? காரணம் யார்? பதில் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேட்டார் சிவன்.

அப்படி சிவன் ஆதியிலிருந்து கலியனுக்கு முன் வரை உள்ள கதைகளை விபரமாக கூறிய உடன் மகாவிஷ்ணு சமாதானம் அடைந்து உள்ளத்தில் ஏற்பட்ட சலனத்தை போக்கி அமைதியாக மைத்துணரே! நான் அப்போது உம்மிடம் கேட்டது மிக கடினமான வரங்கள் தான் நானும் ஒப்பு கொள்கிறேன். ஆனால் மனசாட்சி இல்லாத கலியனை பிறவி செய்கின்ற போது , என்னிடம் ஒரு வார்த்தை கூட கேட்காமல் வரைமுறைகளை அழித்து விட்டீரே! இதற்கு முன்பு பிறவி செய்த ஆறு யுகங்களையும் என்னிடம் கலந்து ஆலேசனை செய்யாமல் எதையாவது செய்ததுண்டா? தனிப்பட்ட முறையில் ஒதுங்கி இருந்து துன்பத்தை தானாக உருவாக்கக்கூடிய செயலை நீங்கள் செய்தீர்களா? இல்லையா?

முன் யுகத்தில் என்னிடம் கலந்து ஆலோசித்ததை போல், இந்த கலியுகத்தை பிறவி செய்த காரணத்தை என்னிடம் கேட்காமல் செய்தது ஏன்? பழைய விதிமுறைகளை மீறி செயல்பட்டு ஒழுங்குமுறைகளை அழித்தது ஏன் மைத்துணரே? தானாக முடிவெடுத்து செய்ததால் என்னால் இந்த கலியனை அழிக்க கூடிய பொறுப்பு ஏற்று கொள்ள முடியாது. கலியனை அழிப்பது என்றால், அவ்வளவு சுலபமான செயல் கிடையாது. இந்த துஷ்டர்களையும் , அதன் சக்திகளையும் உருவாகும் போதே வேரோடு பிடுங்கி எறிந்து அழித்திருக்க வேண்டும். இப்போது கலி தளிர்விட்டு படர்ந்த பின்பு என்ன செய்வது? என்று என்னிடம் கூறுவது நியாயமில்லை என்று நாராயணர் கூறினார்.

வேறு தந்திரமான வழிமுறைகளும் எனக்கு தெரியவில்லையே! எனவே இந்த காரியத்தை செய்ய என்னால் முடியாது மைத்துணரே! என்னை விட்டுவிட வேண்டும் என்றார். நீர் வருத்த படாமல் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு என்னை வேலை வழங்குவது நியாயமில்லை. முன் வந்து அரக்கன் எல்லோரையும் அழிப்பதற்கு அலைந்து திரிந்து அடியோடு ஒழித்தேன். ஆனால் இது பெரும் சிக்கலானது அத்தனை பேரையும் அழிக்கப்பட்ட பாடு போதும். இப்போது இது எனக்கு தாங்க முடியாத சோர்வை உண்டாக்கி என்னை திணற செய்கிறது. ஆகையால் மைத்துணரே! நான் நன்றாக அயர்ந்து தூங்கி

ஒய்வெடுக்க வேண்டும். இத்தனை காலமும் ஒய்வே இல்லாமல் இருந்ததால் என் உடம்பு புண்ணாகி, மன அழுத்தம் கொடுத்து காணப்படுகிறது. வைகுண்டம் செல்ல வேண்டும் என்று உடலும் உள்ளமும் ஏக்கத்தோடு வருந்துகிறது.

மகாலட்சுமியை விட்டு பிரிந்து காலம் அதிகமாகிவிட்டது. கொடும்பாவிகளை ஒழிக்க நான் அனுபவித்த கொடுமைகளை சிந்தித்து பார்க்கும்போது மனம் மிகவும் வருத்தம் கொள்கிறது. உயிர் போய் திரும்பி வந்தது போன்ற உடல் கஷ்டமும் தெரிகிறது. ஆறு யுகங்களிலும் தோன்றிய பாவிகளை விட இந்த பாவி முழு பாவியாவான். அவர்களை விட அதிகமாக சக்தி உடையவன். இந்த கொடிய பாவியிடம் சண்டையிட்டு தப்பி கொள்ள முடியாது. போராடி போராடி என் உடல் உறுப்புகள் தளர்ச்சியானது. தர்ம நெறிதவறி வம்பு செய்கின்ற விவஸ்தை கெட்ட மூடனின் பக்கம் நெருங்க மனமில்லை.

நான் அவமானம் படும்படியாக பொறுப்பை நீங்கள் என்னிடம் ஒப்படைத்து விட்டு வேடிக்கை நாடகம் பார்க்க வேண்டாம் மைத்துணரே! நான் மாட்டேன். அடிபட்ட காயங்கள் குணமடைய நான் இளைப்பாற செல்கிறேன். உம்மோடு ஒட்டும் உறவும் இல்லாமல் என்னை தனியாக விட்டுவிடும், உம்மோடுள்ள உறவு வேண்டாம் என்றார் நாராயணர்.

இவ்வாறு தான் பட்ட கஷ்டங்களையும், தன்னுடைய வருத்தமான மனநிலையையும் ஆதிநாராயணர் ஆதி சிவனிடம் மிகத் தெளிவாக சொன்னதை கேட்ட சிவபெருமான் மிகவும் மனம் சோர்வுற்று, நெடியமால் நாராயணரைப் பார்த்து, பொன்வாய்திறந்து பொன்மொழியாக கூறுகிறார். திருமாலே! பதினான்கு உலகத்தையும் பாதுகாக்கும் பொறுப்புடைய, பொன்போன்ற பொற்பதமே! என் மாதவத்தின் மாணிக்கமே! என் அன்பு மாதவனே!

இதுபோன்ற வீண் வார்த்தைகளை பேசி காலத்தை வீணாக்கினால் கலியனை எப்போது அழிப்பது? அவனை அடியோடு அழித்துவிட்டு நாட்டை ஆட்சிச் செய்ய வேண்டாமா? நீர் உறுதியான சுவர்போல் நின்றால் தானே, நான் அதில் விளங்கும் சித்திரம் போல் காட்சி தந்து செயல்படுவேன். பாய்ந்து ஓடும் நதிகள் நாங்கள் என்றால் அதில் ஒன்றாக கலந்து சங்கமிக்கும் பெருங் கடல் நீர் அல்லவா? கடலுக்கு கலக்கம் உண்டோ? கிடையாது. எங்களுக்கு மலையல்லவா மைத்துணரே! மனமிரங்க வேண்டாமா? கல்லாய் இருந்தாலும் காட்சி தர வேண்டாமா? ஊழிக் காற்று கூட அசைக்க முடியாதபடி ஏகமாய் நிற்பவர் நீரல்லவா?

முப்பொருளும் ஒரு பொருளாய் தாணுமாலயன் என்ற பெயர் பெற்று பெரும் புகழ் கொண்டவர் அல்லவா? ஆறுதல் தந்து அரவணைக்க வேண்டாமா? அதில் அமரும் பறவைகள் போன்ற வடிவம் தானே நாங்கள். மரம் சரிந்துப் போனால் பறவைகள் கதி என்னவாகும்? அதுபோல நாங்கள் அவதிப்படலாமா? நீர் செப்பல்லவோ மைத்துணரே! சிமிழ் கூடுதானே நாங்கள். செப்பு அசைந்தால் சிமிழ் கூடுப் பாரம் தாங்காமல் சிதைந்து விடுமே திருமாலே! அது போல் நீர்

கோபம் கொண்டு ஓடிவிட்டால் எங்கள் நிலை தாங்குமா? மனம்தான் பொறுக்குமா? மாயவரே! உயர்ந்த தன்மை உடைய நீர் உயர்வான நிலையில் இருந்தும், நாங்கள் பதறும்படியாக நீர் வைகுண்டம் போய்விடுவேன் என்றால் எப்படி? என்னால் முடியாது என்றுக் காலம் கழித்தால் தவறாகிவிடும்.

வேறு யாரால் எங்கள் தயக்கத்தை போக்கி ஆறுதல் தந்து அடைக்கலம் தர முடியும். உம்மால் மட்டும் தான் முடியும். மரத்தின் வேர் மண்ணுக்குள் கெட்டியாக இருந்தால்தான், கிளைகளும் இலைகளும், பசுமையுடன் தளிர்விட்டுச் சில்லென்று பூத்து குலுங்கி மணம் கமழும். வேர் ஆடி போனால் மரம் சாய்ந்து போகும். வற்றாத நதிகள் எல்லாம் வளமான சமுத்திரத்தை கண்டு ஆறுதல் பெறும். அந்த சமுத்திரமே வற்றி போனால் எங்கு சென்று அடைக்கலமாகும்.

அதேபோல் இந்த கலியின் கொடுமையால் சிக்கி தவித்து, எத்தனை நாள் உயிர்வாழ்வது, மறுப்பு தெரிவித்தால் நாங்கள் என்ன செய்ய முடியும். தேவர்கள், முனிவர்கள், வேத சாஸ்திரம் சொல்லும் வல்லுநர்கள், காலத்தை குறிக்கும் அறிவுரையை சொன்னதால், அதை நாம் கவனத்தில் கொண்டு மும்மூர்த்திகளும் பொறுப்பாக இருக்கின்ற உண்மை எதிர் நோக்காமல் துணிந்து கலியை பிறவி செய்து தவறைச் செய்துவிட்டேன். பொறுமை உள்ள பெரும் பெருந்நிதியே! என் தவறைப் பொறுக்க வேண்டும் என்றார் சிவபெருமான்.

செய்த தவறுகளை மன்னித்து இதற்கு மேல் என்ன செய்ய வேண்டுமோ? அதை நீரே முடிவு எடுத்து, “ஒரு குடையின் கீழ்” என்ற ஒரு வார்த்தைக்குள் நீர் ஆட்சி செய்ய வேண்டும், என்று சமாதானம் கூறினார் சிவபெருமான். இப்படியே சிவபெருமான் கேட்ட சொன்னதை பரம்பொருளான நாராயணர் சிவபெருமானிடம், உலகமெங்கிலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்ற சிவபெருமானே! நான் சொல்வதை கேளும்.

நான் பூலோகத்திற்கு யுகா யுகங்கள் தோறும் அவதாரங்கள் எடுத்து அரக்கர்களை அழிக்க சென்ற போது என்னை, நாராயணர் பூலோகத்தில் இறந்து கிடக்கிறார் என்று அலட்சியமாக பேசி அவமதித்த அவர்களை எல்லாம் வேகமாக வருத்தும், அவர்களிடம் கேட்போம் என்றார் மாயபெருமான். உடனே சிவபெருமான், திருமால் வார்த்தைக்கு மதிப்பு அளித்து நமக்கு துணை புரிவார் என்று எல்லோரையும் அழைக்க எண்ணம் கொண்டார்.

மாயபெருமாள் அவசர அழைப்பு விட்டவுடன், அதற்கு மறுப்புச் சொல்லாமல் சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்தார் சிவபெருமான். எல்லோரும் உடனே தாமதிக்காமல் வந்தார்கள். பூலோகத்தில் இறந்து கிடக்கிறார் என்று அவமரியாதையாக பேசிய தேவர்கள், முனிவர்கள், சாஸ்திர வல்லுநர்கள் பயந்து நடுங்கி தடபுடலாக பதட்டத்தோடு வந்து சிவபெருமானையும், திருமாலையும் வணங்கி திகைத்துப்போய் நின்றவர்களை மாய பெருமாள் பார்த்து அவருடைய சிவந்த கண்களால் நோக்கிய படியே கோப கனல் பறக்கும் வகையில் நின்றார்.

செங்கண் மால் உடைய கண்களில் அக்னி சுவாலைகளாக காணப்பட்டது. கார்மேக வண்ணர் உடல் நீல நிறமாக மாறி வீராப்பு கொண்டது. அனைவரும் அதிர்ச்சியடையும் படி வெடுவெடுவென்று கடும் கோபம் கொண்டு நின்றதை கண்ட தேவர்களும், முனிவர்களும் தடுமாறி திணறி நின்றார்கள். மூன்று மூன்று லோகங்களும் திடுக்கிடும் படியாக கோப கனல் பொங்க எம்பெருமான் நாராயணர் வாயை திறந்தார்.

பூலோகம் திண்டாடி மலைகளெல்லாம் பொடுபொடென்று பொடிவது போல காணப்பட்டது. மாய பெருமானாகிய திருமாலை பார்த்து தன்னுடைய செயல்பாட்டை இழந்து நின்ற நிலை குறித்து என்ன நடக்குமோ? என்று கலங்கி நின்றார்கள். அதை கண்ட பார்வதியும் சிவனும் என்ன நடக்குமோ என்று கிடுகிடுவென நடுங்கி பதட்டம் அடைந்தார்கள். சிவகணங்களும், தேவ கணங்களும் கூட பயந்து நின்றார்கள்.

அவர்கள் அனைவரையும் பார்த்து நாராயணர் நான் பயந்து போய் ஒளிந்து இருந்தது எங்கே? என்று என் முன்னால் சொல்லுங்கள் பார்ப்போம். நான் சாகக்கிடந்த இடம் எது? என்று சொல்ல வேண்டும் நான் தப்பி ஓடி ஒளிந்தேனா? நான் மறுபிறவி எடுக்க எங்கே இறந்து கிடந்தேன். சிவபெருமானிடம் சொன்னீர்கள் என்று நான் அறிந்தேன் உண்மையா? அதை இப்போது என் முன்னால் சொல்லுங்கள் என்றார்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான உங்கள் சொந்த கருத்தை கொண்டுத் திருமால் பூலோகத்தில் இறந்து கிடக்கிறார் என்று ஏளனமாக நகைத்ததும், இல்லாதவைகளை சிவபெருமானிடம் சொல்லி இருக்கிறீர்களே! அது எந்த சாஸ்திரத்தை பார்த்து என்னை இழிவாக பேசிய அந்த சாஸ்திரத்தை என்னிடம் காட்டுங்கள். அதை நான் பார்க்க வேண்டும். நீங்கள் கூறிய சூத்திர கணக்கு மீண்டும் ஒரு முறை பார்த்து சொல்லுங்கள் என்றார்.

திருமால் கேட்டதற்கு மூன்று லோகத்திலுள்ளவர்களும் பதில் சொல்ல முடியாமல் தன்னுடைய நாக்கின் தன்மையை இழந்து, வாய் பேச முடியாமல் வாய்மூடி, மனம் பதறி கொண்டு பேச முடியாமல் நாணத்தோடு ஒருவர் பின் ஒருவர் முகத்தை மறைத்து தலைகுனிந்து நின்றார்கள்.

வாய்மூடி கோழையை போல் நின்று ஊமையைப்போல் மௌனம் புரிந்தார்கள். யோக சாஸ்திரம் முனிவர்கள் எல்லாம் திருமாலுடைய எதிரில் நின்று முகம் பார்த்து பேச சக்தி இல்லாமல் வெட்கத்தால் தலைகுனிந்து அதிர்ந்து போய் நின்றார்கள்.

அவர்கள் திட்டமிட்ட செயல்களையும், சூழ்நிலைகளையும், சூட்சும நிலைகளையும் புரிந்து கொண்ட ஓங்கி உயர்ந்த பரமசிவம், அவர்களிடம் எல்லோரும் அன்று என்னிடம் அறநெறி நூலை பார்த்து சொன்ன கதையெல்லாம் என்னாச்சு.அபாண்டமான மொழிகளை அடுக்கடுக்காகப் பேசினீர்களே! இப்பொழுது வாய் பேசாமல் நின்றால் எப்படி ? உங்களுக்கு திருமால் எதிரில் பேச தைரியம் இல்லையா? ஆம், இல்லை என்றுப் பதில் கூற முடியாமல் அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கக் காரணம் என்ன?

பூனைக்கு பயந்த கிளியை போல் உயிர் பயம் உண்டாகி குரல் வெளிவராமல் வாயை அடைத்து ஒதுங்கி நிற்க காரணம் யாது? என்னிடம் பேசியவர்கள் இன்று எங்கே? தைரியமாய் சொல்ல வேண்டியதுதானே? அன்று திறமையோடு, பேசிய தைரியமான பேச்சு எங்கே போனது? உள் ஒன்று பேசி புறம் ஒன்று சொல்லுவார் உறவு கலவாமை வேண்டும் என்பதற்கு இணங்க, உங்கள் பேச்சை கேட்டு நான் தவறிழைத்தேனே! நீங்கள் வஸ்திரத்தை கொண்டு நேத்திரத்தை மறைத்து கொண்டவர்கள் போல் மறைந்து நிற்கிறீர்களே! நேரடியாக நின்று பேசுங்கள் என்றார் சிவபெருமான்.

இப்படி பல கேள்விகளை கேட்டதும் தேவலோகத்தில் உள்ளவர்கள் அனைவரும் பதில் கூற முடியாமல் உள்ளம் பதறி எப்படி சொல்வதென்று தவித்தனர். திருமால் அவர்களை கண்டு நன்றாக அறிந்து கொண்டு ஒரு உபாயம் கூறினார். கள்ளம் கபடம் கூறியதால் உங்களுக்கு சரியான தண்டனை உண்டு. நீங்கள் சாஸ்திர நிலைகளை தவறாக பார்த்து தப்பான முறையில் என்னை யார் என்று புரிந்து கொள்ளாமல் பேசியதால், பூலோகத்தில் ஒரு பிறவி எடுக்க வேண்டியிருக்கிறது என்றார்.

திருமால்,கூறியது புதுமையானது என்றாலும், திருமாலிடம் பணிவாக தெய்வலோகத்தவர்கள் இறைவா! ஈ, எறும்புகளும் உமது படைப்பில் இன்பம் காணுதே! அதனால் எங்கள் பூலோகப் பிறவியும் நன்மையாகவே தான் இருக்கும் என்று எல்லோரும் ஆர்வமாக இருந்தார்கள். வருவது எல்லாம் நன்மைக்கே ஒன்றை பெற வேண்டுமென்றால் மற்றொன்று இழக்க வேண்டும் என்று எண்ணம் தெளிந்தார்கள்.

**********

# DAY 35

## சிவன் திருமால் ஐக்கியம்

இப்போது கேட்பீரோ யான்சொல்லும் நியாயமது
என்றுதிரு மாலுரைக்க எடுத்துரைப்பா ரீசுரரும்
மன்று தனையளந்த மாலேயென் மைத்துணரே
வாரு மெனஅழைத்து மாலோன் தனையிருத்திச்
சீருடனே வேதாவும் சிவனும் உமையாளும்
எல்லோருங் கூடி இருந்தந்த மாயவரின்
நல்லா யருகிருத்தி நவிலுவார் சத்தியமாய்
இதற்குமுன் செய்த இழிவெல்லாம் நீர்பொறுத்துக்
கதுக்காக வும்முடைய கருத்தின் படியாலே
நடக்கும்படிச் சட்டமெல்லாம் நாரணர்க்குத் தந்தோங்காண்
அடக்குடக் கெல்லாம் ஆதிக்குத் தந்தோங்காண்
இன்றுமுத லும்முடைய இச்சைபோ லேநடத்தி
என்றும் நடத்திக்கொள்ளும் என்றே விடைகொடுத்து
சட்டமெல் லாமுமக்குத் தந்தோ மினிநீர்தான்

இட்டசட்ட மீறி இனியொருவர் செய்யோங்காண்
உம்மை நினையாமல் உக்கலியைச் செய்ததினால்
நம்மை வரைநீர்தான் நடத்தும் படிநடத்தும்
என்றந்த ஈசுரரும் ஏற்ற உமையாளும்
அன்றந்த வேதாவும் அமரர்முனி தேவர்களும்
சத்திய மாகத் தானுரைத்தார் நாரணர்க்கு
மத்திய நாதன் மனமகிழ்ந் தேதுசொல்வார்
நல்லதுதா னென்று நாட்டமுற் றெம்பெருமாள்
வல்ல பரமே சுரரோ டேவகிர்வார்
கன்மம்போ லொத்தக் கலிப்பிறப் பானதினால்
நம்மள் முதல்மாறிப் பிறக்கநா ளாகுதுகாண்
ஆனதா லீசுரரே அருளுகிறேன் நீர்கேளும்
ஈனமுள்ள பாவி இயன்றதுரி யோதனனைக்
கொன்றே னவனைக் குருநாடை வர்க்கீந்து
முன்னே மறையோன் மொழிந்தசா பத்தாலே
தேவர்முதல் வானோர் தேவமுனி தான்வரையும்
மூவ ருறையும் உற்றதெய்வ லோகமேழும்
மேலோர்க ளெல்லாம் மேதினியி லென்றனக்குப்
பூலோகந் தன்னில் பிள்ளையென வேபிறக்க
வேணுமென்று மாமுனிவன் விட்டசா பத்தாலே
தாணுவே நீரறியத் தாம்பிறந்தார் சாணாராய்
ஏழுலோ கமதிலும் ஏற்றமுள்ள வித்தெடுத்துக்
கீழுலகில் பெற்றேன் கீர்த்தியுள்ள சாணாராய்ப்
பெற்றுவைத்து ஸ்ரீரங்கப் பூமியிலே போயிருந்தேன்
மற்றுஞ்சில நாட்கழித்து வாழுந் தியதிதனில்
அனந்த புரம்நோக்கி யானேகும் வேளையிலே
புனந்தனிலே நின்று புலம்பலுற்றார் தேவர்களும்
தெய்வலோ கத்திலுள்ள தேவதே வாதிகளும்
வைகுண்ட லோகமதில் வாழுகின்ற தர்மிகளும்
சிவலோகம் வாழும் சிட்டர்முதல் வானவரும்
தவமான வேதாவின் தன்னுகத்தில் வாழ்பவரும்
வடகயி லாசமதில் வந்திருந்தார் வாட்டமதாய்
நடக்கும் வழியில் நானவரைக் கண்டேதான்
தாது கரமணிந்த தானவரே தர்மிகளே
ஏதுகா ணீங்கள் இங்குவரக் காரணமேன்
என்றவரோ டேகேட்டேன் ஈசுரரே கேட்டருளும்
அன்றவர்க ளென்னோடே அருளினதை நீர்கேளும்
கலியன் பிறந்ததினால் கட்டழிந்து மானுபங்கள்
சலிவாகி எங்களுட தானதவங் குன்றினதால்
இனியிருந்தா லென்னபலன் என்றுமிக எண்ணமுற்றுக்
கனிந்து வுமைத்தேடிக் காணவந்தோ மென்றுரைத்தார்
அப்போது வுங்களுக்கு ஆகவேண் டியவளம்
இப்போதே சொல்லும் என்றேகேட்டேன் தேவருடன்
சொல்லுகிறா ரந்தத் தேவர்கள்தா மீசுரரே
நல்லதுதா னிந்த நாட்டில்கலி வந்ததினால்

கலிக்குமுன் னுள்ளதுவும் கலியில்மிகக் கண்டதுவும்
அலிக்கிய மானதினால் அக்கலிமா ளும்போது
சிவசத்தி தான்முதலாய்ச் சீவனுள்ள செந்துகளும்
தவமுனிவ ராகிடினும் தரணி புற்பூண்டுவரை
மட்டை மருந்திலையும் மலைகடலும் வாசுகியும்
திட்டமுடன் நாரணர்க்குச் சிந்தையொத்த பேர்களெல்லாம்
மேனி யழுக்கறுத்து மேன்மூ டிருளறுத்து
யோனிப் பிறப்பும் உற்றலிங் கப்பிறப்பும்
அவரவர்க் குள்ள அதிகப் பிறப்போடும்
எவரெவர்க்கும் பூமியொன்றில் இனிப்பிறக்க வேணுமல்லோ
ஆகும் பிறப்பும் ஆகுவது மிந்நாளில்
சாகும் பிறப்புத் தவறுவது மிந்நாளில்
அப்படியே நீசன் அவன்பிறந்தத் தோசமதால்
எப்படியும் ரண்டிலொன்று ஆகுவது திட்டமுண்டே
ஆனதா லெங்களுட அக்கமதி லிப்போது
மானமாய்ச் சான்றோராய் வகிருமென்றா ரீசுரரே
கொஞ்சம் பொறுவுமென்று கூறிவந் தேன்முன்னமே
இஞ்சொல் பார்க்கும்போது இவ்வுலகி லுள்ளோரைப்
என்சொல் மொழியும் ஏற்றமுனி சாபமதும்
செம்மைசேர் கைலை சுவரில் எழுதினதும்
இம்மையில்லாப் பொய்யை இவர்கள் முதல் சொன்னதினால்
பிறவிசெய்ய ஞாயமுண்டு பி ழை மொழி சொன்னதினால்
திறவி முதற்பொருளே செய்தியென்ன சொல்லுமென்றார்
அப்போது ஈசுரரும் அச்சுதரைத் தான்பார்த்து
இப்போது மைத்துணரே யானென்ன சொல்வதுதான்
நீர்நினைத்த துபோலே நிச்சயித்துக் கொள்ளுமென்றார்
பாரனைத்துங் காக்கும் பரமே சுரருரைத்தார்
அப்போது பாரளந்த அய்யாநா ராயணரும்
முப்பொருளு மொன்றாய் ஒத்திருந் தேதுசொல்வார்

விளக்கம்:

திருமால் சிவன் ஐக்கியம்

எம்பெருமான் நாராயணர் மைத்துனர் ஆகிய சிவபெருமானை பார்த்து நான் சொல்வதை கேட்டு நீர் சரி என்று சம்மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று கேட்க, சிவபெருமான் சில விளக்கங்களை திருமாலிடம் கூற தொடங்கினார்.

உலகளந்த நெடுமால் நாராயணரே! என் பாசமுள்ள நாராயணரே! என்று அன்போடு அவர் அருகில் அமர செய்தார். அவர்கள் இருவரும் அமர்ந்த உடன் சிறப்புடைய பிரம்மாவும், சிவபெருமானும் பார்வதியும் சேர்ந்து அவர்களோடு அமர்ந்தார்கள். சிவபெருமான் நல்லெண்ணத்தோடு திருமாலிடம் அன்போடு பேசலானார். தீயோரை வெல்லும் சீர் கோவிந்தா! என் அன்புக்குரிய மைத்துணரே! இதற்கு முன் நடந்து முடிந்து விட்ட செயல்களை எல்லாம் மறந்து எங்களை மன்னித்து அருள் புரிய வேண்டும். உம்மிடம் கேட்காமல் கலியைப்

பிறவி செய்து உமக்கு இழிவான ஒரு நிலை உருவானதற்கு நாங்கள் மிகவும் வருத்தம் கொள்கிறோம்.

இனி மேல் நடப்பதெல்லாம் உம்முடைய விருப்பப்படியே முடிவெடுத்து செயல்பட எங்கள் விருப்பத்தை தெரிவிக்கிறோம். சட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் சாதாரண நிலைக்கு கொண்டு வர உமக்கு அதிகாரம் தந்து விட்டோம். இனி மேல் அதை நீர் அடக்கி அதிர வைத்தாலும் சரி, ஒடுக்கி உட்கார வைத்தாலும் சரி, எல்லா உரிமைகளும் ஆதிநாராயணரே உமக்கே தந்து விட்டோம். இனி நடப்பவை எல்லாம் உம்முடைய விருப்பம். எங்கள் வெற்றி, மற்றும் சான்றோர்களை காப்பாற்றுவதும் உமது அருள் தான். ஒருவரும் அதற்கு மாற்றம் செய்ய விரும்ப மாட்டோம்.

உம்முடைய ஆற்றலை அணு அளவு கூட சிந்தித்து பார்க்காமல் அவசரமாக கலிநீசனை படைத்த காரணத்தினால் எங்களை மன்னித்து எந்த ஆபத்தும் வராதபடி காப்பாற்றி, எதிரியே இல்லாமல் உம்முடைய கருணையால் காத்து நன்றாக நாளும் வழி நடத்தும் என்று நாராயணரிடம் சிவபெருமான் சொல்ல, அதற்கு அருகில் இருந்த பார்வதியும், பிரம்மாவும் மற்றும் கூடியிருந்த தேவர்களும் தேவ கணங்களும், மனிதர்கள் எல்லோரும் சம்மதம் தெரிவித்தார்கள்.

நாங்கள் சத்திய வாக்காக சொல்லுகிறோம். இனிமேல் நீதி, நேர்மை தவறி நடக்க மாட்டோம், என்று நாராயணரிடம் சத்திய பிரமாணம் செய்து கொடுத்தார்கள். உள்ளம் பூரிப்போடு சிவ பெருமான் கூறியதை கேட்டு சிவனும், விஷ்ணுவும் ஒருவரோடு ஒருவர் ஒன்றாக கலந்து மகிழ்ந்து பேசி ஐக்கியமாகினர். அதன் பிறகு செயல்பட தொடங்கினார் மாயப்பெருமாள்.

சர்வ வல்லமையுள்ள நாராயணர், சர்வ சக்தியுள்ள சிவபெருமானிடம் கூறுவார் மைத்துணரே! கர்ம வினையின் பயனால் தீர்க்க வந்த பிறவி போல் அமைந்தது இந்த கலியுகப் பிறப்பு. எனவே எவரும் பதற்றப்பட வேண்டாம். இப்போது நாம் எல்லோரும் மறுபிறவி எடுக்க வேண்டிய கால கட்டமாக இந்த காலம் காணப்படுகின்றது. இரக்கமில்லாத கொடும்பாவியாகிய துரியோதனனை அழித்து, அவர்களிடமிருந்து நாட்டை மீட்டு எடுத்து, அதை மறுபடியும் பாண்டவர்களிடம் ஒப்படைத்தேன்.

ஆனால் முன் யுகத்தில் யோக முனிவர் எனக்கு இட்ட சாபத்தால் பூலோகத்திலே பிறப்பு எடுக்க வேண்டியுள்ளது. மிக புனிதமான தேவர்கள், ரிஷிகள் முனிவர்கள் வரை உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் ஏழு பேர் சேர்ந்து பூலோகத்தில் எனக்குப் பிள்ளைகளாய் பிறக்க வேண்டும் என்கிற விதி. அதனால் அந்த முன்வினை விதிப்பயனாலும், யோக முனிவரின் சாபத்தாலும், ஏழு லோகத்தில் உள்ள எழு வித்துக்களை எடுத்து, அந்த சக்தியால் ஏழுப் பிள்ளைகள் பிறந்தனர்.

நீர் அறிந்து கொள்ளும்படியே, சப்த கன்னிமார்கள் வயிற்றில் சான்றோர் மக்களை பிறவி செய்ய வைத்தது, சிவனே உனக்கு தெரிந்தது தானே! அந்த சான்றோர்களுக்கு நான் தகப்பன் என்று ஆகி விடும் சூழ்நிலை

உருவானது. நான் என் மக்களை உரிமையோடு பூலோகத்தில் விட்டுவிட்டு நிம்மதியாக ஸ்ரீரங்கம் சென்று அப்படியே சிலகாலம் ஸ்ரீரங்கத்தில் சுகமாய் இருந்துவிட்டு திருவனந்தபுரம் நோக்கி சென்றேன். அவ்வழியில் கைலாய மலையில் உள்ள தேவாதி தேவர்கள், முனிவர்கள் மற்றும் பிரம்ம லோகத்தில் உள்ள பிரம்ம ரிஷிகள் சேர்ந்து என்னை நினைத்து அனந்த வனத்தின் எல்லையில் கடுமையான தவம் இருந்தார்கள்.

நான் அவ்வழியே போகின்ற போது கடுமையான தவம் இருப்பதை கண்டு, நான் அவர்களை பார்த்து சிவபெருமானின் அடையாளமாகிய திருநீறு பூசி கொண்டிருக்கும் சிவ கணங்களே! தேவகணங்கள் மற்றும் தேவர்களே! முனிவர்களே! நீங்கள் எல்லோரும் கைலாய மலையில் இருந்து வந்து நான் பள்ளிக் கொண்டிருக்கும், பூலோக கைலாயம் ஆகிய நந்தவனத்தில் வந்து தவமிருக்கும் காரணம் என்ன? என்று எதற்காக இங்கு வந்தீர்கள் என்று அவரிடம் விசாரித்தேன். அவர்கள் என்னிடம் சொன்னதை நீர் கவனமாக கேளும். தவமிருந்து இருந்தவர்கள் எல்லோரும் அய்யா பூலோகத்தில் கலியன் பிறந்து விட்டதால் மக்களிடையே மனுநீதி, மனு தர்மங்கள் எல்லாம் சீரழிந்து போய்விட்டது.

அதைக் கண்டு நாங்கள் சலிப்படைந்ததால் எங்களுக்கு தானமும், தவமும் செயலிழந்து போய் விட்டது. கலியனால் நாடு சீரழியும் போது அங்கு நாங்கள் இருப்பதால் எந்த பயனும் இல்லை என்று வருத்தம் கொண்டு வந்தோம். மனம் நொந்து உம்மிடம் சொல்லவே உம்மை நாடி வந்தோம் என்றார்கள்.

நான் உங்களுக்கு, என்னால் என்னக் காரியம் ஆகவேண்டும் என்று கேட்டேன் அப்போது அவர்கள் சொன்னது என்னவென்றால், கலியன் பிறப்பதற்கு முன்னால் நடந்த அனைத்து தர்மங்களும் கலியன் பிறந்த பிறகு நடக்கின்ற மனு தர்மங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாட்டில் கலியினுடைய கொடுமைகள் தீ போல் பரவி விட்ட காரணத்தினாலும் அலட்சிய உலகமாக மாறிவிட்டது .எனவே கலியை அழிக்க வேண்டுமென்றால், சிவகைலாயத்தில் உள்ள பரமசிவன் பார்வதி முதல், உயிர் வாழ்கின்ற ஜீவஜெந்துக்கள் எல்லாம் மறுபிறவி எடுக்க வேண்டும்.

தவம் செய்த முனிவர்கள், நிலத்தில் வாழுகின்ற பிராணிகள் மற்றும் புல், பூண்டுகள், தாவரங்கள் வரையிலும் புதுப் பிறவி எடுக்க பலனுள்ளது. மலைகள், கடல், மரம், மூலிகைகள் செடிகள் மற்றும் பாம்புகள் போன்ற எல்லா இனங்களும் மறுபிறப்பு எடுக்க வேண்டும். திடகாத்திரமான சிந்தனையோடு நாராயணரின் விருப்பத்திற்கு ஏற்றது போல் நடந்தவர்களுக்கு, பரமகதி கிடைக்கும்.

அவரவரிடம் உள்ள அக அழுக்குகளை அகற்றி, மேலோகம் செல்ல தடையாக இருக்கின்ற கலி என்ற மாய எண்ணத்தை அழித்து மக்கள் மனதை தூய்மை ஆக்க வேண்டுமென்றால், பெண்ணானாலும் சரி, ஆணானாலும் சரி, எந்த ஜீவராசிகளானாலும் சரி, அவரவர்க்கு ஏற்ற வகையில் புதுப்பிறவி பிறப்பது தான் நல்லது. அதற்கு எல்லோரும் பூமியில் புதுப்பிறவி எடுத்தே ஆக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். பிறப்பு உண்டு என்றால், இறப்பும் உண்டு. இதுவும் இந்த காலத்தின் கட்டாயம் தான்.

கலியன் வந்து பிறந்த தோஷத்தில் இருந்து விடுபட, எல்லோரும் தர்மயுக வாழ்வை பெற , இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையை விட்டு, தர்மயுகவாழ்விற்கு செல்ல எல்லோரும் மறுப்பிறவி எடுத்தே ஆகவேண்டும்.

ஆகவே அய்யா நீங்கள் எங்கள் அனைவரையும் உமது பக்கத்தில், நீங்கள் அவதாரம் புரியும் இடத்தில் பிறவி செய்ய வேண்டும் என்றார்கள். மேலும் மரியாதையுடனும், நல்லொழுக்கத்துடனும் மானமாய் சான்றோர்களாய் வாழ எங்களை பிறவி செய்ய வேண்டும் என்று என்னிடம் சொன்னார்கள். நான் அவர்கள் நல்லெண்ணத்தையும், தன்னம்பிக்கையையும் பாராட்டி தற்போது கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நல்லகாரியம் நடக்கும். நல்ல வேளை வரும் என்று சொல்லியிருந்தேன்.

இன்றைக்கு நீங்கள் சொல்வதை யோசித்து பார்க்கும்போது அந்த மொழி நினைவுக்கு வருகிறது. அனைவரையும் பூலோகத்தில் பிறவி செய்வது நியாயமாக தோன்றுகிறது. என்னைத் தேடி தொழுத பிள்ளைகளுக்கு வாக்குறுதி கொடுத்து இருக்கின்ற படியால், திறவுகோலாய் முன் நிற்கின்ற சிவபொருளே! என்னச் செய்யலாம் என்று திருவாக்கு உரைக்க வேண்டும் என்றார் திருமால்.

உடனே திருமாலின் விருப்பத்தை அறிந்து கொண்ட சிவபெருமான் மாய பெருமாளை பார்த்து மைத்துணரே! இப்போது நடைமுறையில் இருப்பதை பார்த்தால் நான் எதையும் மறுத்து சொல்ல முடியாது. ஆகையால் நீர் உமது விருப்பப்படி எப்படி நினைத்தீரோ, அதன்படியே செய்ய முடிவு எடுத்து கொள்ளும் என்று சிவபெருமான் பதில் கூறினார். பாருலகம் அத்தனைக்கும் படியளக்கும் பரமன் தீமை குறைந்து, நல்லது செய்து உயிர்கள் மரணம் இல்லாமல் வாழ்க்கை வாழ வேண்டும் என்று சம்மதம் தெரிவித்தார். அதன்படி நாரயணமூர்த்தி மேலுலக வாசிகளை எல்லாம் பூவுலகில் பிறவி செய்ய திருவுளம் கொண்டார்.

*************

## DAY 36

### தேவலோகத்தார் மனுப்பிறப்பு

தேவரையுந் தான்வருத்திச் செப்புவா ரையாவும்
பாவலரே நீரும் பார்த்துணர்ந் தோராமல்
மாலிங்கே யில்லையென்று மாறாட்டஞ் சொன்னதற்கு
சூலின் கருத்திரண்டு தொல்புவியி லேபிறக்கும்
உங்களி னமாக ஒருபிள்ளை பெற்றதுண்டு
அங்குபோய்ச் சாணாராய் அதில்பிறக்கப் போவுமென்று
சொல்லவே தேவரெல்லாம் சிரித்துமனங் கூடி
நல்லதுகாண் நாரணரே நாங்கள்பிழைத் தோமெனவே
பிறக்கவே போவோம் பிறந்தா லடியார்க்கு
இறக்கவிதி யாகுமல்லோ இழிகலிய னேதுவினால்
இறந்தால் பின்னுமந்த இனத்திலடி யார்பிறக்க
வரந்தாரு மென்று வணங்கிநின்றா ரையாவை
அப்போது அய்யா அரிநமோ நாரணரும்
செப்பரிய நல்லகுலத் தேவர்களுக் கேதுரைப்பார்
மக்களே நீங்கள் வையகத்தி லேபிறந்தால்
வக்கலிய னேதுவினால் மாயமுங்க ளைச்சூழ்ந்து
என்பேரு மீசர் ஏற்றஉமை யாள்பேரும்
தன்பேருஞ் சொல்லாதே என்று தடுத்தடிப்பான்
ஆனதால் சாவுவரும் ஆனாலு முங்களுயிர்
மானமது மாறாமல் மாறியவ் வினத்திலுறும்
இப்படியே வுங்களைநான் இரட்சித்துக் காக்குமட்டும்
எப்படியு முங்களுயிர் இதில்விட் டகலாதென்றார்
நல்லதுகா ணென்று நாட்டமுற்றுத் தேவரெல்லாம்
வல்ல வகையான வாய்த்தசா ணாரினத்தில்
தேவ ருயிர்பார்த்துச் சென்றுதித்தார் தேவரெல்லாம்
மூவருரை மாறாமல் மோகமுள்ள தேவரெல்லாம்

### சம்பூர்ணத்தேவன் - பரதேவதை தவசு

போகும் பொழுதில் பொன்னுலகத் தேவர்தன்னில்
தாவும்பெரிய வொரு சம்பூரணத் தேவன்
பரதே வதையான பார்மறலி தன்னுகத்தில்
உரமான தேவியவள் உடையமன்ன னைநீக்கித்
தெய்வச்சம் பூரணனும் சேர்ந்தவளோ டேநடப்பாய்
மாயவளை மாய்கையினால் மாறியவன் பேசினனே
நான்பிறக்கப் போணுமென்றால் நன்னுதலை யென்னோடு
தான்பிறக்கச் சொல்லித் தாரம்போ லாக்குவீரால்
நான்பிறக்கப் போவேன் நாரணரே யல்லாது
தான்பிறக்கப் போவதற்குச் சங்கடங்க ளுண்டுமையா
என்றுரைக்கத் தேவன் எடுத்துரைப்பா ரெம்பெருமாள்

நன்றுநன்று தேவாநீ நாணமென்ன பேசுகிறாய்
உன்பிறப்பு உயர்பிறப்பு ஓவியத்தின் தன்பிறப்பு
பின்பிறப்பு ஏமன் பூமிப் பிறப்பல்லவோ
அப்பிறவிக் கிப்பிறவி அடுக்குமோ தேவாநீ
இப்பிறவி ஞாயம் ஏனுரைத்தாய் மாதேவா
ஆனையொடு பூனை அணைந்துநலஞ் செய்திடுமோ
பூனையொடு ஆனை புல்குமோ மாதேவா
ஆனை மதமா யடர்ந்து மிகத்தேவா
பூனை யொடுவந்து புல்குமோ - பூனை
நாயோடு புல்குமோ நல்லறிவில் லாத்தேவா
ஈயோடு சேர்மோ இசல்
ஏனடா தேவாநீ இந்தமுறை சொன்னதென்ன
வீணடா இவ்வாசை விட்டுவிடு நீதேவா
கீரிக்குப் பாம்பு கிளைவருமோ வையகத்தில்
ஓரிக்குச் சிங்கம் ஒக்குமோ மாதேவா
இப்படியே மாயன் எடுத்துரைக்கத் தேவாதி
எப்படியும் புத்தி இசையாம லேயுரைப்பான்
காவலரே மாமோகம் கண்டஇட மன்றல்லவோ
ஆவலது கொண்டஇடம் அச்சுதரே சம்மதங்காண்
எந்தவித மாகிடினும் எனக்கந்தப் பெண்கொடியைத்
தொந்தமா யென்றனக்குத் தொலையாத ஆசையதும்
தந்தருளி வைத்தால் தர்மமுண் டுங்களுக்கு
என்றன் பிரானே இனிமாற்றிச் சொல்லவேண்டாம்
என்றுரைக்கத் தேவன் எடுத்துரைப்பா ரெம்பெருமாள்
ஒன்றுநீ கேட்டிலையே உன்மனது ஒத்திலையே
கீழுள்ள பெண்ணை மேலாக்க வேணுமென்றால்
வேழமொத்த தேவா மிகுத்ததவஞ் செய்திடுநீ
மேலாக வேணுமென்று மெல்லியரும் நற்றவசு
காலால் கனலெழுப்பிக் கடுந்தவசு செய்திடச்சொல்
தவசு இருபேரும் தாற்பரிய மாகநின்று
சிவசுவா சம்பெருக்கிச் சிறந்ததவஞ் செய்திடச்சொல்
நின்ற தவத்தில் நிலையாய் நினைத்ததெல்லாம்
அன்றுங் களுக்கு அருளுவே னானுமென்று
சொல்லிடவே தேவன் சிரித்து மனமகிழ்ந்து
நல்லதுதா னென்று நாட்டமுற்றுத் தேவனுந்தான்
பரதே வதையான பைங்கிளியைத் தான்கூட்டி
விரைவா கத்தேவன் விறுமா பதஞ்சேவித்து
நின்றான் தவசு நெடியோ னுறுதியென்று
நன்றான நன்னுதலும் நல்லசம் பூரணனும்
மனைவியும் புருசனென மாறாபடையுமென்று
நினைத்துத் தவசு நிற்கநிலை தேடிநின்றார்
அனைத்துயி ருங்காக்கும் அய்யாநா ராயணரும்
கனத்துடனே பின்னும் கட்டாக ஏதுசெய்தார்

விளக்கம்:-
தெய்வ லோகத்தார் மனுபிறப்பு

பரமசிவனின் அனுமதியை பெற்று பாரளந்த அய்யா நாராயணர், சிவன் விஷ்ணு சக்தி ஆகிய முப்பொருளும் ஒரு பொருளாய் தனக்குள்ளாக்கிக் கொண்டு புத்துணர்வோடு பாருலகம் காக்க புறப்பட்டார். தேவலோகத்தில் உள்ள அனைவரும் கைலாச வாசனாகிய சிவபெருமானுக்கு, ஒவ்வொருவரும் அவரவர்களுக்கானபணிவிடைகளை ஒழுங்காக செய்து கொண்டிருக்கிறார்கள்.

சிவபெருமான் அமர்ந்திருக்கும் கைலாயத்தில் இனிமையான இசையை மீட்டிக்கொண்டிருக்கும் வீணையை உடையவர்களும், தேனிசையை காதுகளுக்கு தருகின்ற யாழினை கையிலேந்தி, அவர்களும் ஒருபுறம் இருக்க, வேத மந்திரங்களும், துதிப் பாடல்களை பாடி கொண்டிருப்பவர்களும் ஒருபுறம், நெருங்க தொடுக்கப்பட்டு பின்னிய மாலைகளை கையில் ஏந்தியவர்கள் ஒரு புறம், தலைவணங்கி தொழுபவர்களும் ஒருபுறம், பக்திப் பெருகி அன்பு மேலீட்டால் ஆனந்த கண்ணீர் விடுபவர்கள் ஒருபுறம், மெய்மறந்து உருண்டு புரண்டு கொள்பவர்கள் மற்றொரு புறம், தலையின் மீது இரு கைகளை குவித்து கும்பிட்டு நிற்பவர்கள் ஒரு புறம், நன்றி உடையவர்களாக எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று சிவபெருமானிடம் அழுது, தொழுது நின்றார்கள்.

அவர்களையும் தேவர்கள் அனைவரையும் அய்யா நாராயணர் உடனடியாக வரவழைக்க சொன்னார் என்ற செய்தியை கேட்டதும் அனைவரும் ஓடோடி வந்தனர்.

நாராயணர் அவர்களிடம் தேவர்களே! நீங்கள் எல்லோரும் சேர்ந்து சிறிதும் ஆராய்ந்து பாராமல், திருமால் மேலோகத்தில் இல்லை பூலோகத்தில் மாண்டு கிடக்கிறார் என்று பொய் தகவல் சொல்லி பாவ செயலை செய்த காரணத்தால், பூலோக பெண்ணின் வயிற்றில் கருவாக உருவாகி, நான் வாழ்ந்த பூமியில் சான்றோரினத்தில் நீங்கள் பிறக்க வேண்டும். நீங்கள் பிறவி எடுக்கும் சான்றோரினத்தில் தேவலோகத்திலிருந்து ஒரு வித்து எடுத்து ஏழு மகன்களில் ஒரு பிள்ளையையாக பிறவி செய்து வைத்திருக்கின்றேன். எனவே நீங்கள் பூலோகம் சென்று சான்றோரினத்தில் தேவலோகத்தின் பாரம்பரியத்தில் போய் பிறங்கள் என்றார்.

திருமால் சொன்னவுடன் தேவர்கள் எல்லோரும் மனதில் ஆனந்தம் கொண்டவர்களாக மன திருப்தியோடு, அய்யா நாராயணர் எங்களுக்கு நன்மையான காரியங்களுக்கு செய்து விட்டீர்கள்.

அய்யா நாங்கள் தப்பித்தோம். பூலோகத்தில் பிறவி எடுக்க சொல்லுகின்றீர்! ஆனால் நாங்கள் மனிதர்களாய் பிறந்தால் மரணமடையும் விதியும் எங்களுக்கு உண்டுமா அய்யா? கீழ்த்தரமான ஆசைகளுக்கு அடிமை பட்ட கலியின் காரணமாக தான் எங்களுக்கு இந்த சோதனை,இருந்தாலும் நாங்கள் மரணமடைந்தால் எங்கள் உயிரை மீண்டும் சான்றோரின் இனத்தில் பிறக்கும்படி செய்ய நல்ல வரம் தர வேண்டுமென்று, திருமால் திருவடிப் பணிந்து வேண்டினார்கள்.

இப்போது அய்யா சான்றோரை பார்த்து ,என் அன்பு மக்களே! நீங்கள் எல்லோரும் பூலோகத்தில் சென்று மானிட பிறவி எடுத்தால், கலியினுடைய மாயையின் காரணமாக, மாயக்கலியானது உங்களை விடாப்பிடியாக சூழ்ந்துகொள்ளும். நாராயணன் என்று என் பெயரையும், சிவசிவா என்று ஈஸ்வரர் பெயரையும், அம்மா தாயே ஆதிபராசக்தி என்று பார்வதியின் பெயரை உச்சரிக்க கூடாது என்று கண்டிப்பான். எங்கள் பெயரை சொன்னால் தடுத்து அடிப்பான் கலியன்.

எனவே பூலோகத்தில் பிறப்பவர்களுக்கு துன்பங்கள் சூழ்ந்து மரணம் உண்டு. அப்படி மரணம் ஏற்பட்டாலும் நான் உங்களை கைவிடாது மானம், மரியாதை குறையாமல், மறுபிறவி அதே சான்றோரினத்தில் மீண்டும் பிறவி செய்வேன். கவலை கொள்ள வேண்டாம்.

அப்படி பல பிறவிகள் செய்து உங்களை நான் கலியிலிருந்து மரணமில்லாது பாதுகாக்கும் வரை எத்தனை பிறவிகள் பிறந்தாலும், உங்கள் உயிர் சான்றோரின் இனத்தை விட்டு வேறு எங்கும் செல்லாமல் நான் பாதுகாப்பேன் என்றார். நாராயணர் சொன்ன விவரம் கேட்ட தேவர்கள் வலிமையான சக்திகளை பெற்று வல்லவர்களாக பேரும் புகழோடு வாழ்கின்ற சான்றோர் இனத்தில் தெய்வலோக வழியில் பிறந்திருந்த இனத்தின் உயிரை கண்டுபிடித்து அவர்களுக்கு பிள்ளைகளாக தேவர்கள் பிறந்தார்கள்.

திருமாலின் ஆணைப்படி அவர்கள் கர்வத்தை விட்டு பூலோகத்தில் பிறப்பு எடுக்க போகும் போது சிவபெருமான் கைலாயத்தில் உள்ள தேவர்களில் புகழ் பெற்ற ஒருவன் கூடுவிட்டு கூடுபாயும் சக்திப் பெற்ற பெரிய வல்லமைக் கொண்டவன், சம்பூரணத்தேவன் என்ற பெயருடையவன் இருந்தான் .

சம்பூரணத்தேவன்- பரதேவதை தவம்

தெய்வலோகத்தில் வாழ்ந்தவன் சம்பூரணத்தேவன். எமலோகத்தில் வாழ்ந்தவள் பரதேவதை என்ற எமலோக வாசியான பெண். மிகவும் சக்தி வாய்ந்தவள். ஆனால் அவள் கணவனால் கைவிடப்பட்டு தனிமையில் வாழ்ந்தவள். தெய்வலோகத்தில் வாழ்ந்தவன் சம்பூரணத்தேவனோடு பழக்கம் ஏற்பட்டு, இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினார்கள். அதனால் சம்பூர்ணனால் அவளை மறக்க முடியவில்லை. அவள் மேல் காதல் கொண்டு பூலோகத்திற்கு பிறவி எடுக்க போக மாட்டேன் என்று திருமால் பேச்சை கேட்காமல் மறுத்து பேசினான்.

மாயபெருமானே நான் பூலோகத்தில் போய் கண்டிப்பாக பிறக்க வேண்டும் என்றால், அழகே உருவான பரதேவதை என்ற பெண்ணையும் என்னோடு பூலோகத்தில் பிறவி செய்து எனக்கு மனைவியாக அனுப்பி தந்தால் நான் சம்மதிக்கிறேன் என்று பேசினான். அப்படியே பரதேவதை என்ற பெண்ணையும் என்னோடு பூலோகத்தில் பிறவி செய்ய முடியாது என்றால், நானும் தனியாக சென்றால், உங்களுக்கு பலவிதமான கவலைகள் என்னால் பட கூடிய நிலை வந்து சேரும் மாயபெருமானே! என்றான் சம்பூரணத்தேவன். இவ்வாறு தேவலோகத்து சம்பூரணத்தேவன், திருமாலிடம் சவாலாக கூறினான்.

அதற்கு எம்பெருமான் நாராயணர் நீ என்னிடம் இரக்கம் இல்லாமல் பேசுகிறாயே! நீ பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது? உன்னுடையப் பிறப்பானது தேவலோக உயர் பிறப்பு.

ஓவியம் போல் அழகு வாய்ந்த சிற்பம் போன்ற நல்ல பிறவியாகும். ஆனால் பரதேவதையின் பிறப்பு எமலோகத்தில் பிறந்த தரம் குறைந்த பிறவியாகும். உனது தெய்வலோக தெய்வீக பிறவியோடு , பரதேவதையின் எமலோக பிறப்பு சரிசமமாகுமா? நீயே சிந்தித்துப்பார். உங்கள் இருவரையும் கணவன், மனைவி போல் பிறவிச் செய்வதில் நியாயம் இல்லை. ஏன் இந்த இழிவான முடிவுக்கு வந்தாய்.

“ஆனை மதமா யடர்ந்து மிகத்தேவா
பூனை யொடுவந்து புல்குமோ - பூனை
நாயோடு புல்குமோ நல்லறிவில் லாத்தேவா
ஈயோடு சேர்மோ இசல்”

மிகப் பெரிய காட்டு யானையோடு வீட்டு விலங்கான பூனை சேர்ந்து, குடும்பம் நடத்துவது தகாத செயல். அது போல் தான் நீ நினைத்த உறவு. யானைக்கு மதம் பிடித்து கட்டுக்கடங்காமல் இருக்கும் போது பூனையானது யானையின் பக்கம் நெருங்க முடியுமா? அல்லது பூனையும், நாயும் இணைந்து உறவு கொள்ள முடியுமா? விவரம் தெரியாதவனாய் இருக்கின்றாயே! சிறிய பூச்சியாகயாக இருந்தாலும் ஈயோடு ஈசல் இணைய முடியுமா? சிந்தித்து பார்! தரம் இல்லாத வாழ்க்கை வாழ்வாகுமா? ஏன் உன்னுடைய அறிவு கீழ்த்தரமாக போய்விட்டது. இனம் பொருந்தாத உன் உறவு முறையை பற்றி கூற காரணம் என்ன? தரத்திற்கு தரம் வாழ்வது தான் வாழ்க்கை புரிந்து கொள்.

தேன் இனிமையானது தான். ஆனால் தேனோடு துளி விஷம் கலந்தாலும், அது உயிரை கொல்லும் உனக்கு தெரியாதா? சம்பூரண தேவா! இது தேவையற்ற வீண் ஆசை. உனது இந்த நினைப்பை மறந்து விட்டு விடு. யானையோடு பூனை உறவு கொள்ள முடியுமா? இல்லை பூனை நாயோடு உறவு கொள்ள முடியுமா ? கீரியோடு பாம்பு எப்படி உறவு கொள்ள முடியாதோ? அதுபோல நரியும், சிங்கமும் நண்பர்களாக முடியாது என்று மாயபெருமாள் பல விதமான உதாரணங்களை எடுத்து கூறியும் மனம் மாறாதவனாய் நின்றான் சம்பூரணத்தேவன்.

மேலும் அவன் மாயபெருமானை பார்த்து, அய்யா எங்களை பாதுகாத்து வழி நடத்துபவரே! உண்மையான காதல் ஒரு முறை தான் வரும். அதுதான் மனித பண்பாடு. காதலுக்கு கண்கள் இல்லை. யார் மீது முதல் தோன்றுகிறதோ அது நியாயமான காதல். ஜாதி, மதம் பார்க்காதது காதல். அதைவிட்டு கண்ட கண்ட இடமெல்லாம் காதல் வராது. ஆகையால் அச்சாணிப்போல் செயல்படுபவரே அய்யா, அவள் தான் எனக்கு வேண்டும்.

எமலோகத்தில் வாழ்ந்தாலும் இழிவான குலமாக இருந்தாலும், பரதேவதையை தந்து அருள் புரிந்தால் தான் தர்மம் நிலைத்து நிற்கும்.

உங்களுக்குப் புண்ணியமும் கைகூடும். என் உயிரும் வாழ்க்கையும் உமது கையில் தான் உள்ளது திருமாலே! இதற்குமேல் மறுத்து பேச வேண்டாம் என்று திருவடிப் பணிந்தான்.

திருமால் கூறிய அறிவுரைகளை கேளாத சம்பூரணத்தேவன் எந்த மாற்றமும் இல்லாமல் கண்டிப்புடன் நிற்க, அதை கண்ட எம்பெருமான் நாராயணர் கூறுவார். உன் மனம் நான் சொல்லும் அறிவுரையை ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் நான் ஒரு வழி சொல்கிறேன். அதையாவது கவனமாக கேளு! தாழ்ந்த நிலையில் இருக்கிற பரதேவதையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்றால், உயர்ந்த நிலையில் இருக்கின்ற நீ வனம் சென்று கடுந்தவம் செய்ய வேண்டும். உன்னை போல் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று பரதேவதையும் நினைத்தால், பரதேவதையும் கடுந்தவம் மேற்கொள்ள வேண்டும்.

பரதேவதையை சிவ சுவாசம் பெருக்கி ஒரே சிந்தனையோடு நினைத்துக் கடும் தவம் புரிய சொல். தவம் செய்யும்போது இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் நினைக்காமல், ஒழுக்க நெறியோடு நேர்கொண்ட மனம் கொண்டு, நாராயண மந்திரத்தைச் சொல்லி சிறப்பான முறையில் தவம் புரிய சொல். இப்படியாக இரண்டு பேரும் ஒரே மனதாக நின்று, தவம் நிலை குலையாமல் செய்தீர்களானால் நீங்கள் நினைத்ததையெல்லாம் சாதிக்கலாம். உச்சகட்டத்தை அடையும் போது நான் நேரில் வந்து காட்சி தந்து நீங்கள் விரும்பியது அத்தனையும் உங்களுக்கு தந்து அருள் புரிவேன் என்று அருள் வாக்குக் கொடுத்தார்.

இவ்வாறு அறிவுரை சொன்ன உடனே தன் மனதில் நிம்மதி கொண்டு புன்னகைப் புரிந்தான். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று மன திருப்தியோடு சம்பூரணம் காலம் கடத்தாமல் எமலோகத்து பரதேவதையான அழகிய பஞ்சவர்ண கிளி போன்றவளை கூட்டிக் கொண்டு விஷ்ணுவின் திருப்பாதம் பணிந்து, அவர் நாமம் சொல்லி வலம் வந்து வணங்கினார்கள். உடனடியாகவே சம்பூர்ணதேவனும், அவன் விரும்பியப் பரதேவதையும் மிக வேகமாக வனத்திற்கு சென்று இரண்டு பேரும் நின்ற நிலையில் தவம் மேற்கொண்டார்கள். “நாராயண” மந்திரத்தை உறுதியான நிலையில் மனதில் பதித்து மனம் மாறாமல் பரதேவதையும், சம்பூர்ண தேவனோடு தவம் செய்யலானாள். அதேபோல் சம்பூரணம் தேவனும் மகாவிஷ்ணுவை மனதில் திடமாக நினைத்து, தவநிலையில் நின்று உயர்ந்த நிலையை அடையத் திருமால் வரவை எதிர் நோக்கி தவம் இருந்தார்கள்.

*************

# DAY 37

## எமலோகத்தார் மனுப்பிறப்பு

எம னுலகமதில் இருக்குந் தபோதனரைத்
தாமனந்தப் பேர்கள் சர்வது மேயழைத்து
வாருங்கோ பிள்ளாய் வாய்த்த தபோதனரே
ஏதுங்கள் ஞாயம் என்னோடே சொல்லுமென்றார்
உங்கள் குடும்பம் உடையோன் பதம்வணங்கி
எங்களுட மோட்சமதில் ஏகி இருப்பதினால்
ஆனதா லவர்கள் அனுக்கிரகந் தன்னாலே
மானமுட னேமனுட வையகத்தில் வாழ்ந்திருந்தீர்
இன்ன முன்வழிகள் என்மகவா யங்கிருக்க
வன்னமுட னவ்வழிதான் வாய்த்தசா ணாரினத்தில்
போய்ப்பிறந்து நன்றாய்ப் புவிமீதி லேவளர்ந்து
மேற்பிறவி வந்திடினும் மேவுவ தவ்வழியில்
இப்படியே பிறந்து என்று மிடறுசெய்து
எப்படியு மென்குடும்பத் தாலே யிருளகன்று
உன்பிறப்போர் தம்மால் உதவிபெற்று வாழுமென்று
எம்பெருமாள் சொல்லி இனத்தில் பிறவிசெய்தார்

## சொர்க்க லோகத்தார் மனுப்பிறப்பு

சொர்க்கலோ கத்தாரைச் சுறுக்காய் வரவழைத்து
மிக்கவுங்கள் செய்தியென்ன விடுத்துரையு மேவலரே
நான்பிறவிக் கெல்லாம் நம்பிகூ டப்பிறந்து
என்பிறகே வந்து எனக்கேவல் செய்ததினால்
இன்னம் பிறவி இனத்திலுயி ரென்மகவாய்
வன்னமுள்ள சான்றோர் வழியி லிருப்பதினால்
காலக் கலிதான் கட்டழித் தென்மகவு
மேலுக மாள விடைநிச்சித் திருப்பதினால்
நீங்களும்போ யங்கே நிங்களுட தன்வழியில்
மங்களமாய்த் தோன்றி வாழுங்கோ என்மகவாய்
வாழுகின்ற நாளையிலே வருவே னானுங்களிடம்
நாளும்பல ஊழியங்கள் நமக்குமிகச் செய்திருங்கோ
ஏவல்கண் டுங்களைநாம் இரட்சித்து ஆண்டுகொள்வோம்
பாவலரே நீங்கள் பண்பாய் போயிருங்கோ
போவெனவே சொல்லிப் புகன்றா ரவர்களுக்கு
கோவேங்கிரி ஆயன் கூறிவிடை கொடுத்தார்

விளக்கம்:
எமலோகத்தார் மனுபிறப்பு

பதினான்கு உலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் பாதுகாக்கும் பரம்பொருளாகிய அய்யா நாராயணர், நன்மைகள்

செய்வதற்காக, எமலோகத்தில் தவநிலையில் இருந்து கொண்டிருந்த முனிவர்களையும் மற்றும் உள்ள அனைவரையும் சேர்த்து ஒரே இடத்திற்கு வருமாறு அழைத்து கூறுவார், என்னை நினைத்து கொண்டு தவம் இருக்கின்ற எனது அன்பு மக்களே !சக்தி வாய்ந்த தவநிலையில் இருக்கும் முனிவர்களே! நீங்கள் பூலோகத்தில் இப்போது போய் பிறக்க வேண்டும். அதற்கு உங்களுடைய நியாயமான பதிலை கூறுங்கள் என்றார்.

அப்போது அவர்கள் எல்லோரும் நாராயண மூர்த்தியின் கனிவான பேச்சில் அப்படியே தலைவணங்கி நின்றார்கள். அப்போது மாயபெருமான் அவர்களிடம், நீங்கள் எல்லோரும் சிவபெருமானுடைய திருநாமத்தை சொல்லி அவர் பாதம் வணங்கி எமலோகத்தை விட்டு நாங்கள் வாழும் தெய்வலோகத்திற்கு மிக உயர்ந்த நிலையை அடைய வந்திருக்கின்றீர்கள். எனவே உங்களுடைய தவ வலிமையின் காரணமாக உங்களுக்கு பயன் அடையும்படி செய்ய, எங்களை நினைத்து எமலோகத்தில் தவமுனிவர்களாக ஒழுக்கமுடன் வாழ்ந்தீர்கள்.

ஆகையினால் இவ்வுலகத்தை சேர்ந்தவர்கள் எனக்கு பிள்ளைகளாக பூலோகத்தில் பிறந்து இருக்க நான் நல்வழி சொல்கிறேன். சப்தமாதர்கள் வயிற்றில் பிறந்த சான்றோர்களின் வழியாகிய சான்றோரின் இனத்தில் எல்லோரும் பிறவி எடுத்து, நீதி, நேர்மை ,ஒழுக்கம் மற்றும் தர்மச் சிந்தனையோடு பூலோகத்தில் வளர்ந்து வளம் பெற்று வாழ்வீர்கள் என்றுக் கூறினார் மாயப் பெருமான். அப்போது அவர்கள் அய்யாவிடம் நாங்கள் பூவுலகில் இந்தக் கலியில் போய் பிறந்தால், எங்களுக்கு மரணம் ஏற்படுமே! இந்த கலியின் தன்மையால் அப்போது நாங்கள் என்னச் செய்வது? என்றார்கள்.

உடனே நாரயணமூர்த்தி அவர்களிடம், மீண்டும் மறுப்பிறவி எடுக்கின்ற சூழ்நிலை வந்தாலும், என்னுடைய சான்றோர் இனத்திலேயே பிறப்பீர்கள். எப்படி பட்ட துன்பங்கள் வந்தாலும் என்னுடைய சான்றோர் இனத்திலேயே பிறந்து, கலியுகம் முடிந்துப் பாவ வினைகள் தீர்ந்து, எமலோகத்தில் தோன்றிய சான்றோர்கள் மூலம் சிறப்பு பெற்று சந்தோஷமாக வாழ்வீர்கள் என்று நாராயணர் அருளாசி வழங்கி, ஆறுதல் சொல்லி அவருடைய பிள்ளைகளாகிய சான்றோர் வழியில் பிறவி செய்தார்.

நீங்கள் பூலோகத்தில் பிறவி எடுத்து பிறருக்கு என்றும் இடறு செய்து வாழ்ந்து வருவீர்கள்.அவ்வாறு வாழ்ந்து வருகின்றபோது என் குடும்பத்தார்களாகிய சான்றோர் மக்களால் அந்த இடர்கள் எல்லாம் நீக்க பட்டு மீண்டும் நீங்கள் என்னை வந்து அடைவீர்கள் என்று கூறி அவர்களை அங்கே பிறவி செய்தார்
.

## சொர்க்கலோகத்தார் மனுப்பிறப்பு

எமலோகதரை பூலோகத்தில் பிறவி செய்து விட்ட பின், சொர்க்கலோகத்தில் உள்ளவர்களையும் வேகமாக அழைத்தார் அய்யா நாராயணர். எனவே நீங்கள் பூலோகத்தில் பிறப்பதற்கு தயாராகிவிட்டீர்களா? எமலோகத்தார்களெல்லாம் பூலோகத்தில் பிறப்பெடுத்தாகி விட்டது. உங்கள்

விருப்பம் என்ன? நான் பூலோகத்தில் அவதாரம் எடுக்கும் போதெல்லாம் எனக்கு துணையாக நம்பிக்கையுடன் நீங்களும் பிறந்து எனக்கு பின்னால் பாதுகாவலர்களாக நின்று எல்லா உதவிகளையும் முகம் கோணாமல் மனம் தளராமல் செய்தீர்கள்.

ஆகையால் இந்த கலியுகத்திலும் மனிதர்களாக பிறந்து சப்தகன்னிமார் பெற்ற சொர்க்கலோக வித்தில் பிறவி எடுத்த சான்றோர் வழியில் சான்றோராக பிறக்கவேண்டும். காலத்தையும் நேரத்தையும் வீணாக்கி கொண்டிருக்கின்ற மாய கலியானது அழிக்கப்பட்டு, என்னுடைய சான்றோர் மக்கள் எல்லோரும் மேன்மை பொருந்திய, தர்மயுகத்தில் தேவர்களை போல் மீண்டும் வாழ பரலோகத்தார் நிச்சயத்து முடிவெடுத்திருப்பதால், பூலோகம் சென்று உங்களுடைய சொர்க்கலோக வித்தில் அவதரித்த சான்றோர் வழியில் சான்றோராக பிறக்கவேண்டும். கலி அழிந்த பின் தோன்றும் தர்மயுகவாழ்வில் வைகுண்டரது பாதத்தில் போய் சேர்ந்து எல்லா செல்வங்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ கூடிய நற்பேறினை பெறுவீர்கள்.

அப்போது கலியுகத்தில் நானும் மனிதனாக பிறந்து உங்களிடம் வருவேன். அதுவரையிலும் நாள் தவறாமல் என்னை நினைத்து புண்ணியமான தர்ம செயல்களை செய்து வாழுங்கள். நீங்கள் செய்யும் புண்ணிய செயல்களை நான் பார்த்து அதற்கேற்ற நல்ல தீர்ப்பு வழங்கி உங்களை பாதுகாத்து ஆட்சி செய்வேன். எனவே பூலோகத்தில் பிறந்து தர்ம ஒழுக்கத்தை கடைப்பிடித்து புண்ணியவான்களாக நடந்து புகழோடு வாழுங்கள் என்று அனுப்பி வைத்தார்.

************

# DAY 38

## பிரமலோகத்தார் மனுப்பிறப்பு

பிரமலோ கத்திலுள்ள பிலத்த இருஷிகளை
வரவழைத்து அய்யா நாராயணர் வகிர்வார்
வாருங்கோ பிள்ளாய் வாய்த்த ரிஷிமாரே
ஏதுங்கள் ஞாயம் என்னோ டுரையுமென்றார்
அப்போது நல்ல அந்தரிஷி யேதுரைப்பார்
இப்போது அய்யாவே எங்களைப்பூ லோகமதில்
படைக்கவே ணுமெனவே பகர்ந்தமொழி மாறாமல்
நடக்கக் கருமமிது நாரணரே பொய்யாது
முன்னமே யெங்கள் முறைவழியி லோருயிரை
வன்னமுள்ளச் சாணாராய் வகுத்தீரே யும்மகவாய்
அல்லாம லெங்கள்வழி ஆனரிஷி தங்களிலே
பொல்லாத குற்றம் பிரமனுக்குச் செய்ததினால்
அன்பத்தினா லொன்றிரிஷி அவனிதனில் போகவென்று
இன்புற்ற நாரணரே ஈந்தீரவர் கேட்டவரம்
ஆனதா லவர்கள் அவனிதனி லேதிரிய

ஏனையா எங்களைநீர் இப்போ பிறவிசெய்தால்
இனம்பிரிந்து நாங்கள் இருப்போமே பூமிதனில்
கனம்பொருந்தும் நாரணரே கட்டுரைக்க வேணுமென்றார்
நல்லதுதா னென்று நாரா யணருரைப்பார்
வல்ல ரிஷிமாரே வகையாகக் கேட்டீரே
அதற்கு விபரம் அருளுவேன் கேளுமென்று
மதுக்குகந்த மன்னன் வழுத்துவா ரன்போரே
சென்ற ரிஷியெல்லாம் செடமெடுத்துப் பூமிதனில்
மண்டலங்கள் தோறும் வாழுவார் கண்டீரே
என்ன விதமாய் இருப்பாரென் றேயினமாய்
துன்னயமாய் நீங்கள் துணிந்துநன்றாய்க் கேட்டிங்கோ
மான்தோ லிலேயிருப்பான் வானமதைத் தான்பார்த்துத்
தீன்சோ றருந்தாமல் செலங்குடித்து நாடோறும்
கற்பமுண்டோ மென்று கலியில்மிகப் பட்டுழன்று
அற்பமுடன் கொஞ்சி அவன்சிலநாள் தானிருந்து
பிரம்ம வைகுண்டம் பிறப்பெடுத்து நான்தானும்
வரம்வைத் தவனை வதைத்துப்பின் னுன்னினத்தில்
படைத்துத் தருவேன் பார்த்துக்கோ லெக்கெனவே
இந்தப் படியே இருள்சி யன்பத்தைந்துவரும்
அடர்த்தியா யைம்பத்து ஐந்து இருஷிகளும்
ஆளுக் கொருவிதமாய் அருந்துவ துமிருப்பும்
நாளு முறையாய் நடத்துவதும் நீகேளு
ஒக்க விபரமதாய் உரைக்கநே ரம்பெருகும்
மிக்கத் திரட்டாய் விடுகிறேன் நீகேளு
நல்ல மிளகுதின்று நவகண்டி தான்பூண்டு
கொல்ல மிளகுதின்று குப்பைமே லேபுனைந்து
வெள்ளித் தடுக்கில் வீற்றிருப்பா ரேசிலர்கள்
கள்ளிப் பாலெடுத்து காலெல்லாம் பூசிக்கொண்டு
ஆனைத்தோ லிட்டு அருந்தாமல் நாடோறும்
கானகத்தில் வாழ்ந்து கண்மூ டாரேசிலர்கள்
மரத்தைமிகக் காலிலிட்டு வார்சிலந்திக் கோர்வையிட்டுச்
சரத்தையுள்ளே கொண்டு தானிருப்பா ரேசிலர்கள்
மீட்டைக் கொடியும் மிளகுவெற்றி லைக்கொடியும்
இட்டமுடன் நிஷ்டை இருப்பார் சிலபேர்கள்
உப்பில்லா தன்னம் ஒருபோது தான்குடித்து
அப்பிலிட்டுத் தின்று அக்கினியி லேகாய்ந்து
இருப்பார் சிலபேர் இன்னமும்நன் றாய்க்கேளு
பொருப்பி லிருப்பார் பூமியில் வரோமென்பார்
கள்ளிப்பா லுண்டு கவிழ்ந்திருப்பா ரேசிலபேர்
கொள்ளித் தழலும் கொள்ளைகொண்டக் கஞ்சாவும்
உண்டோங்காண் லோகமதை விழுங்குவோ மென்பார்சிலர்
கண்டா லறிந்திடலாம் கானகத்திலே சிலரை
புல்லை யருந்திப் புலித்தோலின் மேலிருந்து
தில்லைப்பா லுண்டு திரிவோமென் பார்சிலபேர்
புகையிலைச் சாறு புகட்டுவோ மென்பார்சிலர்
தகையில்லாக் கற்பம் தானுண்டோ மென்பார்சிலர்

பூவில் படுப்போம் புகட்டுவோ மாவின்பால்
காவி லுறைந்து கலைதரி யாதிருப்பார்
உடையுடா தேகழுத்தில் உத்திராட்ச மேபுனைந்து
நடையொற்றைக் காலால் நடப்பார் சிலபேர்கள்
இப்படியே நன்றாய் இவரிவர்க் கோர்விதமாய்
அப்படியே தேசமைம்பத் தாறதி லுந்திரிவார்
சோழக் குருநாடு தேசமது நன்னாடு
ஆளவை குண்டர் அவர்வளரும் நன்னாடு
இந்நாட்டில் வாழும் இராச ருடவளமை
சொன்னால் தொலையாது சொல்ல எளிதல்லவே
இப்புவியில் வாழும் என்றன்வை குண்டரிடம்
எப்புவியில் வாழும் இருஷிகன் னாசியெல்லாம்
வரம்வைக்கச் சொல்லி வதைக்கவந்த வைகுண்டர்காண்
பரம்பெரிய வைகுண்டப் பதியாள வந்தவர்காண்
இப்புவியை ஆளஇராச வைகுண்ட ராசா
எப்போ வருவாரென்று இருக்கும் சன்னாசி யெல்லாம்
சன்னாசி யெல்லாம் தலைவீதம் வாழுகின்ற
மின்னான சீமை விரிக்கக்கேள் நீங்களெல்லாம்
பாண்டிய னான பரிகொங்கை நன்னாட்டில்
ஆண்டிருப்பான் சன்னாசி அவனொருவன் கேட்டிருநீ
வருஷ மொருநேரம் மாறிப் பிறந்தேனென்று
புருஷனென வந்தெடுத்தால் பிள்ளையுண் டென்றுசொல்லி
இருப்பான் சிலநாள் இவனொரு சன்னாசி
இருந்தந்த நாட்டைவிட்டு எழுந்திருந்து அவன்தானும்
சிங்கள நன்னாட்டில் சீகண்டன் ராச்சியத்தில்
புங்கம்பா லுண்டு பூவையரைப் பாரோமென்று
ஆடை யுடுக்காமல் அவனிருப் பானொருவன்
கோரக்க நாடு குருக்கேத்திரன் ராச்சியத்தில்
சூரக்கோல் கைப்பிடித்துச் சூலா யுதமேந்தி
தன்மதத்தால் பேசித் தானிருப்பா னேசிலநாள்
கன்மத்தால் சாவான் கடியமூன் றாம்பேர்தான்
இப்படியே யைம்பத் தாறூ ரிவைகளுக்கும்
அப்படியே தானிருக்கும் ஆனசன் னாசிகட்கு
ஒண்ணொண் ணடையாளம் உரைக்கிறேன் சீக்கிரமாய்
துண்ணெனவே நீங்கள் துணிந்துமிகக் கேளுமென்று
நாலாஞ் சன்னாசி நயன மிமையாதிருப்பான்
காலைக் கைகொண்டு கட்டிறுக்கி யேயிருப்பான்
அஞ்சாஞ் சன்னாசி அன்னங் குடியாமல்
பிஞ்சிரு மிச்சியிலை பிசைந்துதின் றேயிருப்பான்
ஆறாஞ் சன்னாசி ஆனகஞ் சாகுடித்து
நீறாக்கித் தேகமதை நிஷ்டைபோல் தானிருப்பான்
ஏழாம் சன்னாசி இடுப்பிலொரு சீலைகட்டிப்
பாழாகப் பட்சி பறவைதின்றே யிருப்பான்
எட்டாஞ் சன்னாசி இருந்துமிகக் கண்மூடி
கட்டாய்ச் சுவாசமதைக் கவர்ந்துகவர்ந் தேயிருப்பான்
ஒன்பதாஞ் சன்னாசி உமிழ்நீ ரிறக்காமல்

இன்ப விறுவிறுத்து ஈரவம்போல் கண்வெளுத்துத்
தூங்கினாற் போலே சூழச்சூழ விழித்துப்
பாங்குகள் தேடிப் பதிந்திருப்பான் கண்டீரே
பத்தாஞ் சன்னாசி பதிவாக நாள்தோறும்
சிற்றா மணக்கிலையில் துயிலுவான் கண்டீரே
பதினொராஞ் சன்னாசி பவளமணிக் கோர்வையிட்டுத்
துதியா யொருமூலம் சொல்லித்தினம் சேவித்து
ஊரிய உளுந்தும் ஓயாமல் கஞ்சாவும்
சதமென்று நம்பி தானிருப்பான் கண்டீரே
பன்னிரண்டாஞ் சன்னாசி பாரக்கல் கோர்வையிட்டு
உந்திக்கு இலுப்பையிலை உழக்குச்சா றுகுடித்து
இருப்பான் பதிமூன்றான் இவனினத்தைக் கேட்டிருநீ
பருப்பா னவலும் பழமுந் தினமருந்தி
கோவை யிலையும் கொடுப்பையிலை யும்புசித்துச்
சேவைபண்ணி நித்தம் செய்திருப்பான் கண்டாயே
பதினாலாஞ் சன்னாசி பண்ணு முறைகேளு
துதியா யொருமூலம் சொல்லித் தினஞ்சேவித்துக்
கையிறைந்தேற்றிக் கட்டிக்கொண் டேயிருப்பான்
பதினைந்தாஞ் சன்னாசி பார்க்கெந்த மாலையிட்டு
மதியகத்தே வுண்டு மலர்ந்துதுயின் றேகிடப்பான்
பதினாறாஞ் சன்னாசி பண்ணு முறைகேளு
ஆடை யுடுக்க அறிவுசற்று மில்லாமல்
கோடை குடித்துக் குலைவான் பதினாறான்
கள்ளிதனைத் தின்று காய்க ளிலையருந்தி
கொள்ளித் தழல்காய்வான் கொடிய பதினேழான்
நல்லத்திக் காயருந்தி நாமமணி யும்பூண்டு
கொல்லத்தி போலே குலைந்துகுலைந் தேதிரிவான்
இவன்பதி னெட்டான் என்றே யினமறிநீ
எவனு மறிவான் ஈரெட்டு மூன்றானை
மான்தோலின் மேலிருப்பான் மற்றிருபான் மீசையுள்ளான்
தான்தெரியு மற்றிருபத் தொன்றா னினங்கேளு
நாகத்தின் முள்ளை நல்லதலை மேலணிந்து
கூகத்தைச் சுற்றிக் கும்பிட்டுத் தான்திரிவான்
இருபத்தி ரண்டான் இனங்கேளு நன்றான
மதுவைத்து நித்தம் வணங்குவான் மந்திரத்தை
இருபத்தி மூன்றான் இருப்பான் மயிர்வளர்த்துச்
சருவைத்துப் பால்பழத்தில் தந்திரத்தை யோதிடுவான்
இருபத்தி னாலான் எங்கு மிகத்திரிந்து
உருவேற்றி நித்தம் உடல்வாட லாயிருப்பான்
இருபத்தியைந் தாமிருஷி எருக்கலம் பாலருந்தி
பருவமாய் ஓவியஞ்செய் ததிலே படுத்திருப்பான்
கள்ளுக் குடித்துக் கறியுப்புக் கூட்டாமல்
புலித்தோல் மேலிருப்பான் புகழிருபத் தாறானும்
நீரைத் தியானமிட்டு நித்திரைக்குத் தானோதி
பாதை வழியேகான் பத்துரண் டேழானும்
கோண முடிமுடித்து குறுத்தடியுங் கைப்பிடித்து

நாணமில்லா தேதிரிவான் நல்லிருபத் தெட்டானும்
சூலம் பிடித்துச் சுழியெழுத்தை மேலூன்றி
கோலமிட் டேதிரிவான் கூறிருபத் தொன்பானும்
முப்பதாஞ் சன்னாசி முச்சந்தி தான்பார்த்து
அப்புச் சிரங்குபற்றி அவன்கிடப்பான் சந்தியிலே
ஓர்முப்பத் தொன்றான் ஊமையென வேதிரிந்து
கூர்மையுள்ள காது கொஞ்சமுங்கேளாத் திரிவான்
முப்பத்தி ரண்டான் உயர்ந்ததிடில் தான்பார்த்து
சர்ப்பத்தின் நஞ்சு தானுண்டோ மென்றிருப்பான்
நன்றா யறிந்திடுநீ நல்லமுப்பான் மூன்றானையும்
கண்டா லறிந்திடலாம் கண்ணில் வெளுப்புமுண்டு
தொண்டையில் சடம்புகட்டித் தொல்புவியி லேதிரிவான்
மண்டை வகுப்புமுண்டு வாய்த்தமுப்பத் தினாலான்
முப்பத் தைந்தானும் முயலகன்போ லுண்டாகி
எய்ப்பிளைப்பார் போலே இவன்திரிவான் கண்டாயே
செப்பமுள்ள முப்பத்துஆறான் செய்தியைக்கேள்
புஸ்பமீதிற் படுத்து பூவையர்கள் தாலாட்ட
அற்பமுட னாடை அணியாமல் தானிருப்பான்
முப்பத்தி யேழாஞ் சன்னாசி யானவனும்
அகத்தி யிலையருந்தி ஆனைத்தோல் மேலிருந்து
மகத்துவமாய்ப் பேசி மாள்வான் முப்பத்தேழான்
கொல்ல மிளகு குறுணியொரு நாளருந்தி
பல்லைமினுக் காதிருப்பான் பார்முப்பத் தெட்டானும்
சோறு குழையவைத்துச் துப்பதலிப் பூவிலிட்டு
ஆறுமுன் பூவோடு அருந்துவான் முப்பத்தொன்பான்
நாக்கிலோ ராணிதனை நல்லவிந்தை யாய்க்கொருத்து
மூக்கிலே கட்டி முனங்குவான் நாற்பதானும்
சிறுபயறை மாவாக்கித் தேங்கா யதனிலிட்டு
முறுக்கா யதையருந்தி முழுங்குவான் நாற்பத்தொன்றான்
அறக்கீரை வித்தை அருந்தித் தினந்தோறும்
சுரைக்கூடிட் டேதிரிவான் சுத்தநாற் பத்திரண்டான்
நாற்பத்தி மூன்றான் நத்தைச்சூரி விதையை
தாற்பத்தி யமெனவே தானிருப்பான் கண்டாயே
விராலி யிலையும் விளாங்காய் வெறுந்தோடும்
நிராதனமாய் வைத்து நித்த மருந்துவன்காண்
நாற்பத்தி நாலான் என்றே யிவனையறி
நாற்பத்தைந் தானுடைய நல்விபரம் நீகேளு
பூப்பறித்துத் தின்று பூனைமொழி பேசிடுவான்
நாற்பத்தாறாஞ் சன்னாசி நல்ல விபரம்கேளு
பேய்க்குமட்டிக் காயைப் பிசைந்து விரைதானெடுத்து
நாய்க்குணம்போல் தின்பான் நாற்பத்தி ஆறானும்
எருமை யுடமோரும் எள்ளெண்ணெ யுங்குடித்து
நருநரெனப் பேசிடுவான் நாற்பத்தி யேழானும்
மருளான பெண்ணை மனதில்வை யோமெனவே
இருளான போது இந்தறினை வாயிருப்பான்
காமத்தைத் தன்னால் கழியவிட் டேவாடி

நாமத்தைப் பேசான் நாற்பத்தி யெட்டானும்
புகையிலையைத் தீயில்வைத்துப் புகையு மிகக்குடித்து
நகம்வளர்த் தேயிருப்பான் நாற்பத்தொன் பான்தானும்
ஐம்பதாஞ் சன்னாசி அரசியிலை மேலிருப்பான்
மண்புரளத் தான்கிடந்து மலஜலங் குடித்திருப்பான்
ஐம்பதொன்றானும் அலைவாய்க் கரைதோறும்
புண்ணியத் தீர்த்தமெனப் போயாடி யேதிரிவான்
நீல மவரி நித்தஞ்சா றேகுடித்து
ஆலம் பலகையிலே ஐம்பத்திரண் டானிருப்பான்
சுக்குப் பொடியைத் தினந் தினமேயருந்தி
அக்குமறு கணிவான் ஐம்பத்தி மூன்றானும்
ஐம்பத்தி நாலான் அசுரக்கா வடிவைத்துக்
கெம்பித் திரிவான் கீரித்தோல் காலிலிட்டு
விளியிட் டேயாடி வெறிகொண் டேதிரிவான்
வழிவிட்டு விலகி வழிநடப்பா னைம்பத்தஞ்சான்
இப்படியே யைம்பத்து அஞ்சு இருஷிகளும்
அப்படியே அவரவர்கள் அற்புதங்கள் வேறுசெய்து
இருப்பா ரவர்கள் இராச்சியத்துக் கொன்றாக
பருப்பா ரவர்கள் பழுதுகை வாய்த்துதென்று
இருக்குமந்த நாளையிலே யான்வருவேன் தெச்சணத்தில்
ஒதுக்கிச் சன்னாசிகளை ஒன்றொன்றாய்க் கொண்டுவந்து
வைக்கச்செய் வேன்வரத்தை மனுவறி யச்சிலரைச்
செயிப்பேன் பலபேரைச் செகமெல்லா மறிய
வதைத்து ஒவ்வொன்றாய் மனுவில் வரத்தாக்கி
நிரைத்துங்கள் தன்னோடு நிலைநிறுத்தி யேதருவேன்
ஆனதால் நீங்கள் அவனியி லென்மகவாய்
மானமாயுங்கள் இனத்தில் பிறந்திருங்கோ
வாழுங்கோ கலியன் மாய்கையால் சாவுவந்தால்
பாழுபோ காதேவுயிர் பதியுமுங்கள் தம்வழியில்
நான்வந் துங்களையும் நாட்ட முடனெடுத்து
மானொத்த தர்ம வையகத்தில் வாழவைப்பேன்
என்று பிரம இராச்சியத் தோர்களையும்
அன்று பிறவி அமைத்து அனுப்பினர்காண்

விளக்கம்:
பிரம்மலோகத்தார் மனுபிறப்பு

அதன் பிறகு அய்யா நாராயணர், பிரம்மா வாழ்ந்து கொண்டிருக்கும் பிரம்மலோக ரிஷிகளை தன்னிடம் வருமாறு அழைத்து அவர்களின் குறைபாடுகளையும் தெரிந்து கொண்டார். ரிஷிகளே! நீங்கள் பூலோகத்தில் பிறக்க முடிவெடுத்து விட்டீர்களா? என்று திருமால் கேட்டதும், ரிஷிகளில் சிறந்தவராகிய நாரத முனிவர், எம்பெருமான் நாராயணரை பார்த்து கூறுகிறார், அய்யா இப்போது நடந்துகொண்டிருக்கும் மிகப் பெரிய கொடிய கலியுகத்தில் நீங்கள் நினைத்தபடிப் பூலோகப் பிறவி எடுக்க எங்களைச் சான்றோர் இனத்தில் பிறவி செய்ய வேண்டும்.

கர்மவினைப்பயனால் எது நடக்குமோ அது நடந்தே தீரவேண்டும் என்று இருக்கிறது. எனவே நாங்கள் பிறப்பது நடந்தே தீரவேண்டும். கலியுகத்தின் ஆரம்பத்தில் எங்கள் இன வித்துக்கள் வந்து சப்தகன்னிமார் வயிற்றில் கருவாகி பிறந்த சான்றோராகிய வாரிசில் பிறவி செய்து உமது பிள்ளைகளாய் வாழ அருள்புரிய வேண்டும். அய்யா நாராயணரே! மேலும் நாங்கள் வாழும் பிரம்ம லோகத்தில் உள்ள ஐம்பத்தைந்து ரிஷிகளும் ஒன்று சேர்ந்து அறிவு மழுங்கி போய், செய்யக்கூடாத மிக பெரிய குற்றத்தை பிரம்மாவுக்கு செய்த காரணத்தினால் கல் சிலையாக ஆகும்படி சாபம் பெற்றவர்கள். அந்த ஐம்பத்தைந்து பேர்களுக்கும் சாபவிமோசனம் கொடுத்து, ஐம்பத்தைந்து ரிஷிகளும் ஒரு தேசத்திற்கு ஒருவராக சென்று இரந்துண்டு வாழ போங்கள் என்று அனுப்பி வைத்தீர்.

அவர்கள் அப்படி அலைந்து கொண்டிருக்கும் போது அவர்களுக்கு கருணை காட்டி அன்பு பாராட்டிய நாராயணரே! அவர்கள் செய்த குற்றத்திற்காக அவர்கள் உலகம் எங்கும் அலைந்து ஆளுக்கொரு திசையில் இருக்கும் போது, எங்களையும் இந்த கலியுகத்தில் இப்போது பிறக்க வைக்க வேண்டும் என்று, பிறவி செய்தால், பிரம்ம லோகத்து ரிஷிகளாகிய நாங்கள், பலவித இனமாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகிவிடுவோமே! உயர்ந்த தன்மையோடு இருந்து, உண்மையான முடிவு எடுக்கும் நாராயணரே! இதற்கு விவரம் சொல்ல வேண்டுமென்றார் நாரத மகரிஷி. அதற்கு நாராயணர் விளக்கம் கூறுகிறார் எப்படியென்றால்,

சக்தி உள்ள ரிஷிகளே நான் சொல்வதை விழிப்போடு கவனமாய் கேளுங்கள். என்னுடையக் கருணையால் பாவ விமோசனம் பெற்ற அந்த ஐம்பத்தைந்து ரிஷிகளும் பூலோகத்தில் மனித உடல் எடுத்து பிறந்து ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு விதமாக வாழ்ந்து கொண்டிருப்பது அவர்களின் விதிப் பயனாகும். அவர்கள் எப்படிப்பட்ட விதத்தில் வாழ்வார்கள், எந்த இனத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று துல்லியமான அடையாளங்களை நான் கூறுகிறேன் கேளுங்கள் என்று கூறுகிறார். அந்த ஐம்பத்தைந்து ரிஷிகளில் ஒருவர் மான் தோலை விரித்து அதன்மேல் அமர்ந்து வானத்தைப் பார்த்தவாறு நிலையில் இருப்பார். அன்ன ஆகாரங்கள் சாப்பிடாமல் வெறும் தண்ணீரை மட்டும் தினமும் உணவாக அருந்துவான்.

கற்பக ரிஷியாய் இருக்கின்றவன் கலியிலிருந்து மீள முடியாமல் போய்விடுமே என்று இருப்பான். என்னை நினைத்து சில காலம் வாழ்ந்து விட்டு அந்த பிறவியை முடிப்பான். பிரம்மாவினுடைய சக்திகளைப் பெற்று கொண்ட வைகுண்டராகிய நான் அவதாரம் எடுத்துக் கலியுலகில் வரும்போது ,நான் கொடுத்த வரத்தை அனுபவித்து சித்திரவதை பட்டு இறப்பான். அப்போது மீண்டும் சான்றோர் இனத்திலே மீண்டும் மனிதனாக பிறவி செய்து சாதனை படைப்பேன். இதுதான் அவனுடைய அடையாளம்.

இது போன்று ஐம்பத்தைந்து ரிஷிகளும் பலவிதமான விபரீத வேலைகளை செய்து கொண்டிருப்பார்கள். ஐம்பத்தைந்து பேரும் தனித்தனியாக ஐம்பத்தைந்து விதமான உணவுகளை சாப்பிடும் முறையும், இருப்பிடங்களும் இருக்கும். எல்லோரின் செயல்களையும் தனித்தனியாக சொல்ல

வேண்டுமானால் நீண்ட நெடு நேரமாகும். இருந்தாலும் நானே நேரடியாக ரத்தின சுருக்கமாக புரிந்து கொள்ளும் விதத்தில் சொல்லுகிறேன் கேளுங்கள். அந்த ரிஷிகளில் ஒருவர் தான் நல்ல மிளகை உணவாக உண்டு நவமணிகளால் செய்த மாலையை கழுத்தில் அணிந்து கொள்வான்.

இன்னொருவன் மிளகாய் வத்தலை உணவாக உண்டு , திருநீற்றை உடலெல்லாம் பூசி கொண்டு சாமியார் போல் இருப்பான். மற்றொருவன் வெள்ளியினால் செய்யப்பட்ட தட்டுப் போட்டு அதன்மேல் தோரணையாகக் கம்பீரமாக இருப்பான். சிலர் யானைத் தோலைப் போர்த்திக் கொண்டு உடலை அசைய உழைத்து சாப்பிடாமல் நாள்தோறும் இருந்த இடத்திலே இருப்பார்கள்.

ஒரு சிலர் வனத்திற்குச் சென்று சித்தர்களைப் போல் வாழ்ந்து கண் இமை மூடாமல் திறந்த நிலையில் வைத்துக்கொண்டு இருப்பார்கள். இன்னும் சிலர் மரக்கட்டைமேல் அமர்ந்து தன்னுடைய உடம்பில் சிலந்திப்பூச்சி வருவது கூட தெரியாமல் இருப்பார்கள்.

சிலர் யோகாசன நிலையில் அமர்ந்து மூச்சை உள்ளடக்கி கொண்டு உணர்வற்ற நிலையில் இருப்பார்கள். இன்னும் சிலர் பிரண்டை கொடியையும், நல்ல மிளகு மற்றும் வெற்றிலை ஆகியவற்றை மூலிகை மருந்து போல் உண்பார்.

ஒரு சிலர் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு ஏதாவது ஒரு எண்ணம் கொண்டு தியானத்தில் அமைதியாக அமர்ந்து அசையாமல் இருப்பார்கள். சிலர் உப்பு சேர்க்காமல் கஞ்சியை ஒரு வேளை மட்டும் குடித்து கொண்டு இருப்பார்கள். சிலர் அடுப்பில் வைத்துத் தீயை உண்டாக்கி சுட்டு சாப்பிடும் உணவை சாப்பிட்டு கொண்டு திரிவார்கள்.

இன்னும் சில பேர்களின் அடையாளங்களையும் கூறுகிறேன். சிலர் மலையில் உள்ள குகைகளில் தங்கி இருப்பார்கள். மக்கள் வாழும் பூமிக்கு வர மாட்டார்கள். காட்டுவாசிகள் போல இருப்பார்கள். சிலர் கள்ளி செடியில் வடியும் பாலை வடித்து குடித்து விட்டு குனிந்த தலை நிமிராமல், எதையும் பார்க்காமல் அப்படியே இருப்பார்கள்.

சிலர் மனதை மயக்கும் போதை பொருளுக்கு அடிமையாகி இருக்கும் நிலையும் உண்டு. சிலர் ஆணவத்தால் அக்னியை எங்களால் விழுங்க முடியும். இந்த அகிலத்தையும் எங்களால் விழுங்க முடியும் என்று வீர வசனம் பேசுவார்கள். மற்றும் சிலர் விலங்குகளை போல் புல் பூண்டுகளை சாப்பிட்டுக் கொண்டுப் புலித்தோலின் மேல், அமர்ந்து தில்லை மரத்து பாலையும் குடித்து விட்டு ஊரை சுற்றி திரிவோம் வேறு எதுவும் தேவையில்லை என்ற ஆவேசமாய் கூறுவார்கள். இன்னும் பலர் புகையிலை சாறை குடித்துவிட்டு தன் நிலை மறந்து அலைவார்கள்.

மற்றும் சிலர் எங்களுக்கு பசியே வராமல் இருக்க நாங்கள் உண்ணும் காய கற்பங்களை சாப்பிட்டுவிட்டோம் என்பார்கள். சிலர் நாங்கள் மலர் படுக்கையில் தான் படுத்து உறங்குவோம். பசும்பாலைப் பசிக்கு அருந்துவோம் என்பார்கள். சிலர் வனப்பகுதியில் இருப்பிடம் அமைத்து மரங்களின் அடியில் அசையாமல் ஆடைகள் இன்றி இருப்பார்கள். இன்னும் சிலர் உடம்பில் எந்த

உடைகளையும் அணியாமல் உடல் முழுவதும் உத்திராட்ச மாலை அணிந்து மானத்தை மறைத்து கொள்வார்கள்.

சிலர் ஒரு காலை தரையில் ஊன்றி கொண்டு மற்றொரு காலை தூக்கி நின்று தவம் செய்கிறேன் பார் என்பது போல எல்லோரும் ஆளுக்கொரு விதமாக தனித்தனியாய் புதுப்புது முறைகளில் பிறர் வியக்கும் படியாக செயல்பட்டு, ஐம்பத்தைந்து பேர்களும் 55 தேசங்களில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இப்படியாக ஐம்பத்தைந்து ரிஷிகளும் ஒவ்வொரு தேசமாக சென்று வாழ்ந்து வந்தார்கள். ஐம்பத்தைந்து நாடுகளில் மேன்மை பொருந்திய நாடாக விளங்கியது சோழ நாடாகும். அத்தகைய புகழ்மிக்க சோழ நாட்டில் தான் அய்யா நாராயணர் தானே வைகுண்ட அவதாரம் புரிந்தார். நாம் வாழப்போகும் நல்ல நாடு சோழ நாடேதான்.

அந்தச் சோழ நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் மன்னனின் பெருமைகளையும் அந்த நாட்டின் செல்வ செழிப்பையும் எடுத்துரைத்தால் சொல்ல முடியாது. அவ்வளவு பெருமை வாய்ந்த அழகு தெட்சணாப்பூமி ஆகும். அந்த தெட்சணாப் பூமியிலே வருகின்ற என்னுடைய வைகுண்ட பரம்பொருளிடம், பல வேடம் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் ரிஷிகளும், சன்யாசிகளும் அவர்கள் பெற்ற சாபத்தை அங்கே தொலைத்துவிட்டு அவர்களின் தவறுகளை உணரச் செய்துச் சரண் அடைவார்கள். மீண்டும் பிறந்து தன்னுடைய மிகச்சிறந்த ஆட்சிக்கு கீழ் வருமாறுப் பணிவிடைகள் செய்வார்கள் என்று அறிந்தவர்கள் வாழிடங்களையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவாக கூறுகிறேன் கேளுங்கள்.

ஒன்றாம் சன்னாசி பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான் பழந்தமிழ் நாடாகிய கொங்கு தன் நாட்டில் சந்நியாசி வேடம் கொண்டு வாழ்ந்து வருவான். அவன் வருடம் ஒரு தடவை நான் புதுப்பிறவி எடுக்கிறேன் ,தன்னுடைய பிறவி அதிசய பிறவி என்று சொல்லி கொள்வான். ஆனால் நான்தான் உலகத்திற்கு அவதார புருஷன் என்னை கணவராக ஏற்று கொள்பவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று மக்களை ஏமாற்றி கொஞ்ச காலம் வாழ்ந்து வருவான்.

இரண்டாம் சன்னாசி சிங்கள மக்கள் வாழும் இலங்கையில் ஸ்ரீ கண்டி மாவட்டத்தில் வாழ்ந்து கடற்கரை ஓரத்தில் வளரும் புங்கமரத்தின் பாலை குடித்து கொண்டு நான் பெண்களை கண்களால் பார்க்க மாட்டேன் என்று ஆடைகள் உடைக்காமல் அமர்ந்திருப்பான்.

மூன்றாம் சன்னாசி கோரக்கர் நாட்டில் கோரக்கநாதர் வாழ்ந்த இடம் ஆகிய குருசேத்திரன் என்கிற புண்ணிய தலத்தில் இருந்து கொண்டு ஒரு கையில் சூரக்கோலும், இன்னொருக் கையில் சூலாயுதமும் ஏந்திச்சிவனை போன்று சில காலம் நானே கடவுள் அவதாரம் என்ற ஆணவத்தால் அறிவிழந்து பேசுவான். அதன்பிறகு கர்மவினை பயனால் தீராத நோய் கண்டு இறப்பான் .கொடிய குணம் கொண்ட மூன்றாம் சன்னாசி .

ஐம்பத்தைந்து பெயர்களும் அதன் தன்மைகளைப் பற்றி சுருக்கமாக கூறுகிறேன் என்று நாரத மகரிஷியிடம் கூறுகிறார் நாராயணர்.

நான்காம் சன்னாசி தன்னுடைய கண்களை கைகளால் இறுக்கமாக கட்டிப்பிடித்து கொண்டு யோக நிலையில் யோகாசனத்தில் இருப்பான். அப்படி இருப்பவன் எந்த ஆகாரங்களையும் குடிக்காமல் இருப்பான்.

ஐந்தாம் சன்யாசி பூமியில் உற்பத்தியாகும் எந்த ஆகாரங்களையும் குடிக்காமல் விரதம் என்ற நிலையில் இருப்பான். எலுமிச்சை மரத்தின் இலைகளை பறித்து அதை கைகளில் நன்கு சேர்ந்து பிசைந்து நறுமணத்தோடு தின்பான்.

ஆறாவது சன்னியாசி அவன் மலைப்பகுதியில் உள்ள கஞ்சா போன்ற போதையூட்டும் இலைகளைப் பறித்து அதன் புகையை புகைத்து கொண்டே இருப்பான். அவன் உடம்பை அசைக்க முடியாமல் இருப்பது போல் தியானத்தில் இருப்பான்.

ஏழாவது சன்னியாசி அவனுடைய இடையில் பெண்கள் உடுத்தும் சேலையைக் கட்டி மாறுவேடத்தில் உயிர்களை வதைச் செய்பவனாக காட்டில் வாழும் பட்சி பறவைகளையும், சிறு பிராணிகளையும் கொன்றுத் தின்றுக்கொண்டே இருப்பான் மாமிசங்கள் உண்பவன்.

எட்டாம் சன்னாசி இருந்த இடத்தில் அசையாமல் இருந்து கொண்டு இரு கண்களையும் மூடியபடியே தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து மாறி மாறி இறுதி மூச்சை இழுத்து விட்டு கொண்டே இருப்பான்.

ஒன்பதாம் சன்னாசி வித்தியாசமானவன். இவன் தன் வாய்க்குள் சுரந்து வருகின்ற உமிழ்நீரைக்கூட தொண்டைக்குள் விடாமல், முகமலர்ச்சியோடு வலிமையான சக்தியை பெற்றவர் போல், மலர்ந்த முகத்துடன் கண்களை உருட்டி, வீரக்கனல் பொங்கி வீச செய்வான். அவன் செயல்பாடுகளை நோக்கினால் அமைதியாக தூங்கி விழிப்பது போல கண்கள் அக்கம் பக்கம் எல்லாம் அலசி பார்த்து கொண்டே இருக்கும். தன்னை யாரும் குறை சொல்லாத படி பக்தி நிறைந்தவனாய் நடந்து கொள்வான்.

பத்தாம் சன்னாசி எதை பற்றியும் கவலைப்படாமல் பக்தி பரவசத்தோடு சாதுவை போல நடந்துக் கொள்வான். விளக்கெண்ணெய்க்கு பயன்படும் சிந்தாமணக்கு செடியின் இலைகளை பறித்து ஒவ்வொன்றாக கோர்த்து பின்னே படுக்கை அமைத்து அதில் தூங்குவான்.

பதினோராம் சன்னாசி பவள மணி மாலைகளை மாலையாக கோர்த்து கழுத்தில் போட்டுக் கொண்டே இறை நாமமாக ஏதாவது ஒரு மந்திரத்தை இடைவிடாமல் சொல்லி கொண்டே இருப்பான். அவனுக்கு பிடித்த உணவாக உளுந்தம் பயறைப் பயன்படுத்துவான். ஓயாமல் கஞ்சா போதையில் இருந்து கொண்டு, இதே கதி என்றுக் காலத்தை ஓட்டுவான்.

பன்னிரண்டாம் சன்னாசி கற்களை சேகரித்து வரிசையாக அடுக்கி அதை படுக்கையாக அமைத்து அதில் படுத்திருப்பான். பசி எடுக்கும்போது இலுப்பை மரத்தின் இலைகளை பறித்து அதில் இருந்து ஒரு பிடி அளவு சாறு பிழிந்து அதையே குடிப்பான்.

பதிமூன்றாம் சன்னாசி எல்லோரையும்விட வித்தியாசமான முறையில் செயல்படுகின்றவன். பாதாம் ,பிஸ்தா, முந்திரி, பருப்பு வகைகளை சேர்த்து பிசைந்து தினமும் உணவாக சாப்பிடுவான். கோவை செடியின் இலைகளையும், கொடுப்பை கீரையும் பறித்து மூலிகை மருந்து என்றும், நோய் தீர்க்கும் மருந்து என்று மக்களுக்கு சாப்பிடுவதற்கு கொடுத்து, தொண்டு செய்யும் விதத்தில் தினமும் கொடுத்து வந்தான்.

பதிநான்காம் சன்னியாசி இறைவனை போற்றி கொண்டே இருப்பது போல ஒரு மூல மந்திரத்தை சொல்லித் தியானத்தில் இருப்பான். கை ரேகைகளை பார்த்து தெளிவான முறையில் ஊக்கத்தோடு உறுதிபட குறியும் சொல்லுவான்.

பதினைந்தாம் சன்னியாசியானவன், ராசிகற்களால் உருவாக்கப்பட்ட மாலையை அவன் கழுத்தில் அணிந்துகொண்டு நடுப்பகல் நேரம் மட்டும் உணவருந்தி மல்லாந்து படுத்து தூங்கி கொண்டே இருப்பான். சுயநினைவை இழந்து அவன் மானத்தை மறைக்கும் உடைகளை கூட அணியாமல் இருப்பான்.

பதினாறாம் சன்னியாசியானவன் வெப்பத்தை தணிக்கக் கூடிய புளித்துப் போனக் கள்ளாகிய மதுவைக் குடித்துக் கொண்டு, கூத்தும் கும்மாளமும், போடுவான். மேலும் அவனுக்கு தேவையான உணவாக கள்ளிச் செடிகளையும் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை சாப்பிட்டு காட்டுவாசிகள் போல் நாடோடியாக அலைவான்.

பதினேழாம் சன்னியாசி தீவிரமான குணம் கொண்டவன். அவன் விறகு களைப் பொறுக்கி நெருப்பை வளர்த்து அதன் பக்கத்தில் அமர்ந்து குளிர் காய்வான். கண்டதை சாப்பிடுவான்.

பதினெட்டாம் சன்னியாசி கொல்ல வேலை செய்பவன். பின்னால் திரியும் அவன் மனைவியை போல நிலையில்லாமல் அங்கும், இங்கும் அலைந்து திரிவான்.

பத்தொன்பதாம் சன்யாசி பற்றி தெரியாதவர்கள் இல்லை. எல்லோரும் அறிவர். ஏனென்றால் இவன் மிகவும் பிரபலமானவர்.

இருபதாம் சன்யாசி எப்போதும் விரித்த மான் தோலில் அமர்ந்து கொண்டு நான் கவரிமான் பரம்பரை என்று வியப்புடன் வீற்றிருப்பான். இவனுக்கு அரிவாள் போல மீசை உண்டு. பார்த்ததும் வித்தியாசம் தெரியும்.

இருபத்தொன்றாம் சன்னியாசியின் அடையாளம் என்னவென்றால், அவன் நாக பாம்பின் உடலில் உள்ள எலும்புகளை எடுத்து தலையில் கிரீடம் போல அணிந்து கூக்குரலிட்டு பைத்தியம் பிடித்தவன் போல காண்போரை எல்லாம் கும்பிட்டு பைத்தியம் என்று பயப்படும் படியாக நடந்து கொள்வான்.

இருபத்திரண்டாம் சன்னியாசி, அவன் உயர்ந்த ரக மதுபானங்கள் வைத்து ஓம் என்ற மந்திரத்தை எழுதி அதில் தினமும் வணங்குவான். இதுவே அவனுடைய அடையாளம்.

இருபத்திமூன்றாம் சன்னியாசி நீண்ட தாடி மற்றும் சடையை வளர்த்து, சாமியாராக காட்சி அளிப்பான். அன்னம் படைத்து, பால் பழங்கள் வைத்து மாந்தீரிக வேத மந்திரங்களை ஓதி கொண்டிருப்பான்.

இருபத்துநான்காம் சன்னியாசி, ஓர் இடத்தில் நிலையாய் இருக்காமல் ஊர் விட்டு, ஊர் சென்று அலைந்து, இறைவனின் திருநாம மந்திரத்தை உச்சரித்து கொண்டே இருப்பான். உடல் மெலிந்த தோற்றத்தில் இருப்பான்.

இருப்தைந்தாம் சன்னியாசி மிகவும் விசித்திரமான அடையாளத்தை உடையவர். எருக்கன் செடியின் பாலை குடித்து விட்டு, பனை மரத்தின் குருத்து ஓலையால், பல வர்ணங்களில் நிறத்துடன் பாய் செய்து அதில் படுத்து உறங்குவான். பனைமரத்து பதநீரில் உருவாகி வரும் போதை ஏத்தும் மதுவான கள்ளைக்குடித்து விட்டு உப்பில்லா பண்டங்களைச் சாப்பிடுவான்.

இருபத்தாறாம் சன்னாசி புள்ளி மான் தோலை உரித்து போர்த்திக்கொண்டு கவரிமான் போல் காட்சிக் கொடுத்து புகழ்பெற விரும்புவான். தண்ணீரின் மேல் அமர்ந்த நிலையில் பல நாட்கள் கண்மூடி தியானத்தில் லயித்து இருப்பான்.

இருபத்தேழாம் சன்னியாசி உண்மையான இறை தியானத்தை செய்யமாட்டான். ஏமாற்று பேர்வழி. இதுவே அவனுடைய அடையாளம்.

இருபத்தெட்டாம் சன்னியாசி தலையில் ஒருபக்கமாக ஒதுக்கி கொண்டை போட்டு கொள்வான். அவன் கையில் ஒரு மரக்கோலை வைத்திருப்பான். இடுப்பில் எந்த துணியும் இல்லாமல் அரைகுறையாக கோவணத்தை கட்டி கொண்டு வெட்கமில்லாமல் அலைந்து திரிவான் . சூலாயுதத்தை கையில் பிடித்த வண்ணம் இருப்பான். ஓம் என்ற அட்சர எழுத்து இருக்கும். இது இருபத்தெட்டாம் சன்யாசியின் அடையாளம்.

இருபத்தி ஒன்பதாம் சன்னியாசி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக பல வேடங்களை போட்டு கொள்வான்.

முப்பதாம் சன்னியாசி மூன்று தெருக்கள் வந்து சேரும் இடம் ஆகிய முச்சந்தி பாதையை தேர்ந்தெடுத்து உடம்பெல்லாம் சிக்கு, சிரங்கு பற்றி நீர் கசிந்த நிலையில் மக்களிடம் கையேந்திய நிலையில் சந்தியில் கிடைப்பான்.

முப்பத்தொன்றாம் சன்னியாசி வாய் பேசாமல் ஊமையாக மௌனச் சாமியார் போல் சுற்றித் திரிவான். நன்றாக காது கேட்கும். ஆனால் கேட்காதது போல் செவிட்டுச்சாமியராக திரிவான்.

முப்பத்திரண்டாம் சன்னியாசி உயரமான மலை உச்சியில் பகுதியில் போய் அமர்ந்துக் கொண்டு, சிவவேடம் போட்டுக்கொண்டு ,யாம் ஆலகால விஷத்தை சாப்பிட்டோம் அதனால் நான் தான் மலை உச்சியில் இருக்கிறேன் என்பான்.

முப்பத்தி மூன்றாம் சந்நியாசி நல்லவனை போன்று இருக்கின்ற இவனைக் கண்டால் அடையாளம் தனித்தனியாக தெரியும். அவனுடைய கண்கள் பிரகாசமில்லாமல் வெளிறிப்போய் இருக்கும். அவன் தன் கழுத்தை இறுக்கியவாறு சணல் நூல்களை கட்டிக்கொண்டு காட்டுவாசிகளை போலிருப்பான். [சணல்=மலையடிவாரத்தில் வளரும் ஒருவகை கோரை புல். இது தர்ப்பைப்புல் என்றும் புகழ் பெறும். கோயில் கும்பாபிஷேகம் செய்யும்போதுத் தீர்த்தம் தெளிப்பதற்கு மறை ஓதும் பிராமணர்கள் பயன்படுத்தும் புனிதமானபுல் ஆகும்]

முப்பத்தி நான்காம் சன்னியாசி மண்டை ஓட்டில் உருவத்தை போல் செய்து, நல்ல கலைத்திறன் பெற்றவன் போல் இருப்பான்.

முப்பத்தைந்தாம் சன்னியாசி பூதம் போன்ற உருவ அமைப்பில் வயிறு பெருத்து போய் இருப்பான். தன் உடம்பைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் மேல் மூச்சு, கீழ் மூச்சுமாக தயக்கமான தளர்ச்சியுடன் நடந்துத் திரிவான். இதுவே அவனுடைய அடையாளம்.

முப்பத்தாறாம் சன்னியாசி செப்பு பட்டயத்தில் பொறிக்கப்பட வேண்டியவன். தனது முப்பத்தாறாவது சன்னியாசியின் அற்புதமான அதிசயம் என்னவென்றால், மலர்களை படுக்கையாக விரித்து அதன் மேல் பள்ளி கொண்டு இருப்பான். அதுபோல் தான் அனைத்தும் தெரிந்தவன் என்று ஆணவம் கொண்டு ஆடை அணியாமல் இருப்பான். அவன் பசிக்கு உணவாக அகத்திக் கீரையின் இலையை சாப்பிட்டு, யானை தோல் மேல் அமர்ந்து இருப்பான். இதுவே அவனுடைய அடையாளம் .

முப்பத்தேழாம் சன்னியாசி தன்னைத் தானே பெரியவன் என்று புகழ்ந்து பேசி காலத்தை வீணாக்கி மாண்டு போவான். சமையலுக்கு பயன்படுத்தும் மிளகாயை நாளொன்றுக்கு ஒரு கிலோ அளவு அறிவு இல்லாமல் சாப்பிடுவான். அதன் காரணமாய் அல்ப ஆயுளில் மரணமடைவான்.

முப்பத்தெட்டாம் சன்னியாசி, இவன் பல் தேய்த்து சுத்தம் செய்யாமலும், அகோரமான பற்களோடும் காணப்படுவான். பார்ப்பதற்கு பயங்கரமாக தென்படுவான். இவனது ஆகாரம் அகத்தி இலை ஆகும்.

முப்பத்தொன்பதாம் சன்னியாசி சாதத்தை நன்றாக குழைய வேகவைத்து அதில் பதலி பூ போட்டு கலந்து அதனை சுடச்சுட சூடு குறைவதற்கு முன்பாக சாப்பிடுவது அவன் வழக்கம்.

நாற்பதாம் சன்னியாசியானவன், அவனுடைய நாக்கில் ஒரு ஆணியை வைத்துக்கொண்டு, அதை மூக்கு வழியாக வெளியே எடுக்கும் வித்தையை காட்டுவான். சில நாட்களில் வலி ஏற்பட்டு புண் உண்டாகி சுவாசிக்க முடியாமல் முனகி கொண்டே இருப்பான்.

நாற்பத்தி ஒன்றாம் சன்னியாசி சிறுபயறை நன்றாக மாவாக்கி. அதோடு தேங்காய் பூவை சேர்த்து பக்குவமாக பிசைந்து முறுக்கு போல்

வடிவமைத்து எண்ணெயில் போட்டு வேகவைத்து உணவாக கடித்து விழுங்குவான்.

நாற்பத்தி இரண்டாம் சன்னியாசி அரை கீரையில் இருந்து கிடைக்கின்ற விதையை எடுத்து தினமும் உணவாக சாப்பிடுவான். சுரைக்காய் குடுவையை கையில் வைத்துக்கொண்டு தினமும் பண்டாரம் போல் சுற்றி திரிவான்.

நாற்பத்து மூன்றாம் சன்னியாசி நத்தை சூரி என்கிற பெயர் கொண்ட தாவரத்தின் விதை மட்டும் சாப்பிடுவான். ஒழுங்கு முறைத் தவறாது விரதத்தை கடைபிடிப்பது சொல்லி கொண்டிருப்பான்.

நாற்பத்தி நான்காம் சன்னியாசி விளங்காயின் மேல்புறம் அமைந்த கெட்டியான வெளித்தோட்டை மட்டும் சாப்பிடுவான்.

நாற்பத்தி ஐந்தாம் சன்னியாசியின் அடையாளங்களை கூறுகிறேன், இந்த நாற்பத்தி ஐந்தாம் சன்னியாசியானவன், செடியில் பூக்கும் பூக்களை பறித்து உணவாக உண்டு, பூனை சத்தம் எழுப்புவது போல் மியாவ், மியாவ் என்று அழுகுரல் போல் கூக்குரலிடுவான்.

நாற்பத்தி ஆறாவது சன்னியாசியானவன் வனத்தில் தரையில் படர்ந்து கிடக்கும் கொடியில் காய்க்கும் பழத்தை பிழிந்து அதிலுள்ள விதையை எடுத்து வைத்துக்கொண்டு நாய் சாப்பிடுவது போல் மோப்பம் பிடித்து நக்கி நக்கி தின்பான்.

நாற்பத்தி ஏழாம் சன்னியாசியானவன் எருமை மாட்டின் பாலில் கடைந்து எடுக்கும் மோரையும், சமையலுக்கு பயன்படுத்தப்படும் எள்ளில் இருந்து கிடைக்கும் நல்லெண்ணெயையும் குடித்துவிட்டு, மன எரிச்சல் ஏற்பட்டு படபடப்பு உண்டாகி வெடு வெடு என்று கோபத்தில் பேசுவான்.

நாற்பத்தி எட்டாம் சன்னியாசி மனதை மயக்கி, மயக்கத்தை கொடுக்கக்கூடிய பெண்களை மனதால் நினைத்து பார்க்க மாட்டேன் என்பான். ஆனால் இரவு நேரம் ஆனதும் தனிமையால் அவதிப்பட்டு தனக்கு துணை இல்லையே என்று, காம ஆசையில் அல்லல்பட்டு அந்த வேகத்தை அடக்க முடியாமல் அவனது கட்டுப்பாட்டையும் மீறி அவனது உடலிலிருந்து வீரியம் தானாக வெளிப்படும். இதனால் மனம் வாடிப் பேதலித்து இறை நாமத்தை உச்சரிப்பதற்கு அருகதை அற்றவனைப் போல் வாய் பேசாமல் இருப்பான்.

நாற்பத்தொன்பதாம் சன்னியாசி புகையிலையை சுருட்டி, அதை நெருப்பில் பற்ற வைத்து அதில் வெளிவரும் புகையை உறிஞ்சிக் கொண்டே இருப்பான். கைவிரல்களில் வளர்ந்திருக்கும் நகத்தை வெட்டாமல் மிக நீளமாக வளர்த்து வைத்திருப்பது அவனுடைய அடையாளமாகும்.

ஐம்பதாம் சன்னியாசி அரச மரத்தின் இலைகளின் மேல் படுத்து உறங்குவான். தண்ணீரை அதிகமாக குடித்து கொண்டு மண் தரையில் உள்ள புழுதியில், புரண்டு, புரண்டு உருழுவான்.

ஐம்பத்து ஒன்றாவது சன்னியாசி கடற்கரை சார்ந்த புனித ஸ்தலங்களுக்கும் சென்று கடலில் நீரில் நீந்தி தீர்த்தமாடி பாவத்தை போக்க புண்ணிய தீர்த்தம் ஆடுகிறேன் என்று கடற்கரை தோறும் சென்று நீராடி கொண்டு அலைவான்.

ஐம்பத்து இரண்டாம் சன்னியாசி நீலநிறமான சாயம் எடுக்க பயன்படும் அவரி செடியின் இலையில் இருந்து சாறு எடுத்து அதை குடிப்பான். ஆலமரத்தின் பலகையின் மேல் அமர்ந்து இருப்பான். இது அவனுடைய அடையாளம்.

ஐம்பத்து மூன்றாம் சன்னியாசி கடைகளில் கிடைக்கின்ற காய்ந்த சுக்கு வாங்கி இடித்து பொடியாக்கி அதன் பொடியை தினமும் சாப்பிடுவான். இது தான் அவனது உணவாகும். கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்து நானே சிவன் என்பான். அருகம்புல் மாலையை அணிந்து கொண்டு சிவனின் மகன் கணபதியும் நானே என்பான். இப்படி மாற்றி மாற்றி மாலைகளை அணிந்து ஏமாற்று வித்தை காட்டுபவன்.

ஐம்பத்து நான்காம் சன்னியாசி அசுரனை அழிக்க போகிறேன் என்ற அரக்க உருவத்தைக் ஆவடியில் வைத்து கட்டி ஆவேசத்துடன் அலைந்து ஆரவாரம் செய்வான் பிள்ளையின் தோலை உரித்து காலுக்கு செருப்பாக அணிந்து கொள்வான்.

ஐம்பத்தைந்தாம் சன்னியாசி, அவன் கண்களை அகல விரித்து எச்சரிக்கைப் பார்வையோடு காவடி ஆட்டம் ஆடிக்கொண்டு நல்வழிகளில் செல்லாமல் தீயவழியில் நடப்பான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசமாக சென்று வாழ்ந்து வந்தார்கள்.

இது போன்ற பலவிதமான பரவச செய்திகளோடு பரந்த இந்த தேசம் எல்லாம் ஐம்பத்தைந்து ரிஷிகளும் ஆளுக்கு ஒரு தேசமாக பிரிந்து அங்கு அற்புதமான அடையாளங்களுடன் திரிவார்கள். ஒரு விதமாக தனிப்பட்ட முறையில் சாமியார் என்ற அந்தஸ்தை உருவாக்கி கொண்டு உத்தமர் போல் உலகமெங்கும் சஞ்சரித்து இருந்தார்கள்.

தனக்கு சாப விமோசனம் கிடைத்து விட்டது என்று நினைத்து, மனதில் சந்தோஷம் கொண்டு உள்ள பூரிப்போடு காணப்பட்டார்கள். இப்படி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வரும் போது தான், நான் வைகுண்ட அவதாரம் எடுப்பேன். அப்போது போலி வாழ்க்கை வாழ்ந்து வரும் ஐம்பத்தைந்து ரிஷிகளையும் நான் தனித்தனியாக வரவழைப்பேன்.

ஒவ்வொருவருடைய தந்திர ஏமாற்று வித்தைகளையும் விட்டு விடும் படி சொல்வேன். மீறினால் அவர்களுடைய சாப விவரத்தை எல்லாம் எல்லோரும் அறியும்படி வெளிப்படையாக தெரியப்படுத்தி உண்மையை உணர வைத்து நான் வெற்றி கொள்வேன். பல பேர்களை உலகம் பார்க்கும்படி பலவிதமான சோதனையும், வேதனையும் கொடுத்து அவர்களை நல்வழி படுத்துவேன்.

பின்னர் ஒவ்வொருவரையும் சான்றோர்களாக பிறக்க செய்து அதில் உங்களுக்கு நிகராக நீங்கள் விரும்பியபடி பிறக்க வரம் கொடுப்பேன். பிரம்மலோக ரிஷியாக இருந்தாலும் சான்றோர் இனத்தில் பிறப்பதால் எல்லோரும் என்னுடைய பிள்ளைகளாய் இருப்பீர்கள். சான்றோர் இனமாகப் பிறந்திருக்கின்றப் பிரம்மலோக வித்தின் வழிதோன்றிய சான்றோர் இனத்தில் பிறந்து நல்ல படியாக நீதி நேர்மையோடு வாழுங்கள்.

கலியுக வாழ்க்கை என்பதால் மரணம் உண்டு. அப்படியே மரணம் வந்தாலும் உங்களுடைய உயிர் பாழாகாமல் பத்திரமாக வைத்து, மீண்டும் அதே சான்றோரின் இனத்திலே நான் பிறவி செய்வேன். கலியுகம் முடியும் போது நாராயணராகிய நான் வைகுண்டமாக வந்து உங்கள் அனைவரையும் அரவணைப்பேன். மேலும் தர்மயுகத்தில் உங்களைச் சேர்த்து மரணம் இல்லாமல் உங்களை வாழ வைப்பேன், என்று வாக்குறுதி கொடுத்து அவர்கள் எல்லோரையும் பூலோகத்தில் பிறக்கும்படி சொல்லி அனுப்பினார், இப்படியாக பிரம்ம லோகத்து ரிஷிகளை பூலோகத்தில் சான்றோரின் இனத்தில் பிறவி செய்தார் அய்யா நாராயணர்.

*******

# DAY 39

## வைகுண்டலோகத்தார் மனுப்பிறப்பு

அந்தப் பிறவி அவர்செய் தனுப்பிவைத்துச்
சொந்தப்பிறவி சிவவைகுண் டத்தோரை
வாருங்கோவென்று வரவழைத் தெம்பெருமாள்
ஏதுங்கள் ஞாயம் இயம்புமென்றார் தர்மிகளை
அப்போது தர்மியெல்லாம் அரியோ னடிவணங்கி
எப்போது மெங்களைநீர் இரட்சித்துக் கொண்டவரே
ஆண்டவை குண்டம் ஆண்டிருந்தோ மித்தனைநாள்
தாண்டவரே யினியுமது தயவி னருளாலே
என்னபடி நிச்சித்து இருக்குதோ அவ்வழியில்
வன்னத் திருமாலே வகுத்தா லதுமனதாம்
என்றுதர்மி யெல்லாம் இசைய ஆதிநாரணரும்
நன்றுபிள்ளா யுங்களுட நல்வளமை சொல்லுகிறோம்
இல்லா தெளியோர்க்கு எனைநினைந்து தர்மமிட்டுப்
பல்லுயிர்க் குன்னயிராய்ப் பார்த்தீ ரொருப்போலே
நீத நிலையை நிறுத்தி யெனைநினைந்து
சீதமாய்ப் பூமி செலுத்தியர சாண்டிருந்து
வந்தீர்கள் கூட்டோடு வைகுண்ட மானதிலே
சேர்ந்தீர்க ளாகிடினும் செய்தநன்றி தான்பார்த்து
உங்களுக்கின் னாள்வரையும் உதவிதர வில்லையல்லோ
தங்களுக்கு நன்மை தரவேணு மானாக்கால்
இன்னமொரு பிறவி என்மகவி லேபிறவும்

வன்னப் பிறவியென் மகவழியில் தான்பிறந்தால்
ஏழு யுகக்கணக்கும் யான்கேட் டுங்களுக்கு
மாளுவ தில்லாமல் மறுபிறப் புமறுத்து
நம்முடைய சொத்தும் நாடியுங் களுக்கீந்து
மும்மடங்காய்த் தர்மம் ஓங்கிவளர்ந் தேயிருப்பீர்
என்றுதர்மி தங்களுக்கு எம்பெருமா ளீதுரைக்க
அன்றந்தத் தர்மிகளில் ஐபேர்க ளேதுரைப்பார்
ஆயரே எங்களுட ஆதிநா ராயணரே
மாயரே எங்களைநீர் மறந்தெங்கே போனீர்காண்
காணாம லும்மையெங்கள் கண்கள் மிகத்தவித்து
வாணா ளயர்ந்து மறுகிநொந்து வாடினோமே
என்றுதர்ம பாண்டவர்கள் இப்படியே சொல்லிடவே
நன்றுநன் றென்று நாரா யணர்மகிழ்ந்து
முன்னமே நீங்கள் உகத்துக் குகங்கூட
என்னைவிட் டகலாது இருந்தீர்க ளென்னுயிர்போல்
ஆனதா லிப்பிறவி அய்யாநா ராயணராய்
மானமாய்த் தர்மம் வளர்ந்தோங்க எந்நாளும்
நிச்சித்து ஒன்றாய் நிலைநிறுத்தித் தற்சொரூபம்
மெச்சித்து நானினித்தான் மேல்பிறக்கப் போவதினால்
என்மகவாய் நீங்கள் ஏழி லொருவனுமாய்க்
கண்மணிபோல் நீங்கள் கலியுகத்தில் போய்ப்பிறங்கோ
என்றேதான் தர்மிகட்கு எம்பெருமா ளீதுரைக்க
அன்றேதான் தர்மி எல்லோரு மேதுரைப்பார்
தானதவஞ் செய்தல்லவோ தர்மிகள் தானாகி
மான வைகுண்ட வாசலிலே வந்திருந்தோம்
மானுவங்க ளில்லா மாளுங் கலியுகத்தில்
பேய்நீச வையகத்தில் பிறக்கப்போ வென்றீரே
நாங்கள் முன்செய்த ஞாயநடுப் போய்விடுமே
யா ங்கக் கலியனுட இருளினா லையாவே
நியாம்நடுக் கேட்டு நடுக்கம் மிகப்பிடித்து
தேயமதில் நாங்கள் செய்தமுறை தப்பிடுமே
ஆனதால் நீரும் அன்றுநடுக் கேட்கையிலே
மானமில்லை யானால் வழக்கென்ன சொல்லிடுவோம்
என்றுரைக்கத் தர்மி ஏதுரைப்பா ரெம்பெருமாள்
நன்றுநன்று பிள்ளைகளே நானதற்குச் சொல்வதுகேள்
என்மக்க ளேழும் இயல்கலியில் பட்டுழன்று
வன்மக் கலியதனால் மாறிமிகச் செய்ததெல்லாம்
நான்பொறுத் துங்களுக்காய் நானே தவசுபண்ணி
வான்சிவனுக் கேற்க வாய்த்த தவமிருந்து
மக்களேழு பேர்கள் வம்மிசங்க ளுள்ளதெல்லாம்
ஒக்கவொன்று போலே உகந்தெடுத் துண்மையுடன்
நாடாள வைப்பேன் நல்லமக்க ளேழ்வரையும்
தாடாண்மை யான சத்தியுமை தன்னாணை
நீங்களென்ன குற்றம் நிலையில்லாச் செய்தாலும்
தாங்கிப் பொறுப்பேன் தருவே னானல்லபுத்தி

உங்கள்கர்ம மெல்லாம் ஒக்கத் தொலைப்பதற்கு
மங்களமாய்ச் சிவனை வருந்தித் தவசுபண்ணி
நானுங்க ளாலே நல்ல தவசிருந்து
மானுபங்கள் கெட்ட மாகலிய னுகத்தில்
தாயும் தகப்பனையும் தான்பழித்த துற்கலியில்
பேயுங் கலிநீசப் பிறப்பைச் சோதித்தறுத்து
தாடாண்மை தர்மம் தழைக்கவைத் துங்களையும்
நாடாள வைப்பேன் நம்மாணை தப்பாது
என்றுரைக்க அய்யா எல்லோருஞ் சம்மதித்து
அன்று பிறவி அமையுமென்றா ரப்படியே
நன்மையுள்ள தர்மியெல்லாம் நல்லசான் றோர்குலத்தில்
மேன்மையோ ரெல்லாம் மேதினியி லேபிறந்தார்.

விளக்கம்:

வைகுண்ட லோகத்தார் மனுப்பிறப்பு

அய்யா நாராயணருடைய சொந்த இருப்பிடம் ஆகிய வைகுண்ட லோகத்தில் உள்ள தேவர்களை அழைத்தார். அவர்களும் அய்யா அழைப்பிற்கு மறுப்பு சொல்லாமல் வந்தார்கள். அவர்களை பார்த்து ஆதி நாராயண பரம் பொருள் முக்தி பெற்ற தர்மவான்கள் நீங்கள் பூலோகம் பிறப்பெடுக்க விரும்புகிறீர்களா? என்று கேட்டார். அப்படி திருமால் கேட்டதும், உயிர்களுக்கெல்லாம் ஆதரவு காட்டியும், உங்களுடைய அன்பு கரங்களையும், அழகு திருவடிகளையும், பணிந்து வணங்கும் வைகுண்ட லோகத்தை சார்ந்த எங்களை கைவிடாமல் பாதுகாத்து வரும் அய்யா! வைகுண்டத்தில் இவ்வளவு காலமும் நாங்கள் உம்மோடு வாழ்ந்தோம்.

கலியை தாண்டி வெற்றி வாகை சூடும் அய்யா உமது கருணையினால் எங்களுக்கு நல்லருள் புரிய வேண்டும். உமது விருப்பம் எப்படியோ அதன்படி ஆகட்டும். எங்களை எப்படி பிறவி செய்தாலும் நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று வைகுண்ட லோகத்தை சார்ந்த தர்மிகள் சம்மதித்தவுடன் ஆதிநாராயணர் என் மக்களே! நான் உங்களுடைய முற்பிறவி பலன்களையும், நீங்கள் வாழ்ந்த விதத்தையும் கூறுகிறேன் கேளுங்கள். உணவு இல்லாத ஏழை மக்களுக்கு இல்லை என்று சொல்லாமல், அன்ன ஆகாரம் கொடுத்து தர்மம் செய்தீர்கள். நல்ல மதிப்பபுடையவர்களாய், நீதி நெறிமுறைகள் தவறாது சுகபோக வாழ்வு வாழ்ந்தீர்கள்.

எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் ஒன்றுபோல் தர்மத்தை அழித்து விடாமல், தர்ம சிந்தனையோடு, தர்ம நீதியுள்ள மக்களாய் என்னை மறவாது இருந்தீர்கள். பாவமே செய்யாமல் முக்தி அடைந்தவர்கள், முக்தியடைந்த அதே நிலையோடு என்னிடம் வந்தீர்கள். நீங்கள் நடந்து கொண்ட நல்லச் செயல்களுக்கு நான் ஒரு பலனும் உங்களுக்கு செய்யவில்லை. தனிப்பட்ட சலுகைகளும் தரவில்லை அல்லவா? எனவே உங்களுக்கு நான் உயர்வான நிலையை தர வேண்டும். அப்படி நான் தருவதற்கு நீங்கள் எல்லோரும் ஒருமுறை பூலோகத்தில் பிறக்க வேண்டும்.

அதுவும் என்னுடைய சான்றோரின் இனத்தில் எனது வழி வந்த தங்க திருமேனியை கொண்ட சப்த கன்னிமார்கள் பெற்ற சான்றோர் இனத்தில் பிறக்க வேண்டும். பிறந்தால் நான் ஏழு யுகங்களாக உள்ள நன்மை தீமைகளைக் கேட்டு உங்களுக்கு நடுதீர்ப்பு வழங்குவேன். அப்போது என்னுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு மரணம் இல்லாத வாழ்க்கையை கொடுப்பேன். மறுபிறவி கிடையாது. இந்த பதினான்கு லோகத்தில் உள்ள சொத்து சுகம், செல்வம் ஆகிய அத்தனையும் தந்துவிடுவேன். நீங்கள் செய்த தர்மத்தை விட மூன்று மடங்கு அதிகமானச் சிறப்புகளோடு மேல் ஓங்கி வளர்ந்து வாழ்வீர்கள். இவ்வாறு தர்மவான்கள் ஆன வைகுண்டலோகத்தாரை நாராயணர் வாழ்த்தி ஆசி வழங்கினார்.

அப்போது அந்த தர்மிகளான வைகுண்டலோகத்தாரோடு பஞ்சபாண்டவர்களாகிய ஐந்து பேரும் உடன் இருந்தார்கள். அவர்கள் நாராயணரை பார்த்து பெருமாளே! அகிலாண்ட நாயகனே! வைகுண்ட லோகத்தின் அதிபதியே! ஆதி நாராயண பரம்பொருளே! மாயப் பெருமானே! எங்களோடு இருந்து எங்களை கைவிடாமல் காத்தவரே! இத்தனை காலமும் நீர் எங்களை மறந்து எங்கே சென்றீர். உம்மை காணாமல் வருந்தி தவித்து போய் விட்டோம். வைகுண்டம் ஏகிய நாள் முதலாய் உம்மை காணாமல் பதறி ஏங்கினோம். உம்மையே எண்ணி எண்ணி மனமுருகி தவித்தோம். சந்தோஷம் இல்லாமல் வேதனையில் சோர்வடைந்து துவண்டு போனோம். துவாபர யுகம் முடித்து வைகுண்டம் அடைந்த தர்மவான்களாகியப் பஞ்ச பாண்டவர்கள் வருத்தம் மிக கொண்டு அவரிடம் கூறி வணங்கினார்கள்.

அதைக் கண்ட திருமால் மிகவும் ஆனந்தம் அடைந்தவராக நீங்கள் எல்லோரும் இதற்கு முன்னால் என் கூடவே தான் இருந்தீர்கள். வைகுண்டவாசியாக வாழ்ந்து இன்பம் கண்டதால் அதை நீங்கள் புரியாமல் இருந்தீர்கள். நடந்து முடிந்த ஆறு யுகங்களிலும் யுகத்திற்கு, யுகம் என்னோடு தான் வாழ்ந்து வந்தீர்கள். என் கூடவே விலகாமல் இருந்து உறுதுணையாக என் உயிர் போல் தொடர்ந்து வந்தீர்கள். எனக்கு தெரிந்த உண்மையை நீங்கள் அறியவில்லை. அதனால் தான் அப்படி வாடி வருந்தினீர்கள். கவலைப்பட வேண்டாம். இந்த ஏழாவது யுகமாகிய கலியுகத்தில் வைகுண்டமாக அவதாரம் எடுக்க வேண்டும்.

இந்த கலியை அழிக்க வேண்டும் என்றால் அது மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியான வைகுண்ட அவதாரத்தால் மட்டும் தான் முடியும். எனவே நான் வைகுண்டமாக பூவுலகில் அவதரிக்க இருப்பதால், அங்கேயும் நீங்கள் என்னோடு இருக்கவே அனைவரையும் பூலோகத்தில் மனித பிறப்பு எடுக்க செய்கிறேன். என்னோடு தான் நீங்களும், சான்றோர் வழியில் என் மக்களாக பிறந்து நல் வாழ்வு வாழ்வீர்கள். உங்களால்தான் சமத்துவ சமுதாயம் உருவாகி கலியை அழிப்பதற்கு எனக்கு எளிதான வழிப் பிறக்கும். எனவே நீங்கள் பூவுலகில் சான்றோர் வழியில் போய் பிறங்கள் என்று பஞ்ச பாண்டவர்களை சமாதானம் ஆக்கினார்.

இனிமேல் எல்லோரும் பூலோகத்தில் தன்மானம் உடையவர்களாக தர்ம சிந்தனையோடு வளர்ச்சி அடைய வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு

தர்ம செயல்களை செய்யவும் தீர்மானித்து, அதை நிலையாய் நிலைத்து நிற்கும்படி செய்வது தானமும் தர்மமும் தான். உலகில் சிறந்தது தானம் தர்மம் தான் என்பதை வெளிப்படுத்த, நான் இனி பூலோகப் பிறப்பு எடுக்கப் போகின்ற காரணத்தினால் என்னுடைய பிள்ளைகளாய் நீங்கள் எல்லோரும் வைகுண்ட லோகத்தில் மானிடப் பிறவி எடுத்து என் பிள்ளைகளாய், கலியுகத்தில் இருக்கின்ற சான்றோர் இனத்தில் எல்லோரும் போய் பிறவி எடுங்கள் என்று தர்மவாதிகளான பஞ்ச பாண்டவர்களுக்கு அறிவுரை கூறி நாராயணர் அனுமதி வழங்கினார்.

திருமாலின் திருவாய் மொழிகளை கேட்ட தர்மிகள் அனைவரும் நாராயணரை பார்த்து அய்யா நாங்கள் எல்லோரும் தான தர்மங்கள் எல்லாம் தாராளமாக செய்து தரம் உயர்ந்த படியால் தர்மவான்கள் ஆனோம். புண்ணியவான்களாக தன்மானத்தோடு வாழ்ந்த காரணத்தினால் புனிதமான வைகுண்ட லோகத்திற்கு வந்து சேர்ந்தோம். ஆனால் இப்போது மானம், மரியாதை, மனிதத்தன்மை, ஒழுக்க நெறிகள் இவையெல்லாம் அழிந்து கொண்டு இருக்கின்ற கலியுகத்தில் பேராசை பிடித்து அலைந்து திரியும் கலிநீசர்கள் வாழ்கின்ற இடத்தில் எங்களை பிறக்க சொல்கின்றீர்களே அய்யா! என்றனர்.

மேலும் நாங்கள் கலியுகத்தில் பிறந்தால், முன் யுகங்களில் செய்த புண்ணியத்தின் புனிதத் தன்மை எல்லாம் நியாயம் இல்லாமல் போய்விடுமே! கலியனுடைய மாய உலகில் நாங்கள் சென்றால் அந்த மாய இருளில் நாங்கள் எப்படி வாழ்வோம். நியாயத்தீர்ப்பு நீங்கள் சொல்லும் காலத்திலும், நீங்கள் நடு தீர்ப்பு வழங்க வரும், அந்த நேரம் வரை தர்மத்தை எப்படி பாதுகாப்போம் பகவானே! இதுவரை சம்பாதித்து வைத்த புண்ணியங்கள் எல்லாம் முறை தவறி போய்விடுமே!

அய்யா நீர் கலியுக மக்களிடம் நடுதீர்ப்பு வழங்கி கணக்கு கேட்கும் போது எல்லாத்தன்மானங்களும் எங்களை விட்டு போய்விடும். எப்படி நாங்கள் புண்ணியம் செய்து வைத்த கணக்கை சொல்லமுடியும். கலியுகத்தில் தர்மங்களை சரியாக செய்ய முடியாதே என்று தர்மிகள் சொன்னவுடன், நாராயணர் கூறுவார், தர்மிகளே நீங்கள் சரியாகத்தான் சொன்னீர்கள். இதற்கு நான் பதில் கூறுகிறேன் கேளுங்கள்.

“நீங்கள் என்னக் குற்றம் நிலையில்லாச் செய்தாலும்
தாங்கிப் பொறுப்பேன் தருவேன் நான் நல்லப்புத்தி”

நீங்கள் கொடுமையான கலிக்குள் சிக்கி, மானம், மரியாதை, மனித தன்மை எல்லாம் இழந்து போனாலும், என்னுடைய பிள்ளைகளுக்காக நான் பொறுத்து கொண்டு உங்களை அதில் இருந்து மீட்டு கொள்வேன். உங்களுக்கு ஏற்ற முறையில் உங்களை வாழ வைக்க நானே தவம் இருந்து உங்களை பாது காப்பேன்.

என்னுடைய வம்சாவளியில் வந்து பிறந்த சான்றோர்கள் எல்லோரையும் எந்த பாகுபாடும் இல்லாமல் சரி சமமான அந்தஸ்துடன் நான் ஏற்று நிச்சயமாக தர்மயுக பூமியாகிய துவரயம் பதியில் உங்களை வாழவைப்பேன். தெய்வத்தின் பிள்ளையாக சான்றோர் என்கிற உயர்ந்த நிலையோடு சாகாமல் என்றும் வாழ செய்வேன். இது சக்தியாக என் தங்கை மேல் ஆணையிட்டு கூறுகிறேன். வேறு வழி இல்லாமல் நீங்கள் கலியுகத்தில் குற்றங்கள் செய்கின்ற பொழுது , நானும் வேறு வழியில்லாமல் பொறுமையோடு பொறுத்து கொண்டு, உங்களுக்கு நல்வாழ்வு வாழ ஞான அறிவையும் தருவேன்.

நீங்கள் ஏழுயுகமாக வாழ்ந்த முன் பிறவியின் ஊழ் வினைகள் எல்லாம் முற்றிலும் முறியடித்து முழுமை நிலை பெற்று மங்களமாய் மரணம் இல்லாமல் வாழ வைக்க நானே சிவனை நோக்கி தவம் செய்து வேண்டிடுவேன். உங்களை கைவிடாமல் காப்பாற்றுவதற்காக கடுந்தவம் செய்து கைலாயநாதனுடன் கலந்து பேசி உங்களை காப்பாற்ற கடும் தவம் செய்து கலியிலிருந்து உங்களை மீட்டிடுவேன். எத்தனை துன்பமானாலும், எவ்வளவு கஷ்டம் ஆனாலும் நான் சகித்து கொள்வேன். ஒன்றைப் பெற வேண்டுமானால் ஒன்றை இழக்கவேண்டும். இனிமையான பழத்தை எட்டிப்பிடிக்க வேண்டும் என்றால் ஒரு கிளையை உடைக்கத்தான் வேண்டும் அது போல என் மக்களை காப்பாற்ற நானே கடுந்தவம் செய்ய வேண்டும் என்றார் அய்யா நாராயணர்.

கலியின் ஆட்சியில் மானம், மரியாதை, மனித நேயமெல்லாம் சீரழிக்கப்பட்டு, நீதி மாறி மறைந்து போய்விட்டது. மகா கொடிய கலியனவன் ஈன்றெடுத்த தாய் தந்தையரையும், அவன் பணியாளர்களைப் போல் பணி செய்து பணிய வைத்தான். பேய் குணம் கொண்ட நீசன் பேராசையோடு மற்றவர்களை பேதலிக்க செய்யும் செயல்களையும் செய்து வந்ததால் அவன் கொடுமைகளையும் அழிப்பேன்.

கலியுக பிறப்பை நடு தீர்ப்பு மூலம் அடியோடு ஒழித்து தரணி போற்றும் மக்களாக்கி என்னுடைய தயவால் தாராள மனதோடு வாழவைப்பேன். நாட்டு மக்கள் அனைவரையும் நாடாளும் படி வைப்பேன். இது பொய்யாகாது. சத்தியம் என்றார். இவ்வாறு நாராயணர் தன் மேல் ஆணையிட்டு உறுதி செய்த பிறகு நம்பிக்கையோடு தர்மவான்கள் அனைவரும் ஆவலோடு பூலோகத்தில் பிறவி எடுக்க சம்மதம் தெரிவித்தார்கள்.

இவ்வாறு வைகுண்ட பெருமாளுக்கு தொண்டு செய்தவர்கள் எல்லோரும் திருமாலுக்கு பிள்ளைகளாக சான்றோர் இனத்தில் பிறவி எடுக்க பூலோகம் சென்றார்கள். மிக உயர்ந்த உலகத்தில் மிகவும் உயர்ந்தவர்களாய் உயிர் வாழ்ந்தவர்கள் எல்லோரும் பூலோகத்தில் பிறவி எடுத்தார்கள்.

********அய்யா உண்டு*******